Registered as a News Paper in Sri lanka
விலை : ரூபா 10 .00
தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 09 வெள்ளிக்கிழமை (25.07.2014) பக்கங்கள் 20 ஓசை – 297

## கடமையை செய்ய துப்பாக்கிகள் வேண்டும்

### மதுவரி அதிகாரிகள் கோரிக்கை

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மதுவரித் திணைக்கள அலுவலர்களின் பாதுகாப்புக்கு, ஆயுதங்கள் தேவையென மதுவரித் திணைக்கள தலைமை அலுவலகத்திடம் கோரிக்கையை முன்வைத்துள்ளதாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மதுவரித் திணைக்களத்தினர் நேற்று தெரிவித்தனர்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு ஒரு மதுவரித் திணைக்கள அலுவலகம் மட்டும் உள்ளது. இந்நிலையில், இரண்டு மாவட்டங்களிலும் நிலவும் குற்றச் செயல்கள் தொடர்பில் மதுவரித் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கும் போது, அச்சுறுத்தல்களிற்கு உள்ளாகும் நிலைகள் ஏற்படுகின்றன.

அத்துடன், மதுவரித் திணைக்களத்தினரின் நடவடிக்கையின் போது பொலிஸாரினையும் அழைத்துச் செல்ல முடியாத நிலையிருக்கின்றது. இதனால், அலுவலர்

(19) ஆம் பக்கம் பார்க்க

## வடகடல் நிறுவனத்தின் உற்பத்தியை அதிகரிக்க ஏற்பாடு

வடகடல் நிறுவனத்தின் தொழிற்துறைசார்ந்த நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் திறைசேரியூடாக முன்னெடுக்கப்படுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடகடல் நிறுவனத்தின கீழான

(19) ஆம் பக்கம் பார்க்க



# சர்வதேச தரத்துடன் தொடர்கிறது ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை

### விசாரணை அமர்விலும் சர்வதேச நிபுணர்கள்



(கொழும்பு)

யுத்த காலத்தில் காணாமற் போனவர்கள் தொடர்பான விசாரணைகள் அனைத்தும் இனிசர்வதேச தரத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இதன் ஒருகட்டமாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட சர்வதேச நிபுணர்கள் இந்த ஆணைகுழுவின் விசாரணை அமர்வுகளில் நேரடியாக பங்கு கொள்ளவுள்ளனர். என்று ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம தெரிவித்துள்ளார்.

இலங்கை மனித உரிமை விவகாரம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைப் பேரவை நடத்தும் விசாரணையை விஞ்சும் வகையில் எமது குழுவின் விசாரணைகள் அமையும். இவ்வாறு காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம தெரிவித்தார்.

காணாமற் போனோர் தொடர்பாக விசாரிக்கும் ஆணைக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள ஆணையானது யுத்த காலத்தில் சர்வதேச மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதா என்பதனை விசாரிக்கும் வகையில் விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் விரிவுபடுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் கொழும்பு தமிழ் நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேகச் செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எமது குழு ஐ.நா.மனித உரிமைப் பேரவையின் விசாரணையை விட சுயாதீனமானதும் நம்பகத்தன்மை வாய்ந்ததுமான விசாரணையை எமது நாட்டில் உள்ளக ரீதியில் நடத்தி அறிக்கையை வெளியிடும். இது விரிவுபட்டதாக அமையும் என்றும் அவர் தெரிவித்தார்.

இது நேருக்கு நேர் விசாரணையாகும். எனவே எமது உள்ளக விசாரணை சுயாதீனமாகவும் நம்பகத்தன்மை மிக்கதாகவும் அமையும். இந்த விசாரணை செயற்பாட்டில் புலம் பெயர்ந்தவர்களும் சாட்சியங்களை

(19) ஆம் பக்கம் பார்க்க

## கீரிமலையில் நாளை பிதிர்கடன் செய்ய ஏற்பாடு

ஆடி அமாவாசை தினத்தில் பிதிர்க்கடன் நிறைவேற்றவரும் பொதுமக்களின் நலன்கருதி அனைத்து ஏற்பாடுகளும் கீரிமலையில் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆடி அமாவாசை நாளை சனிக்கிழமை அனுஷ்டிக்கப்பட

(19) ஆம் பக்கம் பார்க்க

## பொலிஸ் நிலையங்களுக்கு எதிராக ஆணைக்குழுவில் முறைப்பாடு

வடமாகாண பொலிஸ் நிலையங்களுக்கு எதிராக 12 முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் வடமாகாண பணிப்பாளர் தியாகராஜா நேற்று தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதம் முதல் யூலை மாதம் வரையான காலப் பகுதியில் பொது மக்களினால் குறித்த 12 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

பொது மக்களினால் பொலிஸ நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளுக்கு பொலிஸ் நிலையங்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளாத காரணத்தினால், தேசிய ஆணைக

(19) ஆம் பக்கம் பார்க்க

## அல்ஜீரிய விமானம் மாயம் சர்ச்சை கிளப்பும் தகவல்கள்

நடுவானில் பறந்து கொண்டிருந்த அல்ஜீரிய பயணிகள் விமானம் ஒன்று திடீரென நேற்று மதியத்துக்குப்பின்னர் தொடர்பு துண்டிக்கப்பட்டு காணாமல் போனது.

இச் சம்பவம் தொடர்பாக உலகில் உள்ள பல்வேறு செய்தி ஊடகங்கள் வெவ்வேறான மாறுபட்ட தகவல்களை வெளியிட்டு பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளன.

அல்ஜீரியாவின் தேசிய விமான நிறுவனமான ஏர் அல்ஜெரி, மேற்கு ஆபிரிக்காவில் உள்ள புர்கினா ஃபாஸோவிலிருந்து கிளம்பிய தன் விமானம் ஒன்றுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளது.

ஓவுவாககடகோவிருந்து கிளம்பிய 50 நிமிடங்களில் தொடர்பு துண்டிக்கப்பட்டதாக விமான நிறுவனத்தை மேற்கோள் காட்டி அல்ஜீரியாவின் அரசு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.


இந்த விமானம் அல்ஜியர் சிற்குச் சென்று கொண்டிருந்தது.

ஏ.எச்.5017 என்ற இந்த விமானத்தில் 110 பயணிகளும் 6 ஊழியர்களும் இருந்தார்கள் என

(19) ஆம் பக்கம் பார்க்க

## பளையில் இருந்து பயணித்த ரயில் வானுடன் மோதி விபத்து

### எட்டுப்பேர் படுகாயம்



பளையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயில் தலங்கபத்த என்ற இடத்தில் வீதியைக் கடக்க முற்பட்ட வான் மற்றும் முச்சக் கரவண்டி என்பனவற்றை மோதித்தள்ளியது. இதனால் அந்த வாகனங்களில் பயணித்த 8 பேர் படுகாயமடைந்து ராகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து நேற்று நண்பகல் இடம்பெற்றுள்ளது.

(19) ஆம் பக்கம் பார்க்க

## மனிதவள அபிவிருத்திச் சுட்டி இலங்கை 73 ஆம் இடத்தில்

உலகளாவிய மனித அபிவிருத்திச் சுட்டியில் இலங்கை 73ஆம இடத்தில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித அபிவிருத்திச் சுட்டியில் இலங்கை 73ஆம் இடத்தை வகித்து வருவதாக அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. 2014ஆம் ஆண்டுக்கான பட்டியலில் இந்த விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

தென் ஆசிய நாடுகளில் இலங்கை முன்னணி வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. ஏனைய நாடுகள் பின்னிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித அபிவிருத்திச் சுட்டியில் இந்தியா 135ஆம் இடத்தை வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆயுட்காலம், கல்வி மற்றும் வருமானம் போன்ற பல்வேறு காரணிகளின் அடிப்படையில் இந்த சுட்டி கண்காணிக்கப்படுகின்றது.

மனித அபிவிருத்திச் சுட்டியில் நோர்வே முதனிலை வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளே ➔ தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை கலைப்பீடம்

## பல்கலைக்கழக அனுமதி-2013/2014

**மொழி பெயர்ப்புக் கற்கை நெறிக்கான தகுதிகாண் பரீட்சை**

**(03.08.2014 காலை 9.00 am-12.00 pm)**

மேற்படி பரீட்சை 03.08.2014 ஆம் திகதி நடைபெறும். கீழ்க்கண்டவாறு பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

| பரீட்சை நடைபெறும் இடம் | | பரீட்சார்த்திகளின் வதிவிடமாவட்டம் |
|---|---|---|
| 1. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (திருநெல்வேலி) | | யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் |
| 2. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகம் (வவுனியா) | வியாபார கற்கைகள் பீடம் வவுனியா வளாகம் மன்னார் வீதி, பம்மை மடு வவுனியா. | வவுனியா, குருநாகல், அநுராதபுரம் |
| | கலையரங்கம் வவுனியா வளாகம் பூங்கா வீதி வவுனியா | சிலாபம், கொழும்பு, காலி, கம்பஹா, களுத்துறை, கண்டி, கேகாலை, இரத்தினபுரி |
| | விரிவுரை மண்டபம், பிரயோக விஞ்ஞான பீடம், வவுனியா வளாகம், குருமன் காடு, வவுனியா. | மாத்தளை, மாத்தறை, நுவரேலியா, பொலநறுவை |
| | விரிவுரை மண்டபம்-05 பிரியோக விஞ்ஞானபீடம், வவுனியா வளாகம் வவுனியா. | புத்தளம் |
| 3. மட்டக்களப்பு | சுவாமி விபுலானந்தா அழகியற்கற்கை நிறுவகம் | திருகோணமலை, அம்பாறை பதுளை, மொனராகலை |
| | கிழக்குப் பல்கலைக் கழகம் | மட்டக்களப்பு |

மாணவர்களுக்கான பரீட்சை மண்டப விபரங்கள் அனுமதி அட்டையில் குறிப்பிடப்பட்டு 3 ஆம் திகதி நடைபெறும் பரீட்சைக்கு தபாலில் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன.

மேலதிக தகவல்களுக்கு கீழ்க்கண்ட தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்

மின்னஞ்சல்- uj.registrar@gmail.com
தொலைபேசி இல-0212226714

பதிவாளர்
யாழ்பல்கலைக்கழகம்

(C/3751)

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2548 திகதி 23-07-2014

ஆங்கில எழுத்து: B

வெற்றி எண்கள்: **42 51 60 68**

போனஸ் இல: **21**

ஜக்பொட் பரிசு ரூ.**10,561,500/-** வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 230850 | 20/- | 4,617,000/- |
| 2 இல | 16414 | 100/- | 1,641,400/- |
| 3 இல | 342 | 1,000/- | 342,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9418 | 40/- | 376,720/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 692 | 1,000/- | 692,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 19 | 10,000/- | 190,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 10,561,500/- | - |
| 1 இல + போனஸ் இல | 11067 | 100/- | 1,106,700/- |
| 2 இல + போனஸ் இல | 524 | 500/- | 262,000/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 416 | 200/- | 83,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 24 | 1,500/- | 36,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 269772 | | 10,847,020/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2014.07.26 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
**ரூ. 11,192,125/-**

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை.
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3739)



யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட ஈச்சமோட்டை வீதியின் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இரவுவேளைகளில் இடம்பெறும் காப்பெற் இடும் பணிகளை யாழ்.மாநகர சபை முன்னாள் உதவி மேயர் றீகன் பார்வையிடுவதைக் காணலாம்.

# வடமாகாண பாடசாலைகளுக்கு

# 1242 மேலதிக ஆசிரியர்களுக்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்துக்கான மேலதிக ஆசிரியர் ஆளணிக்கான அனுமதி, முகாமைத்துவ சேவை திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளது. முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டு கொழும்பில் கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற கல்வி ஆளணி தொடர்பான கலந்துரையாடலில் முகாமைத்துவ சேவை பணிப்பாளர் கருணாரட்ணா வடமாகாண பிரதம செயலாளர் ஆர்.விஜயலட்சுமி வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் தொண்டர் ஆசிரியராக இருந்து ஆசிரியராக இருந்து ஆசிரிய உதவியாளராக நியமனம் பெற்று தற்பொழுது பாடசாலையி[illegible] கடமையாற்றிவரும் 1049 பேருக்கும் இவ்வாண்டு கல்வியல் கல்லூரியிலிருந்து வெளியேறி வடமாகாண பாடசாலைகளுக்கு நியமனம் வழங்கப்பட்ட 190 பேருக்கும் மொத்தமாக 1242 பேருக்கும் மேலதிக ஆளணிகளுக்கான அனுமதி, முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது என வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணி வரை இளவாலை, மாதகல், பண்டத்தரிப்பு, பண்ணாகம், சுழிபுரம், வடலிய டைப்பு, இடும்பன், தொல்புரம், சில்லாலை, சாந்தை, சுன்னாகம், கந்தரோடை, மல்லாகம், கல்லாரை, ஏழாலை, அளவெட்டி, தெல்லிப் பழை, பன்னாலை, சிறுவிளான், தலங்காவில், திருநெல்வேலி, பரமேஸ்வரா சந்தி, கந்தர்மடம், இலுப்பையடி, ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதியின் ஒரு பகுதி, பருத்தித்துறை வீதியின் ஒரு பகுதி, விஞ்ஞானபீடப் பகுதி, பழம் வீதி, வைமன் வீதி, நாவலர் வீதியில் கைலாசபிள்ளையார் கோவிலிலிருந்து அம்பலவாணர் வீதி வரை, இராசாவின் தோட்டம், சுண்டுக்குளி, கோவில் வீதி, ஆஸ்பத்திரி வீதியில் மாட்டின் வீதி சந்தியில் இருந்து ஏ9 வீதி வரை, தீவகப்பிரதேசம், காரைநகர் பிரதேசம் ஆகிய இடங்களிலும்

29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை பளை, எழுதுமடடுவாள் ஆசைப்பிள்ளைஏற்றம், படித்த மகளிர் குடியேற்றத்திட்டம், கரம்பகம், முகமாலை ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

# பதிவுசெய்யக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணம் தவிர்ந்த வேறு மாகாணங்களுக்கு பட்டதாரி ஆசிரியர் நியமனத்தை விரும்புகின்ற பல்கலைக்கழக பட்டதாரிகள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்பாக மாவட்டச் செயலகத்தில் (அறை இல. 42) அமைந்துள்ள யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர் அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

பதிவுகளை மேற்கொள்ளும்பொழுது சுய விபரக்கோவை , பட்டச் சான்றிதழ், விருப்புரிமைக் கடிதம் ஆகிய ஆவணங்களின் பிரதிகளையும கொண்டுவருதல் வேண்டும்.

# கர்நாடக இசைவிருந்து

(யாழ்ப்பாணம்)

அறிமுக இளம் கலைஞர் தேனுகா கருணாகரனின் "கர்நாடக இசை விருந்து' நல்லூர் சட்டநாதர் வீதியிலுள்ளீ இளம் கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் நாளை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.


## டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலி[illegible]தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.
(C/3395)

## வேலைவாய்ப்பு

திறமைக்கேற்ற வேலை டொபி, ஐஸ்கிறீம், கேக், பிஸ்கட், புத்தகம், சொக்லேட் ஆகிய தொழிற்சாலைகளில் பெக்கிங், ஸ்டோர்ஸ், மேற்பார்வையாளர், சேல்ஸ்ரெப் போன்ற பிரிவுக்கு 17-55 வயதான ஆண், பெண் 20,000/= - 38,000/= வரை சம்பளம், சாப் பாடு, தங்குமிடம், O/T, போனஸ் வருகின்ற தினமே குழுக்களாக சேர்த்துக்கொள்ளப்படுவர்.

தொ.பே. 0775964299

விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாது காப்பாளர், பெக்கிங் 18 - 55 வயது வரையான ஆண், பெண் தேவை. சம்பளம் 18,000- 30,000 வரை. தங்குமிட, உணவு, பயிற்சியும் வழங்கப்ப டும். வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள்.
0710854068 (C/3752)

# மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித்திட்டம் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் அமுல்

(பச்சிலைப்பள்ளி)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக் குட்பட்ட பிரதேசத்தில் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி திட்டம் முன்னகர்த்தப் படவுள்ளது.

பளை பிரதேச செயலகமும் பளை பிரதேச சபைகளும் இணைந்த வகையில் கிராமத்திற்கு ஓர் திட்டம் என்ற வகையில் 18 கிராமங்களுக்கு 18 பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பளை பிரதேசசபை தவிசாளர் பர்ணாந்து டொமினிக் அன்ரன் தெரிவித்துள்ளார்.

மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி திட்டம் தொடர்பாக தவிசாளர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் பெரும்பாலான உள்ளூராட்சி சபைகள் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டத்தினை முடிவுறுத்தியுள்ளன.

பளை பிரதேச சபையும் - பிரதேச செயலகமும் இணைந்த வகையில் இந்த முன்னோக்கு திட்டத்தை விரைந்து நடாத்த எமது சபை அலுவலர்கள் தயாராக உள்ளனர்.


மேலும் பிரதேச செயலக கிராம அதிகாரிகள், சமுர்த்தி அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி அலுவலர்களுடன் இத்திட்டத்தின் முன்னெடுப்புக்கு உதவ பிரதேச செயலாளர் முன்வந்துள்ளார்.

எனவே எதிர்வரும் 25 ஆம் திகதி கோயில்வயல் மாசார் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இத்திட்டம் முதற்கட்டமாக காலை, மாலை என இரு அமர்வுகளாக முன்னகர்த்தப்படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து புலோப்பளை, பளைநகரம், கச்சார் வெளி, முகமாலை, இயக்கச்சி, சோரன்பற்று, முல்லையடி, புலோப்பளை மேற்கு, அரசர்கேணி, வேம்பொடுகேணி, முகாவில், தர்மக்கேணி, தம்பகாமம், அல்லிப்பளை, இத்தாவில், கிளாலி உள்ளிட்ட 18 கிராம அலுவலர் பிரிவிலும் தனித்தனியாக திட்டங்கள் முன்மொழியப்படவுள்ளன.

எனவே, இத்திட்டம் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக முன்னெடுக்கும் போது அக் கிராமத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் சமூக மட்ட பிரதிநிதிகள், ஆலயபிரதிநிதிகள், பங்குத் தந்தையர், ஓய்வூதியர்கள், சமூக நலன் விரும்பிகள், பொதுமக்கள் அரச பிரதிநிதிகள், கிராம மற்றும் சனசமூக நிலையத்தின் பிரதிநிதிகள் என பலரும் இத்திட்டத்திற்கு கூடுதல் பங்களிப்பினை வழங்கி தங்களது பிரதேச அபிவிருத்திக்கு வித்திடுமாறும், இதன் மூலம் 2014 - 2018 இற்கான நான்கு ஆண்டு திட்டமாக இவ்விடயம் முன்னிறுத்தப்படும் எனவும் பிரதேசசபைத் தவிசாளர் அறிவித்துள்ளார். (92)

# "சக்தி பீட நாதம்" சிறப்பு மலர் வெளியீடு



(சுன்னாகம்)

சுன்னாகம் வருஷப்புலம் மகாமாரி அம்பாள் தேவஸ்தான "சக்தி பீட நாதம்" கும்பாபிஷேக சிறப்பு மலர் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது. ஆலய மண்டபத்தில் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வெளியீட்டுரையை பேராசிரியர் நா.சண்முகலிங்கன் நிகழ்த்தினார்.

ஆய்வுரையை கலாநிதி ஆறு திருமுருகனும், தொகுப்புரையை வைத்திய கலாநிதி அ.ஜெயக்குமாரனும் வழங்கினர். இந் நிகழ்வில் ஆலய சிவாச்சாரியார் சிவஸ்ரீ கணேஷ சபாபதிக் குருக்கள், சிற்பக் கலைஞர் க.புருஷோத்தமன், முதுபெரும் புலவர் பண்டிதர் வை.கா.சிற்றம்பலம் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். (48)

# விபுலானந்தர் விழா

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையுடன் இணைந்து அகில இலங்கை இந்து மாமன்றம் நடாத்தும் சுவாமி விபுலானந்தர் விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.கோவில் வீதியில் அமைந்துள்ள அகில இலங்கை இந்து மாமன்ற யாழ். பணிமனையில் நடைபெறவுள்ளது.

செஞ்சொற்செல்வர் கலாநிதி.ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஆசியுரையை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழங்கவுள்ளார்.


சிறப்புப்பேருரையை மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை தலைவர் சீ.யோகேஸ்வரன் வழங்கவுள்ளார்.

தொடர்ந்து சொற்பொழிவுகளை யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன், கிழக்கு பல்கலைக் கழக முதுநிலை விரிவுரையாளர்களான கலாநிதி சிவஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள் பாலகைலாச நாதசர்மா ச.முகுந்தன் அகில இலங்கை இந்து மாமன்ற தலைவர், கந்தையா நீலகண்டன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இதேவேளை மன்றம் நடாத்தும் நீத்தார் நினைவு தின நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கீரிமலையிலுள்ள சிவபூமி மடத்தில் நடைபெறவுள்ளது.

ஆமிக்குக் காணி - 01

# 'நான் அடிக்கிற மாதிரி அடிப்பன்... நீ அழுகிற மாதிரி அழு...!'






என்ன மாதிரியெல்லாம் விளையாடுறாங்களப்பா...

போன கிழமை நடந்த உலகக் கிண்ண உதைபந்தாட்டத்தை ஆரும் நினைக்காதையுங்கோ....

அல்லது அதுக்கு முந்தி நடந்த கிரிக்கெற்றைக் கூட நினைச்சுப்போடாதேங்கோ...

இது கள்ளன் – பொலிஸ் விளையாட்டைப்போல ஒரு விளையாட்டு.

நான் அடிக்கிற மாதிரி அடிப்பன். நீ அழுகிற மாதிரி அழு எண்ட ஒரு விளையாட்டு.

இந்த விளையாட்டைப் பற்றி முந்தியும் எழுதியிருக்கிறன்.

கிறிஸ் பூதம், கழிவு ஒயில் ஊத்திறது... எண்டு ஆயிரம் விளையாட்டுகள்.

எண்டாலும் இந்த விளையாட்டு நிக்காது. இலங்கையின்ரை இனவாத அரசியலுக்கு இது உப்புப்போல. 'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே' எண்டமாதிரி, இந்த விளையாட்டில்லை எண்டால், இனவாதமும் இல்லை.

இல்லையெண்டால், ஆமிக்காரர் அடாத்தாக் காணியைப் பிடிக்கிறதுக்கு நிக்கினம். அதைச் சப்பட்டி எடுக்கப் பாக்கினம் (இதை அளந்து குடுக்கிறது நில அளவைத் திணைக்களமும் பிரதேச செயலகங்களும்). அப்பிடி அடாத்தாகப் பிடிக்கிறதுக்கோ சப்பட்டி அதை எடுக்கிறதுக்கோ விட மாட்டம் எண்டு 'வீரவேங்கைகள்' போராடுகினம்.

இப்பிடி ஒவ்வொரு இடத்திலயும் ஆமிக்காரர் காணியை அளக்க நிக்கிறதும் அதுக்கு விடமாட்டம் எண்டு 'வீரவேங்கைகள்' போராடுறதும் ஒவ்வொருநாளும் நடக்குது.

இப்ப பேப்பர்களிலயும் இணையங்களிலயும் வானொலிகளிலையும் தலைப்புச் செய்தி இதுதான்.

காணியை அளக்கிறதுக்கு வீரவேங்கைகள் விடமாட்டினம் எண்டால், பிறகேன் ஆமிக்காரர் அளக்கிறதுக்கு வெளிக்கிடவேணும். பேசாமல் இருக்கலாமே!

ஆனால், அவை அப்பிடிச் சும்மா இருக்க மாட்டினம்.

ஏனெண்டால், இது ஒரு 'செற் அப் கேம்' அல்லோ. அதுதான் **'நான் அடிக்கிற மாதிரி அடிப்பன் நீ அழுகிற மாதிரி அழு'** எண்ட விளையாட்டு.

அடுத்த தடவை நடக்கப்போற தேர்தலுக்கு இப்பவே சூடேத்திற விளையாட்டு. அந்தத் தேர்தலுக்கு வலுச்சேர்க்கிற காரியம்.

உண்மையில ஆமிக்குக் காணி வேணுமெண்டால், இந்த மாதிரி கையைக் கட்டிக்கொண்டு வந்து அளக்கிற கயிற்றையோ நாடாவையோ பிடிக்க மாட்டினம்.

இப்ப இராணுவம் வைச்சிருக்கிற காணிகளில அரசாங்கக் காணிகள் போக ஒரு குறிப்பிட்டதொகைக் காணியள் தனியாற்றைதான்.

அதைப்போல இன்னும் ஆட்களில்லாத காணிகளில காம்பைப் போட்டால்.... ஆர்வந்து தடுக்கப்போகினம்?

இதை ஆரும் ஏற்றுக்கொள்ளேலாது எண்டாலும் இதுவரையில நடந்தது இதுதானே.

அதைப்போல இந்த 'வீரவேங்கைகள்' நடத்திற போராட்டத்தாலதான் ஏதோ அளக்கிற முயற்சியும் காணியை எடுக்கிற முயற்சியும் தடுக்கப்பட்டிருக்கு எண்டு ஒரு 'பில்டப்' வேற காட்டப்படுகுது.

உண்மையில அப்பிடியொண்டுமில்லை.

நீங்கள் வடிவாக் கவனிச்சியள் எண்டால், உங்களுக்குப் பல விசயங்கள் தானாகவே விளங்கும்.

இந்தப் போராட்டத்தில நிக்கிற ஆட்கள் ஒரு பத்துப்பன்னிரண்டு தலைகள்தான். இவை அடுத்த முறை நடக்கப்போகிற உள்ளூராட்சி சபை, மாகாணசபை, நாடாளுமன்றத் தேர்தல்ல நிக்கிறதுக்கு ஆசைப்படுகிற ஆட்கள்.

இதோட இப்ப களத்தில நிக்கிற பிரதேச சபை, மாகாணசபை உறுப்பினர்களும் ஒண்டிரண்டு பேர் நிக்கினம். அவை தங்கட புறமோஷனுக்காக அப்பிடி நிக்கினம்.

மற்றப்படி மக்கள் திரண்டு பெரிய போராட்டம் நடத்திறதெண்டால்... இராணுவத்தை வடக்குக் கிழக்கில இருந்து வெளியேற்றிறதுக்குப் போராடலாமே...!

எல்லா இடங்களிலயும் சனங்களை மீள் குடியேற்றம் செய்யத்தான் வேணும் எண்டு போராடலாமே...

இனப்பிரச்சினையை இழுத்தடியாமல் நிரந்தரத்தீர்வை முன்வையுங்கோ எண்டு போராடலாமே...

இதுக்குத்தானே இவைக்கு சம்பளம் கிடைக்குது.

முழுநேர அரசியல்வாதிகள்....

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள்...

எண்டால் பிறகென்ன பகுதி நேர அரசியலும் சாட்டுக்குப் போராட்டமும்....

பேப்பரில மட்டும் செய்தி வந்தால் போதாது... நாட்டில நல்லதும் நடக்க வேணும்.

'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது' கண்டியளோ...

நீ அடிக்கிற மாதிரி அடி... நான் அழுகிற மாதிரி அழுவன்...

எப்போதும் அச்சத்தில் இருப்பதை விட ஆபத்தை ஒருமுறை சந்திப்பதே மேல்.
- டெஸ்கார்ட்டஸ்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## யாரும் கேட்கப் போவதில்லையா?

நாம் எமது கோரிக்கைகளையும் நியாயங்களையும் முழுக்க முழுக்க உண்மைகளின் அடிப்படையில்தான் கட்டியெழுப்பிக் கொள்கிறோமா என்று கேட்டுக் கொள்ள வேண்டியிருக்கிறது.

நமக்குத் தேவையான, இந்த நாட்டில் சாத்தியமாகக் கூடிய தீர்வு இதுதான் என்று எதையும் தலைவர்கள் தான் சொல்கிறார்களில்லை, போகட்டும். மக்களாகிய நாம் சாத்தியமான ஒரு தீர்வைப் பற்றி சிந்தித்துள்ளோமா?

தன்னாட்சி, தனியுரிமை, சுயாட்சி, சுயநிர்ணயம் என்று சும்மா வார்த்தை விளையாட்டுகளே போதுமென்றிருக்கிறோமா? 13வது திருத்தத்தைத் தவிர்த்தொரு தீர்வைச் சொல்லுவதற்கு – இந்தத் தலைவர்கள் 'அழுத்தத்தை' வேண்டி ஓடித்திரிவதாகச் சொல்லி நம்மை ஏமாற்றிக் கொண்டிருக்கும் – ஏதாவதொரு வெளிநாடு இவ்வுலகில் உள்ளதா?

இங்கு நமக்கு நடக்கக்கூடியது என்ன என்பது பற்றி விளக்கமாக எடுத்துக் கூறும்படி எமது மக்கள் தாங்கள் வாக்குப் போட்டுத் தெரிவுசெய்த தங்கத் தலைவர்களைக் கேட்கவே மாட்டார்களா?

பிரச்சினைகளை யதார்த்தபூர்வமாகவும் நேர்மையோடும் அணுகாமல் உணர்ச்சிநிலையில் பொய்யான எழுச்சிகளைத் தோற்றுவிப்பதால்தான் எம்மை தொடர்ந்து அவலத்துள் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள் இந்தப் 'பழம் தின்ற' தலைவர்கள் என்பதை இப்போதாவது புரிந்துகொள்ள வேண்டும்.

பொய்களின் நிழலில் பதுங்கிச்சென்று நமது தேவைகளையும் உரிமைகளையும் ஒருபோதும் பெற்றுவிட முடியாது. உண்மைத்தன்மையும் உணர்ச்சிகளில் அள்ளுப்படாத நிதானமுமே நம்மைப் போகவேண்டிய ஊருக்கு கொண்டுசேர்க்கும்.

நாம், பிரச்சினைகளை மிகையாகப் புனைந்து மிகையாக ஆவேசப்பட்டு... சுவாசிப்பதும் சாப்பிடுவதும் போலப் பொய்களில் திளைப்பதும் நமக்கு இயல்பாகிப் போயிருப்பதுதான் சோகம்.

தலைவர்களது வீரவசனங்களுக்குப் பின்னால் 'சர்வதேசம் வரக் காலம் கனியுது' என்பதே உள்குத்தாக இருப்பதாக மக்கள் காலத்துக்குக் காலம் நம்ப வைக்கப்படுகிறார்கள்.

இன்றைய உலகின் போக்கை அறிந்து, அதற்குள் பொருந்தியதாய் நமது தேவையைப் புகுத்தி வெல்லவோ, வரும் ஒரு தசாப்த காலத்துக்குள்ளேனும் தீர்வொன்றைக் கண்டுவிடலாம் என்ற நம்பிக்கையை மக்களுக்குச் சொல்லவோ இவர்களால் முடியவில்லை.

இவ்வளவு கஷ்டங்களைச் சுமத்தி சமூகத்தைப் பாடுகேடாய் வீழ்த்திய பிறகும் 'வீர' ஏமாற்றை விடுவதாயில்லை இவர்கள். நடைமுறைச் சாத்தியமான தீர்வு அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்க முடியாத ராஜதந்திரத் தோல்வியை வன்முறை வசனங்களால் மறைத்துவிடப் பார்க்கிறார்கள்.

எதிர்த்தரப்பு மீதான வெறுப்பையும் ஆக்ரோசத்தையும் பகையுணர்ச்சியையும் வற்ற விடாமல் பார்த்துக் கொள்வதன் மூலம், எந்தத் தவறுகளால் சமூகத்திற்கு இந்தப் பாடழிவு உண்டானது என்பதைப் பார்க்கவோ பேசவோ விடாமல் தந்திரமாகத் தடுத்து வருகிறார்கள்.

இதுதெரிந்தும் நம்மிடையே மெத்தப் படித்தவர்கள், கலைஞர்கள், அறிஞர்கள் எனப்படுவோர் ஏன் மக்களுக்கு இதுபற்றி எச்சரிக்காமல் மௌனம் காக்கிறார்கள்?

வன்முறை வழி மூலம் மனிதர்கள் மேலான ஒரு வாழ்க்கைக்குச் செல்ல முடியும் என்பதிலுள்ள அபத்தத்தை விளக்கும் பல வரலாறுகளும், இலக்கியங்களும், மாந்தர் அவலங்களும் நமக்கு ஏற்கனவே தெரிந்திருக்கின்றன.

ஆனால் உணர்ச்சிகரமும் குழும ஆவேசமும் கொண்டதாகத் தயாரிக்கப்படும் ஒரு திரையால் அவை எளிதாக மறைக்கப்பட்டு நமது மக்கள் மீண்டும் மீண்டும் விவேகமற்ற தலைமையால் சரிந்து வீழ நேர்கிறது.

- ஆசிரியர்.

# சட்டவிரோத மதுபாவனை யாழில் 285 வழக்குகள் பதிவு

கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து கடந்தமாதம் 30ஆம் திகதி வரையான காலப்பகுதியில் யாழ்.மதுவரித்திணைக்களத்தில் எல்லைப்பரப்பில் யாழ்.மதுவரித்திணைக்களத்தினால் சட்டவிரோத மதுபாவனை சம்பந்தமாக 285வழக்குகள் யாழ்ப்பாணம் மற்றும் ஊர்காவற்றுறை நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டு அதன் மூலமாக ஐந்து இலட்சத்து 92ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணமாக நீதிமன்றங்களினால அறவிடப்பட்டதாக யாழ்.மதுவரித்திணைக்கள பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

மேலும் பியர்,கள்ளு, சாராயம போன்ற மதுபானங்கள் சட்டவிரோதமாக விற்பனை செய்யப்பட்ட சம்பவங்களில், பிடிக்கப்பட்டவர்கள் மீது இவ்வாறு வழக்குத தாக்கல் செய்யப்பட்டதாகவும் குறிப்பிட்ட அவா,தொடர்ந்து தமது திணைக்கள நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் மதுவரிவிசேட தடுப்புப்பிரிவினரால் கஞ்சா வைத்திருந்தவர்களுக்கு எதிராக இரண்டு வழக்குகள் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டு நடைபெற்றுவருவதாகவும் யாழ். மதுவரித்திணைக்களங்களை பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (பா)

# பொருட்களை அளவீடுசெய்யும் ஊழியர்கள் அசமந்த நிலையில்

## - யாழ்.ச.தொ.ச.வில் இந்த அவலம் -

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரிலுள்ள ச.தொ.ச விற்பனை நிலையத்தின் பொருட்களை அளவீடு செய்யும் ஊழியர்களின் அசமந்தப் போக்கால் அங்கு பொருட்களை கொள்வனவு செய்யச் செல்வோர் நீண்ட நேரம் காத்து நிற்க வேண்டிய அவலநிலை ஏற்படுவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

சிறாம்பியடி லேனிலுள்ள ச.தோ.ச. விற்பனை நிலையத்தில் இவ்வாறு பொருட்களை அளவீடு செய்வதில் ஊழியர்கள் இழுபறியில் ஈடுபடுகின்றனர். பொருட்கொள்வனவுக்கு வரும் பொதுமக்களை பொருட்படுத்தாது தமக்குள் ஏற்படும் இழுபறிநிலையை காட்டி நேரம் தாழ்த்துகின்றனர். இதனால் பொருட்கொள்வனவுக்கு செல்வோர் பெரும் நேர விற்பனை எதிர்நோக்க வேண்டியேற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். இது விடயத்தில் உரியவர்கள் கவனம் எடுத்து இவ்வாறாக பொதுமக்களின் அநாவசிய [illegible] விடயத்தை தவிர்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

# கிராமப்புற பாடசாலைகளின் தளபாட பற்றாக்குறைக்கு தீர்வு

(யாழ்ப்பாணம்)

நாட்டிலுள்ள கிராமப்புற பாடசாலைகளில் கதிரை,மேசை போன்ற தளபாடங்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மாணவர்கள் தமது கல்விச் செயற்பாட்டை மேற்கொள்வதில் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையினைப் போக்கும் வகையில் கல்விச்சேவைகள் அமைச்சர் துமிந்ததிசாநாயக்க விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக 2015,2017 இடைக்கால வரவு செலவு வரையறைக்குள் 575 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதன்மூலம் கிராமப்புற பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளை சிரமமின்றி மேற்கொள்ள முடியுமென தெரிவிக்கப்படுகிறது.

# வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மோ.சைக்கிள்கள் வழங்கல்

(கொழும்பு)

வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஒருஇலட்சம் பேருக்கு ஜனாதிபதி இன்றையதினம் மோட்டார் சைக்கிள்களை வழங்கவுள்ளார்.

வருடாந்தம் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தையும் கொடுப்பனவுகளையும் அதிகரித்து அரச சேவையை வலுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார தெரிவித்தார்.

1980ஆம் ஆண்டு யூலை வேலைநிறுத்தத்தின் போது ஐக்கிய தேசியக்கட்சி அதனை கட்டுப்படுத்திய விதம் வேலைநிறுத்தக்காரர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து தாம் வருத்தப்படுவதாகவும் தார்மீக ஆட்சி ஒன்றை அமைப்பதாக கூறி ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக்கட்சி, யூலை மாதத்தில் கறை படிந்த இரு சம்பவங்களை வரலாற்றில் பதிவு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# சுன்னாகத்தில் விபத்து; தந்தை,மகன் படுகாயம்

யாழ்.சுன்னாகம் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக முச்சக்கரவண்டியும் மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தையும்,மகனும் தெல்லிப்பளை மற்றும் யாழ். போதனா வைத்தியசாலைகளில் நேற்றுமுன்தினம் இரவு அனுமதிக்கப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியைச் சேர்ந்த கருணாநந்தம் விஜயேந்திரன் (வயது-49) அவரது மகனான விஜயேந்திரன் துசாந்த(வயது - 09)ஆகிய இருவருமே இவ்விபத்தில் படுகாயமடைந்தனர்.

வியாபார நிலையம் ஒன்றில் இருந்து, பிரதான வீதிக்கு செல்ல மோட்டார் சைக்கிளில் சென்ற போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் படுகாயமடைந்த இருவரும் முதலில் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும், மகன் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இவ் விபத்து தொடர்பிலான விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நல்லூர் மஹோற்சவம் பண்ணிசைப்போட்டி

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் மஹோற்சவத்தினை முன்னிட்டு, யாழ். மாநகர சபையின் சைவசமய விவகாரக்குழுவினால் எதிர்வரும் 30ஆம் திகதி நாவலர் கலாசார மண்டபத்தில் பண்ணிசைப் போட்டி நடைபெறவுள்ளதாக யாழ். மாநகர சபை சைவசமய விவகாரக்குழு தெரிவித்தது.

பாடசாலை மாணவர்களிடையே ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்தப் பண்ணிசைப் போட்டி நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு மற்றும் மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக மாணவர்கள் வகைப்படுத்தப்பட்டு போட்டிகள் நடைபெறவுள்ளன.

மாணவர்கள் பாடப்படவேண்டிய தேவாரப் பாடல்கள், மேற்படி போட்டிக்காக விண்ணப்பித்திருந்த மாணவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அந்தக்குழு தெரிவித்தது.

இந்தப் பண்ணிசைப் போட்டிகளில் முதலாம் இடத்திற்கு 10 ஆயிரம் ரூபாவும், இரண்டாமிடத்திற்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும், மூன்றாமிடத்திற்கு 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும் என சைவசமய விவகாரக்குழு தெரிவித்தது.

## நடேசன் கட்டுரையிலிருந்து

# 1983 ஜூலை

மதவாச்சியில் வேலை செய்த நான் கொழும்பில் 1983 ஜூலை 21ஆம் திகதி அனுராதபுர மாவட்டத்தில் உள்ள மிருகவைத்தியர்களுடன் கிராமிய தொழில்துறை அமைச்சர் தொண்டமானின் அலுவலகத்தில் நடந்த கூட்டத்தில் பங்கு பற்றினேன். அக்காலத்தில் பல அபிவிருத்தித் திட்டங்கள் அனுராதபுரத்தில் நடந்தபோது ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்ததால் - மதவாச்சி, மைத்திரிபால சேனநாயக்கவின் தொகுதியானதால் புறக்கணிக்கப்பட்டது.

இலங்கையில் தமிழர்கள் மட்டும் புறக்கணிக்கப்படுவதாக குறை கூறினாலும் உண்மையில் எந்த அரசாங்கமும் எதிர்க்கட்சி ஆதரவாளர்களையும் அவர்களது தொகுதிகளையும் கண்டுகொள்வதில்லை. சிங்களவர்கள் இதற்கு அரசியல் சாயம் பூசும்போது தமிழர்கள் நித்தமும் அரசாங்கங்களுக்கு எதிராக இருப்பதால் இனச்சாயம் பூசுவதுதான் உண்மை.

எனது காலத்தில் பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் மதவாச்சி - பதவிய ஆகிய இரண்டு இடங்களிலும் பால் சேகரிக்கும் நிலையங்களும் புதிதாக மதவாச்சியில் மிருக வைத்தியசாலையும் எனது முயற்சியால் திறக்கப்பட்டன. அனுராதபுர மாவட்ட அபிவிருத்தி கூட்டங்களில் மைத்திரிபால சேனநாயக்கா கலந்து கொள்வதில்லை.

எனது மகனது முதலாவது பிறந்த நாள் ஜூலை 25ஆம் திகதி வருவதால் யாழ்ப்பாணம் செல்லவேண்டும் என்று 21ஆம் திகதி மாலையே வெளிக்கிட்டபோது - சக மிருகவைத்தியர் களுஆராச்சியின் அனுராதபுர வீட்டின் ஒரு சாவியை பெற்றுக்கொண்டேன். “இரவு நடுச்சாமத்தில் அனுராதபுரத்தில் தங்கியிருந்து பின்னர் யாழ்ப்பாணம் செல்ல விரும்புகிறேன். எனவே உனது வீட்டில் படுக்கிறேன்” என்றபோது அவனும் தந்தான்.

நான் நேரடியாக கொழும்பில் அல்லது கண்டியில் இருந்து யாழ்ப்பாணம் செல்வதில்லை என்ற விடயத்தை பாதுகாப்பு நடவடிக்கையாக பல காலமாக கடைப்பிடித்து வருகிறேன். கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் செல்பவர்கள் - இராணுவத்தால் பரிசோதிக்கப்படுவதும் விசாரிப்பதும் அக்காலத்தில் நடக்கும் வழமையான விடயங்கள்.

நான் கொழும்பில் அல்லது கண்டியில் இருந்து அனுராதபுரம் அல்லது மதவாச்சி செல்லும்போது அந்த மார்க்கத்தில் பெரும்பாலும் சிங்களமக்களே பிரயாணம் செய்வார்கள். மேலும் அங்கிருந்து வவுனியாவிற்கு செல்லும்போது வாகனங்கள் நிறுத்தப்படுவதோ சோதிக்கப்படுவதோ இல்லை. பயண நேரம் கொஞ்சம்கூட எடுத்தாலும் இது வசதியானது.

மீசையில்லாமல் ஆங்கிலப்பத்திரிகையோடு பிரயாணம் செய்யும்போது பலரும் என்னைச் சிங்களவராக நினைத்து பேசிய படி வருவார்கள். அதிகம் பேசாமல் ஓரிரு வார்த்தைகளில் பத்திரிகையில் என்னைப் புதைத்துக் கொள்வேன்.




**இலங்கையில் தமிழர்கள் மட்டும் புறக்கணிக்கப்படுவதாக குறை கூறினாலும் உண்மையில் எந்த அரசாங்கமும் எதிர்கட்சி ஆதரவாளர்களையும் அவர்களது தொகுதிகளையும் கண்டுகொள்வதில்லை. சிங்களவர்கள் இதற்கு அரசியல் சாயம் பூசும்போது தமிழர்கள் நித்தமும் அரசாங்கங்களுக்கு எதிராக இருப்பதால் இனச்சாயம் பூசுவதுதான் உண்மை.**

மீசையற்ற முகம், நல்லெண்ணை வைக்காத தலை சிங்கள மொழியில் கொஞ்சம் பரிச்சயம் என்பன எனது பாதுகாப்பு கவசங்கள் என எனக்கு ஒரு நினைப்பு அக்காலத்தில் இருந்தது.

81ஆம் ஆண்டு என நினைக்கிறேன் - அனுராதபுரத்தில் இருந்து வேனில் கண்டி செல்லும்போது மாத்தளையருகில் வரும்போது மாலை 6 மணி சிங்கள செய்தியில் இரண்டு பொலிசார் கொலை செய்யப்பட்டதாக சொன்னபோது அந்த வேனில் இருந்த சில சிங்கள இளைஞர்கள் எழுந்து கோபத்தில் “தமிழர்களைக் கொல்லவேண்டும்” என சுற்றி சுற்றி பார்த்தார்கள் நான் சாரதிக்கு பின்புறமாக இருந்தேன். இதைக்கேட்டதும் சன் பத்திரிகையை தூக்கியபடி “ஏக்கத்தமாய்” என்ற ஒரு வார்த்தையை மட்டும் சொல்லிக்கொண்டு எழும்பினேன். அவர்களும் “ஏக்கனே மாத்தயா” என்றார்கள். அந்தச் செய்தி முடிந்ததும் அந்த இளைஞர்களது கோபம் திறந்த சம்பேயின் போத்தலின் சத்தமாக அடங்கியது. நானும் தொடர்ச்சியாக சன் பத்திரிகையை படித்தபடி பிரயாணத்தை கண்டிவரை தொடர்ந்தேன்.

அன்று இரவு அனுராதபுரத்தில் படுத்திருந்துவிட்டு - மறுநாள் அருகில் இருந்த களுவாரர்ச்சியின் உறவினர்கள் எனக்கு ஏற்கனவே பழக்கமானதால் அவர்களுடன் காலையுணவை அருந்திவிட்டு மதவாச்சி சென்று - எனது வைத்தியசாலையில் சில விடயங்களை முடித்து விட்டு எனது அலுவலக மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு யாழ்ப்பாணம் புறப்பட்டேன். அங்கு சென்றடைவதற்கு இரவு எட்டுமணியாகிவிட்டது. வீட்டில் இரண்டு நாளில் பிறந்த தினம் கொண்டாட இருந்த மகனுடன் கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்தபோது

வைத்தியசாலையில் இருந்து வந்த மனைவி “யாழ்ப்பாணம் ரவுணில் கேக்கிற்காக ஓடர் கொடுத்திருக்கு” என்றாள்.

மறுநாள் காலை எழுந்ததும் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் வேலை செய்யும் அவளை அங்கு விட்டு விட்டு கேக்கை எடுப்பது எனது வேலையாகியது.

சனிக்கிழமை மனைவியை வேலைக்கு அழைத்துச் செல்வதற்காக எழுந்து காலை எட்டு மணியளவில் யாழ்ப்பாணம் ரவுணுக்கு புறப்பட்டேன். எனது மோட்டார்சைக்கிளில் யாழ்ப்பாணம் பிரதானவீதியால் சென்று

ஆஸ்பத்திரி வீதியை அடையும் வரை எல்லாமே வழமைபோல் இருந்தது. வைத்தியசாலை முன்பு மோட்டார் சைக்கிளை நிறுத்தினேன். எனது மனைவி வைத்தியசாலையினுள்ளே நூழைந்து விட்டாள்.

சுற்று வட்டாரத்தில் ஏதோ மாற்றம் தெரிந்தது. வைத்தியசாலைக்கு முன்பாக இரண்டு பக்கமாகச் செல்லும் வீதியின் நடுவே வாடகைக்கார்கள் மினி பஸ் வண்டிகள் என குறைந்தது அரைகிலோ மீட்டர் தூரத்திற்கு நிறுத்தியிருப்பார்கள். அதாவது வேம்படி வீதியில் இருந்து காங்கேசன்துறை வீதிவரையும் உள்ள இந்த இடம் வாகனங்கள் நிறுத்தும் பிரதேசமாகவிருந்தது. ஆனால் அன்று எந்த வாகனமும் எனது கண்ணுக்குத் தெரியவில்லை கண்ணுக்கெட்டியவரை வெளியாக இருந்தது. மேலும் கண்ணாடித் துண்டுகள் சிதறி எனக்குப் பக்கத்தில் நிலமெங்கும் கிடந்தன. ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்த என்னை யாரோ பெயர் சொல்லிக் கூப்பிட்டார்கள். மேலே பார்த்தபோது என்னுடன் படித்த டொக்டர் ஜெயச்சந்திரன், நண்பர்களுடன் டொக்டர்கள் விடுதி பல்கனியில் நின்றபடி “உள்ளுக்கு வாடா. இல்லையேல் உடனே வீடு செல்” என்றான்.

**மீசையற்ற முகம், நல்லெண்ணை வைக்காத தலை, சிங்கள மொழியில் கொஞ்சம் பரிச்சயம் என்பன எனது பாதுகாப்பு கவசங்கள் என எனக்கு ஒரு நினைப்பு அக்காலத்தில் இருந்தது.**

அவனது வார்த்தைகள் எனக்கு கேட்டாலும் அர்த்தம் புரியாமல் சிரித்தபடி நின்ற போது...

“மீண்டும் ஆமிட்ட அடிவாங்கப் போகிறாய் உடனே போ” - என்றான்.

சுற்றிவர எவரும் இல்லை ஏதோ அசம்பாவிதம் நடந்துவிட்டது என நினைத்துக்கொண்டு எனது மோட்டார் சைக்கிளைத் திருப்பிக்கொண்டு டொக்டர் பத்மநாதன் வீடு சென்றேன்.

“உனக்கு விடயம் சொல்லத்தான் மறித்தேன். இரவு பெடியங்கள் சில ஆமிக்காரரைக் கொன்றுவிட்டார்கள் என்ற ஆத்திரத்தில் ஆமி வந்து இங்குள்ள பல கார்களை அடித்து நொருக்கியது பிள்ளையார் விலாஸுக்குச் சொந்தமான வேனும் நொருக்கப்பட்டது. மீண்டும் வருவார்கள் என்பதால் வீதிகள் எங்கும் வெறிச்சோடிக்கிடக்கிறது. இன்று எந்தக் கடையும் திறக்கமாட்டார்கள்.” என்றார் பத்மநாதன்.

மகனுடைய பிறந்தநாள் கேக்கை மறந்து விட்டு குறுக்குவழியால் சுண்டிக்குழி சென்று விடயத்தை மாமா மாமியிடம் சொன்னேன்.

இப்பொழுது மனைவி மாலையில் வேலை முடித்து எப்படி வீட்டுக்கு வருவாள் என்ற கவலை மனதில் படிந்து கொண்டது. வைத்தியசாலையில் இருக்கும்வரையும் பாதகமில்லை. வரும் வழியில் ஏதாவது நடக்காமல் இருக்கவேண்டும் என நினைத்துக் கொண்டிருந்தோம்.

மாலையில் எனது மனைவி வந்தது மல்லாமல் அந்த கேக்கையும் கொண்டு வந்தாள்.

“எப்படி வந்தாய்?” எனக்கேட்டேன்.

“நடந்துதான்.” என்றாள்.

பல விதத்தில் பெண்கள் ஆண்களை விட தைரியசாலிகள் என புரிந்து கொண்டேன். இராணுவத்திற்குப் பயந்து நான் கேக்கை விட்டுவிட்டு வந்தாலும் - தனது மகனுக்காக கேக்கை எடுத்துக்கொண்டு குறைந்தது மூன்று கிலோ மீட்டர் தூரம் நடந்து வந்ததன் காரணம் தாய்மையா? அல்லது பெண்களுக்குரிய அசாத்திய துணிவா?

அல்லது யதார்த்த நிலைமையை புரிந்துகொள்ளாத அறியாமையா?


எனது மகனின் பிறந்த நாள் ஞாயிற்றுக்கிழமையன்று இரண்டு குடும்பங்களுடன் நடந்தது.

24ஆம் திகதி இரவு கொழும்பில் நடந்த எந்தச் சம்பவங்களும் தெரியா மல் - நான் திங்கட்கிழமை காலை வழமை போல் எழுந்து - அரசாங்க மோட்டார் சைக்கிளில் மதவாச்சி சென்றேன். வழி எங்கும் எதுவித தடைகளும் இருக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவரான கந்தசாமி என்ற பிரமுகர் - பருத்தித்துறைத் தமிழர் அந்தப் பிரதேசத்தில் இருந்ததால் அங்கு பாரதூரமான சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை.

எனது மகனின் பிறந்தநாள் இல்லாமல் இருந்திருந்தால் - நான் நிச்சயமாக கொழும்பில்தான் நின்றிருப்பேன். வானுலகத்தில் இருந்துதான் இந்த சுய வரலாறு எழுதியிருக்க வேண்டியிருக்கும்.

# சமூக நல்லிணக்கத்தை ஊக்குவிக்க பாடசாலைகள், ஊடகங்கள் தவறிவிட்டன

## விரிவுரையாளர் தம்ம திஸாநாயக்க கவலை



சமூக நல்லிணக்கத்தை உருவாக்குவதில் ஊடகங்களும் பாடசாலைகளும் பிரதான இடத்தை வகிக்கின்றன. எனினும் எந்தளவுக்கு அதனை சரியானமுறையில் செயற்படுத்துகின்றன என்பது கேள்விக்குரிய விடயமே என கொழும்பு பல்கலைகழகத்தின் அரசியல் மற்றும் பொதுக் கொள்கை பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் தம்ம திஸாநாயக்க தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் ஊடக மத்திய நிலையத்தில் நடைபெற்ற "சமூக ஒருங்கிணைப்பும் ஊடகப்பாவனையும்" ஒருநாள் கருத்தரங்கில் "ஒன்றிணைந்த இலங்கையில் சமூகநல்லிணக்கம்" என்ற தலைப்பில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்- மீளிணக்கம் என்றால் என்ன? ஒற்றையாட்சி என்றால் என்ன? என்பது தொடர்பில் ஆராயும் போது பல விடயங்கள் தொடர்பில் இணக்கப்பாடு ஏற்படுவது அவசியம்.

பல விடயங்களில் இணககப்பாடு இல்லாமல் மீளிணக்கததை ஏற்படுத்துவது கஷ்ரம். ஒற்றையாட்சி விடையத்தில் பல்வேறு சிக்கல்கள் காணப்படுகின்றன. அவ்விடயம் தொடர்நதும் கேள்விக்குட்படுத்தப்படுகிறது.

ஒருங்கிணைந்த- ஒற்றையாட்சியுடன் கூடிய நாட்டை உருவாககுவது எவ்வாறு? தனிநபர்களுக் கிடையில் இனநல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் பாடசாலைகளும் ஊடகங்களும் முக்கிய பங்களிப்பை வழங்க வேண்டும். ஆனால் இன்று பாடசாலைகளில் தனிநபர்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகள் இடம் பெறுவதில்லை. அதற்கு மாறான விடயங்களே இடம் பெறுகின்றன.

பாடசாலைகளில் ஆசிரியர்கள் இல்லை "மெடம்மார்களும் - பொஸ்மார்களும்" தான் உள்ளனர். மாணவ தலைவர்களும் தான்தோன்றித்தனமாக நடந்து கொள்கின்றனர். இதனால் தனி நபர்களுக்கிடையில் இன நல்லிணக்கம் தோன்றுவதற்கான வாய்ப்பில்லை.

ஊடகங்களும் இலாபத்தை மட்டுமே நோக்காக்கொண்டு செயற்படுகின்றன. இதனால் சமூக நல்லிணக்கம் பாதுகாக்கப்படுவதில்லை. மனிதனுடைய அன்றாட நடவடிக்கைகளை ஊடகஙகள் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன.

இவ்வளவு தகவல்கள் மனிதனுக்குத் தேவைதானா? தகவல்களை குப்பைகளைப் போன்று மனிதனிடம் திணிக்க ஊடகங்கள் முயற்சிக்கின்றன. இதுதேவையில்லை.

இதைத் தவிர்த்து இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை உருவாக்கும் வகையில் ஊடகங்கள் பொறுப்பாக செயற்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# ரியூசனுக்கு தடை

க.பொ.த உயர்தரப் பரீட்சையை முன்னிட்டு இம்மாதம் 30 ஆம் திகதி நள்ளிரவு முதல் பரீட்சைகள் முழுமையாக முடிவடையும் வரை டியூசன் வகுப்புக்களுக்கு பரீட்சைகள் திணைக்களம் முற்றாக தடை விதித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள விசேட சுற்றறிக்கையின்படி, பிரத்தியேக வகுப்புக்கள், குழு வகுப்புக்கள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள், மாதிரி வினாத்தாள்களை அசசிட்டு விநியோகித்தல், பரீட்சைக்கு வரக்கூடிய கேள்விகளைத் தொகுத்து வழங்குதல், போஸ்டர்கள், பெனர்கள் ஓட்டுதல் துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்தல், வகுப்புக்கள் தொடர்பில் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் விளம்பரம் செய்தல் ஆகிய அனைத்து விடயங்களுக்கும் தடை விதிக்கப்பட்டிருப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ. புஸ்பகுமார தெரிவித்தார்.

இத்தடையை மீறி செயற்படும் தனிநபர் அல்லது நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் கூறினார்.

# தொண்டு நிறுவனக் கட்டுப்பாடு விசனம் தெரிவிக்கும் ரணில்



நாட்டில் இயங்கி வரும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மீது பாதுகாப்பு அமைச்சு பல்வேறு வழிகளில் கட்டுப்பாடுகளை விதித்து வருவதாகக் ரணில் விக்ரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.. நாடாளுமன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் விளக்கமளிக்குமாறு பிரதமர் டி.எம். ஜயரட்னவிடம் கோரிய போதிலும் அதற்கு உரிய பதிலளிக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

சில தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் கல்வி அபிவிருத்தி செயற்றிட்டங்கள் என்ற பெயரில் மாணவர்களின் உளவியலைப் பாதிக்கும் வகையில் செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இந்த விளக்கம் போதுமானதல்ல என ரணில் விக்ரமசிங்க தெரிவித்துளளார்.

இலங்கையில் சில புலனாய்வு நிறுவனங்கள் இயங்கி வருவதாகவும் எந்தப் புலனாய்வுப் பிரிவு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளன என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அமைச்சர் சம்பிக்கவின் முகநூல் செயலிழப்பு

தமக்கு அறிவிக்காமலேயே தமது முகநூலை செயலிழக்கச் செய்தமை தொடர்பில் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க முகநூல் நிறுவனத்திடம் முறையிட்டுள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தமது முறைப்பாடு குறித்து ஆராய்ந்து பதிலளிப்பதாக முகநூல் நிறுவனம் தனக்கு உறுதியளித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தமது முகநூலில் 21000 பேர் தமக்கு அறிமுகமானவர்களாக உள்ளதாகவும், இந்நிலையில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் அதில் கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்படுகின்றன என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தமது பெயரில் 5 முகநூல் முகவரிகள் போலியாக திறக்கப்பட்டு இயக்கப்பட்டு வருகின்றமை காரணமாகவே உத்தியோகபூர்வ முகநூல் முடக்கப்பட்டிருக்கலாம் என்று தாம நம்புவதாக ரணவக்க தெரிவித்துள்ளார்.

# சீன விமான பராமரிப்பு நிலையம் இலங்கை விமானப்படையே கையாளும்

## பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவிப்பு



திருகோணமலையில், சீன அரசாங்கத்தின் உதவியுடன் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள விமானப் பராமரிப்பு நிலையம், முற்றிலும் இலங்கை விமானப்படையினராலேயே கையாளப்படும் என்று இலங்கை பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்றுமுன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில், இது குறித்து விளக்கமளித்த அவர்,

இலங்கை விமானப்படையிடம் உள்ள சீனத் தயாரிப்பு விமானங்களின் பராமரிப்பு வேலைகளைச் செய்வதே, இந்த விமானப் பராமரிப்புத் தளத்தை அமைப்பதற்கான முக்கிய நோக்கமாகும்.

தற்போது விமானப்படையிடம் உள்ள சீனத் தயாரிப்பு விமானங்கள் பராமரிப்பு வேலைகளை செய்வதற்காக பாகிஸ்தானுக்கு அனுப்பப்படுகின்றன.

சீனாவின் உதவியுடன், பாகிஸ்தான் விமானப் பராமரிப்பு நிலையத்தை அமைத்துள்ளது.

நாம் ஜப்பானிய உதவியுடன், கடற்படையின் கப்பல்களை பராமரிக்கும் தளம் ஒன்றை அமைத்துள்ளோம்.

இந்த விமான பராமரிப் புத்தளத்தை அமைப்பதன் மூலம், மில்லியன் கணக்கான ரூபாவைச் சேமிக்கலாம் என்று தெரிவித்தார்.

இந்த செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற, விமானப படை பேச்சாளர் விங்கொமாண்டர் கெகான் செனிவிரத்ன,

இலங்கை விமானப்படையிடம் தற்போது உள்ள சீனத் தயாரிப்பு விமானங்கள், 1980 ஆம் ஆண்டிற்கு முன்னர் தயாரிக்கப்பட்டவை.

இந்த விமானங்களை சீன நிறுவனங்கள், நீண்டகாலத்துக்கு தயாரிக்காது என்று எதிர்க்கட்சித் தலைவர் கூறியிருந்தார்.

ஆனால், அவை பறப்பதற்கு அவர்கள் பராமரிப்புச் சேவைகளை வழங்குவார்கள்.

இந்தத் திட்டத்தின் படி, இந்தப் பராமரிப்பு நிலையத்தில் பராமரிப்பு வேலைகளைச் செய்வது தொடர்பாக, இலங்கை விமானப்படையினருக்கு முதல்கட்டமாக சீன நிபுணர்கள் பயிற்சி அளிப்பார்கள்.

அதன் பின்னர், இலங்கை விமானப்படையே அதனை முழுமையாக கையாளும் என்று தெரிவித்தார்.

# புகைத்தலால் உயிரிழப்பு சிகரெட் கம்பனிகள் மீது வழக்கு

## அமைச்சர் சிறிசேன கோரிக்கை

புகைத்தலில் உண்டான நோய் காரணமாக மரணித்தவர்களின் குடும்ப அங்கத்தவர்கள், சிலோன் டுபேக்கோ கம்பனி மீது வழக்குத் தாககல் செய்யவேண்டும் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

"சிகரெட்டால் புற்றுநோய் வந்து மரணமடைந்தவரின் மனைவிக்கு 23.6 பில்லியன் அமரிக்க டொலர் (அண்ணளவாக 3000 பில்லியன் ரூபாய்) செலுத்த வேண்டும்" என அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பளித்ததைக் கருத்திற்கொண்டே அவர் இவவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"சிகரெட் பெட்டியொன்றின் 60 சதவீத மேற்பரப்பு மட்டும் எச்சரிக்கை படங்களினால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்ததையிட்டு நான் விரக்தியடைந்துள்ளேன். ஆயினும் நிரப்பப்பட வேண்டிய மேற்பரப்பை 80 சதவீதம் ஆக்குவதற்கு சுகாதார அமைச்சு தொடர்ந்து போராடும்.

21,000 இலங்கையர்கள் ஆண்டுதோறும் புகைத்தல் காரணமாக மரணிப்பதையிட்டு கவலைப்படாத பன்னாட்டு புகையிலை நிறுவனத்தின் உறுப்பினர்கள், எச்சரிக்கைப் படத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது இலங்கைக்கு வந்தனர்" என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, "புற்றுநோயால் இறந்தவரின் மனைவிக்கு 23.6 பில்லியன் அமெரிக்க டொலரை செலுத்தும்படி, அமெரிக்காவிலுள்ள இரண்டாவது பெரிய சிகரெட் கம்பனியான ரெனொல்ட் புகையிலை கம்பனிக்கு அந்நாட்டு நீதிமன்றம் ஒன்று உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்கரான மைக்கல் ஜோன்சன் எனபவர் கடந்த 1996ஆம் ஆண்டு (36 வயது) நுரையீரல் புற்றுநோயால் இறந்தார். இவர் 20 வருடங்களுக்கு மேலாக இந்தக் கம்பனியின் கூல்மார்க் மென்தோல் சிகரெட்டை புகைத்துள்ளார்.

தனது கணவனின் மரணத்திற்கு நட்டஈடு கேட்டு சிந்தியா ரொபின்ஸன் என்ற பெண் றெனோல்ட் கம்பனி மீது வழங்குத் தாக்கல் செய்தார்.

இந்தக் கம்பனி மென்தோல் சிகரெட்டினால் வரும் ஆரோக்கிய கேட்டை மறைப்பதற்கு சதி செய்ததென அவர் வாதிட்டமை குறிப்பிடத்தக்கது. எனவே, அடுத்த இரண்டு மாதங்களுக்குள் தேசிய அற்கஹால் கொள்கையை கொண்டுவரவுள்ளோம்" என்றும் அமைச்சர் கூறினார்.

# எதிர்கால சமூகத்தின் தூண்கள்

# எமது இன்றைய மாணவர் சமூகமே


## வடமாகாணசபை உறுப்பினர் தவநாதன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

இன்றைய சிறார்கள் எதிர்கால சமூகத்தின் தூண்கள் எனவே அவர்களை நல்ல கனவுகளுடன் வளர்த்தெடுக்க வேண்டியது எங்கள் அனைவரினதும் பொறுப்பாகும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி திருநகர் சுரபி முன்பள்ளி சிறார்களின் விளையாட்டுப்போட்டி நிகழ்வுகளில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

முன்பள்ளி கல்வி நடவடிக்கைகள், எம்சமூகத்தில் ஒரு முக்கியமான செயற்பாடு. பிள்ளைகள் சமூகத்தில் காலடி வைக்கின்ற முதல் படி இது வாகும். சிறார்களின் எதிர்காலத்தை நோக்கிய பயணம் முன்பள்ளியிலிருந்தே ஆரம்பிக்கிறது. எனவே முன்பள்ளிக் கல்விச் செயற்பாடுகள் சிறப்பாக கொண்டு செல்ல பட வேண்டியவை தற்போதைய நிலையில் முன் பள்ளி ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் தங்களின் செயற்பாடுகளை வெளிப்படுத்தி வருகின்றார்கள். அந்த வகையில் அவாகளுக்கு எனது பாராட்டுதல்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன் எனத் தெரிவித்தார்.



மீள் குடியேற்றத்தின் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி வளர்ச்சிக்கு நாம் அதிக முக்கியத்துவம் கொடுத்து செயற்பாடுகளைக் கொண்டு சென்ற தன் பயனை இன்று கிளிநொச்சி கல்விச் சமூகம் பெற்றுக்கொண்டிருக்கிறது. தொடர்ந்து நாங்கள் மாவட்டத்தின் கல்வி வளர்ச்சிக்காக எங்களது உழைப்பினை மேற்கொள்வோம். கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி நிலைமையினை ஒரு சிறப்பான நிலைக்கு கொண்டு செல்வதே எங்களது நோக்கம் எனக்குறிப்பிட்ட அவா. பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளில் அதிக அக்கறை எடுக்க வேண்டும் என்றும் கேட்டு கொண்டார்.

இந்த விளையாட்டுப்போட்டி நிகழ்வில் சிறிலங்கா சுதந்திர கட்சியின் கிளிநொச்சி அமைப்பாளர் கீதாஞ்சலி, சிவில் பாது காப்புபிரிவின் பொறுப் பதிகாரி மேஜர் சகர வீரசிங்க திருநகர் கிராம அலுவலர் செல்வரட்ணம், ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் செல்வராணி, கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் வேலாயுதம், மாவட்ட முன் பள்ளிகளின் இணைப்பாளர் சுதர்சன் உளளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# வடக்கு கடுகதிப்பாதை பதவிநிலைகளுக்கு விண்ணப்பம்

நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் கீழ் வடக்கு கடுகதிப்பாதை செயற்றிட்டத்தில் அமைந்துள்ள பின்வரும் பதவிகளுக்கு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பிரதான எந்திரி, எந்திரி.சூற்றாடல் மற்றும் சமூகப்பாதுகாப்பு அலுவலர், அலுவலக முகாமையாளர், நில அளவையாளர், கணக்கிடல், திட்டமிடல் உதவியாளர், மீள்குடியேற்ற அலுவலர், செயற்திட்ட செயலாளர், தொழில்நுட்ப அலுவலர், முகாமைத்துவ உதவியாளர், நிர்வாக உதவியாளர், மீள்குடியேற்ற உதவியாளர், CAD நில அளவைப்படவரைஞர் ஆகிய பதவிகள் வெற்றிடமாகவுள்ளன.

இப்பதவிக்கு 18 - 57 வயதுக்குட்பட்ட க.பொ.த.உயர்தர பரீட்சையில் சித்தி பெற்றவர்களும், பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற பட்டதாரிகளும் விண்ணப்பிக்கலாம். (பதவிகளுக்கேற்க கல்வித் தகைமையும் அனுபவ தகைமையும் மாறுபட்டதாகும்) அனுபவ அறிவும் கருத்தில் எடுக்கப்படும். விண்ணப்பிக்கும் இறுதித்திகதி எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் மூன்றாம் திகதியாகும்.

விண்ணப்பங்கள் செயற்றிட்டப்பணிப்பாளர், வடக்கு கடுகதிப்பாதை செயற்றிட்டப்பணிப்பாளர், வடக்கு கடுகதிப்பாதை செயற்றிட்டம் இல 564/1 ஜயமாவத்தை, அக்குறேகொடவீதி, பெலவத்த, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பும் போது கடிதஉறையின் இடதுமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் சுயமாக தயாரித்தல் வேண்டும். (105)

## வீதிப்புனரமைப்புக்கு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேச சபை நிர்வாகப் பகுதியிலுள்ள சில வீதிகளை உடன் திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அச்செழுவேவிபுரம வீதி, அச்சுவேலி பயித்தோலைவீதி, ஊரெழு, உரும்பிராய் மயான வீதி, உரும்பிராய் விளாத்தியடி வீதி, கோப்பாய் இலகடி வீதி என்பனவாகும்.

மேற்படி வீதிகள் பல வருடங்களாக திருத்தப்படாமல் கவனிப்பாரற்ற நிலையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (08)

## ரமழான் நற்சிந்தனை



இரு மனிதர்களின் சண்டையினால் புனித லைலதுல கத்ர் இரவு என்ற குறிப்பு உயர்த்தப்பட்டுவிட்டது. அதனை ஒன்பதாவது, ஏழாவது, ஐந்தாவது இரவுகளில் தேடிக்கொள்ளுங்கள்.

ந்நூல் : புஹாரி

ந் 105

## முரசின் இன்றைய பலன்



(25.07.2014 வெள்ளிக்கிழமை)

ஜய வருஷம் ஆடி மாதம் 09 ஆம் திகதி.
சதுர்த்தசி / சித்தம்.
திருவாதிரை நட்சத்திரம் பி.ப. 02.09 வரை. பின் புனர்பூசம்.
இராகு காலம 10.32 - 12.02 வரை. சுபநேரம 06.02 - 07.32 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பேராசைக்கு உட்படாமல் போதுமென்ற மனமே பொன்செயயும் மருந்து என்ற நிலைப்பாட்டில் இருங்கள், பணமின்மையால் பெற்ற காசோலையை வங்கியில் வைப்பிட வேண்டாமென உரிமையாளர் இறைஞ்சுதல். |
| ரிஷபம் | பிள்ளைகள் மத்தியில் பிரச்சினை ஏற்பட்டவேளை பெற்றோர் பாரபட்சமின்றி இருத்தல், செய்நன்றி மறந்த சகோதரர் உறவினைக் கைவிட முயலுதல். |
| மிதுனம் | உழைப்பின் பெருமையை உணர்ந்து செய்தொழிலில் போதிய கவனம் தக்க வையுங்கள், பெற்றோரின் புத்திமதியை உதாசீனம் செய்யும் பிள்ளைகளைக்கண்டு கவலை கொள்ளல். |
| கடகம் | பிதாவின் சொத்துப்பங்கீடு ஒரு தலைப்பட்சமாக இருப்பதைக்கண்டு களோபரம் ஏற்படல், விவாகமின்றி இருக்கும் முதிர் கன்னிகளை எண்ணி கவலையடைதல். |
| சிம்மம் | போட்டிமிக்க உலகிலே வாழ்வதினால் முன்னேற்றத்தில் கண்ணுங்கருத்துமாக செயற்படுங்கள், ஓய்வு பெறும் விண்ணப்பத்தில் ஆவணங்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல். |
| கன்னி | கடன் அட்டைகளில் மோசடி செய்து பணம்பெறமுயற்சித்தமை கண்டு பிடிக்கப்படல், நீண்டகாலத்துக்குப் பின்னர் சொந்தக்காணியில் கால்பதித்தமையை எண்ணி மகிழ்வுறல். |
| துலாம் | ஒழுக்கம் உயிரிறும் ஓம்பப்படுவதினால் தீய செயல்களில நாட்டம் கொள்ளாமையினால் பெருமை சேரல், சட்டத்திற்கு முரணான விதத்தில் மின் இணைப்பினைக் கையாண்டதால் தண்டம் பெறல். |
| விருச்சிகம் | போதைவஸ்த்தினை வைத்திருந்தமை கண்டுபிழக்கப்பட்டு கைது நிலை ஏற்படல், உங்கள் தனித்தன்மை வெளிக கொணரப்பட்டு தடைகளை முறியழத்து காரிய சித்தி பெறல். |
| தனுசு | மனம் முழுவதையும் வேலையில் ஈடுபடுத்தியமையினால பணியின் தேக்கம் இலகுவில் குறைந்துவிடல், நட்புவட்டங்கள் விரிவுடைந்ததால் ஈடுபட்டகாரியம் வெற்றிக் கொழயை நாட்டுதல். |
| மகரம் | பெற்றோரின் தேகநலத்தை கருத்திற்கொண்டு பயணத்தை ஒத்திவைத்தல், தொலைபேசி உரையாடல் மூலம் சோதிடப்பலாபலன்களைக் கூறிவைத்தல். |
| கும்பம் | பாலியல் துன்புறுத்தல் ஏற்படவிருந்த வேளை உதவிக் கரம் நீட்டியவருக்கு நன்றிகூறுதல், பொருட்களின் விலை வர்த்த நிலையங்களில் வேறுபட்டிருப்பதைக் கண்டு மனக்கிலேசமடைதல். |
| மீனம் | வெளியூர் மணமகனைப்பிற விசாரித்தலில் நம்பிகை ஏற்பட்டதால் விவாகம் செய்யசம்மதப்படல், தம்பதியருக்கிடையே ஏற்பட்டிருந்த மனத்தாங்கல் விலகி சுமுகநிலை ஏற்படல். |







கைதடி டென்மாக் ஒன்றியத்தின் அனுசரணையில் கைதடி மக்கள் நலன்பேனும் நிறுவனத்தினால் வறுமைக்கோட்டின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி வழங்கும் நிகழ்வும், புற்றுநோயாளர்களுக்கு நிதி வழங்கும் நிகழ்வும் கைதடி வளர்மதி சனசமூக நிலைய மண்டபத்தில் நிலையத்தலைவர் இ. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் டென்மார்க் கைதடி ஒன்றியப்பிரநிதிகள் கௌரவிக்கப்படுவதையும் வறுமைக்கோட்டின் கீழ் தெரிவு செய்யப்பட்ட ஏழு மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகளும், புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பத்துப் பேருக்கு ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் பணம் வழங்கப்படுவதையும் காணலாம். (51, 08)

# பொதுநலவாய விளையாட்டு கிளாஸ்கோவில் ஆரம்பம்






20ஆவது பொதுநலவாய விளையாட்டுக்கள், நேற்று முன்தினம் ஸ்கொட்லாந்தின் மிகப்பெரும் நகரமான கிளாஸ்கோவில் செல்டிக் பார்க்கில் இரண்டாவது மகா ராணி எலிசபெத் தலைமையில் கோலாகலமாக ஆரம்பமானது.

இப் போட்டிகளில், இலங்கை உட்பட 71 நாடுகளைச் சேர்ந்த 4,500 விளையாட்டு வீரர்கள் 18 விளையாட்டுக்களில் பங்குபற்றுகின்றனர். இதில் இலங்கையைச் சேர்ந்த சுமார் 89 வீரர்கள் பங்குபற்றவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப் போட்டியில், 261 பதக்க நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. விசேட தேவையுடையோருக்கான பல விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறவுள்ளதுடன் 22 தங்கப்பதக்கங்களும் வழங்கப்படவுள்ளன.

2007ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9ஆம் திகதி கொழும்பில் கூடிய பொதுநலவாய விளையாட்டுக்கள் கூட்டமைப்பு, வெற்றி பெற்ற நகராக ஸ்கொட்லாந்தின் பெயரை அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.



## விதிமுறை மீறிய பயணம் தடுத்து நிறுத்திய பொலிஸார்

கிளாஸ்கோ நகரில் நேற்று முன்தினம் ஆரம்பமான கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்ள சென்ற இலங்கையின் நான்கு சைக்கிள் ஓட்ட வீராங்கனைகளை பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

போட்டிகள் நடைபெறும் நகருக்கு அருகிலுள்ள அதிவேக நெடுஞ்சாலையில் அவர்கள் சைக்கிள் ஓட்டிக் கொண்டிருந்த போது, அவர்களைத் தடுத்த ஸ்கொட்லாந்து பொலிஸார் அந்த நெடுஞ்சாலையில் சைக்கிள் ஓட்டுவது சட்டவிரோதமானது என்று அறிவுறுத்தியுள்ளனர்.


மதர்வெல் மற்றும் ஹாமில்டன் நகர்களுக்குப் பிரிந்து செல்லும் அந்த அதிவேக நெடுஞ்சாலை, ஸ்கொட்லாந்தில் மிகவும் கூடுதலாக வாகனங்கள், வந்து செல்லும் ஒரு பாதையாகும்.

சைக்கிள் ஓட்டுதல், நீச்சல் மற்றும் ஓட்டம் ஆகிய மூன்றையும் உள்ளடக்கிய ட்ரயத்லான் போட்டிகள் நடைபெறும், ஸ்டாத்க்ளைட் பூங்காவுக்கு அருகில் அந்த நெடுஞ்சாலையின் சந்தி உள்ளது.

இலங்கை வீரர்கள் அந்தப் பகுதியில், சைக்கிள் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது, அங்கு வந்த பொலிஸார் அவர்களுக்கு ஆலோசனைகளையும், உதவிகளையும் வழங்கினர் என்று, ஸ்கொட்லாந்து பொலிஸ் தரப்பு கூறுகிறது.

அந்த நான்கு வீரர்களும் அந்தப் பாதையில், சைக்கிள் ஓட்டிக் கொண்டிருந்ததை, இங்கிலாந்தின் ட்ராயத்லான் வீரர், அலிஸ்டர் பிரவுண்லீ படம் பிடித்து அதை தமது ட்விட்டரில் வெளியிட்டுள்ளார்.

கடந்த 2002 ஆம் ஆண்டு மான்செஸ்ட்டர் நகரில் கொமன்வெல்த் போட்டி நடைபெற்றபோது, கென்யாவைச் சேர்ந்த இரண்டு சைக்கிள் வீரர்கள், இதேபோல் வேறொரு அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்தபோதும், போல்டன் நகருக்கு அருகில் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.



## பதவிக் காலம் நீடிப்பு

பாகிஸ்தான் அணிக்கெதிரான கிரிக்கெட் தொடர் நிறைவடையும் வரை இலங்கை அணியின் பிரதம பயிற்றுவிப்பாளராக செயற்பட்டுவரும் மார்வன் அத்தப்பத்துவின் பதவிக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளராக செயற்பட்ட போல் பாப்ரேஸ் திடீரென விலகியதை அடுத்து பிரதான பயிற்றுவிப்பாளராக மார்வன் அத்தப்பத்து நியமிக்கப்பட்டிருந்தார்.

பாகிஸ்தான் மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் எதிர்வரும் 6 ஆம் திகதி காலியில் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உலக கிண்ணத்தில் சேதம் விசாரணைகள் விரைவில்

(பெர்லின்)

உலக கிண்ணத்தில் சேதம் ஏற்படுத்திய ஜேர்மனி வீரர் யார் என விசாரிக்கப்படவுள்ளது.

பிரேசிலில் சமீபத்தில் முடிந்த உலக கிண்ணக் கால்பந்து தொடர் இறுதிப் போட்டியில் ஆர்ஜன்ரீனாவை வீழ்த்தி ஜேர்மனி அணி சம்பியன் பட்டம் வென்றது.

உலக கிண்ண மாதிரியுடன் தாயகம் திரும்பிய இந்த அணியினருக்கு சிறப்பான வரவேற்பு தரப்பட்டது. இதில் கப்டன் பிலிப் லாம், குளோஸ் உள்ளிட்டோர் திறந்த வெளி பஸ்சில் உலா வந்தனர். உலக கிண்ண மாதிரியை வீரர்கள் முத்தமிட்டு மகிழ்ந்தனர். இந்நிலையில், இக்கோப்பையில் சேதம் ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து ஜேர்மனி கால்பந்து கூட்டமைப்பு வெளியிட்ட அறிக்கையில், உலக கிண்ண மாதிரியில் சேதம் ஏற்பட்டுள்ளது உண்மைதான். தவிர, ஒரு இடத்தில் வெட்டப்பட்டுள்ளது. இதற்காக யாரும் அச்சப்பட வேண்டாம். இதை யார் செய்தார்கள் என்பது குறித்து விசாரிக்க உள்ளோம் என்றார்.


## அதிர்ச்சித் தோல்வி

(புலஹறயோ)

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் சிம்பாப்வே அணி அதிர்ச்சிகரமாக தோற்றது. முதலில் ஆடிய சிம்பாப்வே 50 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 261 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 262 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஆப்கானிஸ்தான் 2 பந்து எஞ்சி இருந்த நிலையில் 8 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. முதலிரு போட்டிகளில் தோற்ற ஆப்கானிஸ்தான் 3ஆவது ஆட்டத்தில் வெற்றி பெற்றுள்ளது. 4ஆவது மற்றும் கடைசி ஆட்டம் இன்று நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிரேசில் அணியின் பயிற்றுநராக 2ஆவது முறையாகவும் டுங்கா



(ரியோடி ஜெனீரோ)

பிரேசில் அணியின் கால்பந்து பயிற்றுநராக இரண்டாவது முறையாக முன்னாள் கப்டன் டுங்கா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ரஷ்யாவில் நடைபெறும் உலகக் கிண்ணக் கால்பந்துப் போட்டி வரை பயிற்றுநராகச் செயற்படுவார் என பிரேசில் கால்பந்து சங்கம் அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது.

சொந்த மண்ணில் நடைபெற்ற உலகக் கிண்ணக் கால்பந்துப் போட்டியில் அதிகம் எதிர்பார்க்கப்பட்ட பிரேசில் அணி ஜேர்மனி, நெதர்லாந்து அணிகளிடம் முறையே அரையிறுதி மற்றும் 3ஆவது இடத்துக்கான ஆட்டத்தில் அதிர்ச்சித் தோல்வி கண்டு 4ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டது. மோசமான தோல்வியின் எதிரொலியாக பிரேசில் அணியின் தலைமைப் பயிற்சியாளர் லூயிஸ் பெலிப் ஸ்கொலரி கழற்றி விடப்பட்டார். உடனடியாக புதிய தலைமைப் பயிற்சியாளர் வேட்டையில் இறங்கிய பிரேசில் கால்பந்து சங்கம், பிரேசில் அணியின் புதிய தலைமைப் பயிற்சியாளராக முன்னாள் கப்டன் டுங்கா நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று அதிகாரபூர்வமாக அறிவித்திருக்கிறது. 2018ஆம் ஆண்டு ரஷ்யாவில் நடைபெறும் அடுத்த உலக கிண்ணப் போட்டி வரை டுங்கா தலைமைப் பயிற்சியாளராக இருப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

50 வயதான டுங்கா 1994ஆம் ஆண்டில் உலக கிண்ணத்தை வென்ற பிரேசில் அணியின் கப்டனாக இருந்தவர் ஆவார். பின்னர் பிரேசில் அணிக்கு 2006ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரை பயிற்சியாளராக பணியாற்றினார். 2010 ஆம் ஆண்டு உலக கோப்பையில் பிரேசில் அணி காலிறுதியுடன் வெளியேறியதால், டுங்காவுக்கு பிரியாவிடைகொடுக்கப்பட்டது. டுங்கா பயிற்சியின் கீழ் பிரேசில் அணி 60 ஆட்டங்களில் விளையாடி 42 ஆட்டங்களில் வெற்றியும், 12 ஆட்டங்களில் சமநிலையும், 6 ஆட்டங்களில் தோல்வியும் கண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. டுங்கா 2ஆவது முறையாக பிரேசில் அணியின் தலைமை பயிற்சியாளர் பதவியைப் பிடித்திருக்கிறார்.

## மஹேல சதம்; மீண்டது இலங்கை



(கொழும்பு)

மஹேல ஜெயவர்த்தனவின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் இலங்கை அணி நெருக்கடியிலிருந்து மீட்டுள்ளது.

இலங்கை, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதி ஆட்டம் நேற்றுகொழும்பு எஸ்.எஸ்.சி.விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய இலங்கை அணி முதலிரு விக்கெட்டுக்களை 16 ஓட்டங்களுக்குள் அடுத்தடுத்து இழந்து தவித்தது. இந்நிலையில் மூன்றாவது விக்கெட்டுககாக இணைந்த கௌசல் சில்வா, மஹேல இணை பொறுப்புடன் ஆடி அணியை சரிவிலிருந்து மீட்டது. இந்த இணை 99 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை (சௌசல் சில்வா) பிரிக்கப்பட்டது. தொடர்ந்து கப்டன் மத்தியூஸ் மஹேலவுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் பொறுமையாக ஆடினார். இந்த ஜோடி 131 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து சிறப்பாக ஆடிய மஹேல ஜெயவர்த்தன சதமடித்து அசத்தினார். இறுதியில் நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை இலங்கை அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 305 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் மஹேல ஜெயவர்த்தன ஆட்டமிழக்காது 225 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், 16 பவுண்டரிகள் அடங்கலாக 140 ஓட்டங்களைப் பெற்றார். டெஸ்ட் அரங்கில் மஹேல பெற்ற 34 சதமாக இது அமைந்தது. அத்துடன் எஸ்.எஸ்.சி.யில் மஹேல பெற்ற 11ஆவது சதமாகவும் இது அமைந்தது. மற்றும் கௌசல் சில்வா 44, மத்தியூஸ் 63 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ஸ்ரெயின்,டுமினி இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.

## பெரேரா ஓய்வு; சனத் மறுப்பு

திசார பெரேரா சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறப்போவதாக ஊடகங்களில் வெளியான செய்தி திரிவுபடுத்தப்பட்டிருக்கின்றது. அவரது ஓய்வு முடிவு குறித்து எனக்கோ அல்லது கிரிக்கெட் சபைக்கோ எதுவித தகவல்களையும் தெரிவிக்கவில்லை. காயம் காரணமாகவே அவர் அணியிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றது. காயத்திலிருந்து மீண்டு வரும் பட்சத்தில் அவருக்கு அணியில் இடம் வழங்கப்படும் என இலங்கை அணியின் தேர்வுக் குழுத் தலைவர் சனத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

கடந்த சில தொடர்களில் ஆட்டத் திறனின்றி தடுமாறி வரும் திசார பெரேரா தென்னாபிரிக்க அணிக்கெதிரான ஒரு நாள் தொடரிலிருந்து நீக்கப்பட்டதுடன் இலங்கை ஏ அணியில் இடம்பிடித்திருந்தார். இந்நிலையில் மோசமான ஆட்டம் காரணமாக ஏ அணியிலிருந்தும் அவர் கழற்றிவிடப்பட்டுள்ளார். இந்நிலையில் மன விரக்தி காரணமாக அவர் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற முடிவு செய்திருப்பதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது. இதில் எதுவித உண்மையும் இல்லை. திசர பெரேரா இலங்கை அணியின் முக்கிய வீரர். அவர் காயத்திலிருந்து மீண்டு, சிறந்த ஆற்றலுடன் திரும்புமிடத்தில் அணிக்குள் உள்வாங்கப்படுவார் என ஜெயசூரிய மேலும் தெரிவித்துள்ளார்.



## வெண்கலம் வென்றவருக்கு பாராட்டு விழா

(கிளிநொச்சி)

தேசிய இளைஞர் சேவைகள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கொழும்பு டொறிங்டன் திடலில் நடைபெற்ற தேசிய மட்ட குத்துச் சண்டைப் போட்டியில் மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்ட கிளிநொச்சி பிரமந்தனாறு பகுதியைச் சேர்ந்த விற்றாலிற் நிக்கலஷ் (வயது 24) கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரனால் கௌரவிக்கப்பட்டார்.

இந் நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. பயிற்றுவிப்பாளர் இன்றி சுயமாகவே கற்றுக்கொண்ட இவர், தேசிய மட்டத் திறந்த போட்டியில் மூன்றாம் இடத்தை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# விழிப்புல வலுவிழந்தோருக்கான அன்னலட்சுமி நினைவு தடகளப் போட்டி

## வடமாகாண போட்டியாளர்களை அழைக்கிறது வாழ்வகம்




(சுன்னாகம்)

சுன்னாகம் வாழ்வகம் (விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்) நிறுவனத்தினால் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி ஞாபகார்த்தமாக மாபெரும் தடகளப் போட்டி வரும் செப்ரெம்பர் மாதம் முதல் வாரப் பகுதியில் நடாத்தப்படவுள்ளது.

வடக்கு மாகாணத்திலுள்ள பார்வையற்ற, பார்வைக்குறைபாடுடைய வீர,வீராங்கனைகளுக்கிடையில் நடைபெறவுள்ள இப்போட்டியில் தனிப்பட்ட ரீதியிலோ அல்லது நிறுவனம், அமைப்புகள், கழகங்கள் சார்பாகவோ பங்குபற்ற முடியும்.

இதில் மூன்று பிரிவுகளில் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன. முற்றாக பார்வை இழப்பு, அற்ப பார்வை, பார்வைக் குறைபாடு என மூன்று பிரிவுகளில் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

8, 11, 14, 17, 24 மற்றும் 24 வயதிற்கு மேற்பட்டோருக்கு போட்டிகள் நடாத்தப்படவுள்ளன. நின்று நீளம் பாய்தல், பந்தெறிதல், முப்பாய்ச்சல், ஸ்பொஞ்சினால் நீர் நிரப்பல், தேசிக்காய் ஓட்டம், வெள்ளைப்பிரம்பு நடை, சாக்கோட்டம், கயிறடித்தல், குண்டெறிதல், தட்டெறிதல் மற்றும் 100 மீற்றர் போன்ற போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

இப்போட்டியில் பங்குகொள்ள விரும்புவோர் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும், பங்குபற்ற விரும்புவோர் தலைவர், வாழ்வகம் சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இப்போட்டி தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படின் 0776184772 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிய முடியும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வாழ்வக நிறுவன ஸ்தாபகரும் விழிப்புல வலுவிழந்தோரின் கல்வி வரலாற்றில் காத்திரமான பங்களிப்பை வழங்கிய வருமான அமரர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி நினைவாக இப்போட்டி நடாத்தப்படுவதன் மூலம் கல்வியில் மட்டுமல்லாமல் விளையாட்டும் உடல் ஆரோக்கியத்திலும் விழிப்புலனிழந்த வீர, வீராங்கனைகள் சிறந்து விளங்குவார்கள் என்ற நம்பிக்கை இருப்பதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.



## கிண்ணம் வென்றது கைதடி வளர்மதி

(மட்டுவில்)

மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 49ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தென்மராட்சிப் பிரதேச மென்பந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட மாபெரும் கிரிக்கெட் போட்டியில் கைதடி வளர்மதி அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் வீஸ்ரார் அணியும் கைதடி வளர்மதி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மட்டுவில் வீஸ்ரார் அணி நிர்ணயிக்கப்பட்ட 16 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுகளை இழந்து 117 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சசி 48 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 118 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கைதடி வளர்மதி அணி 16 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றி பெற்றது. இதில் நளன் 38, ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சசி இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயகனாக சசி, தொடரின் நாயகனாக நளன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (51)

## மாவட்ட மட்ட தாச்சிப் போட்டி கைதடியில் இன்று ஆரம்பம்

(கைதடி)

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடாத்தும் 18ஆவது மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டி இன்று முதல் எதிர்வரும் 31ஆம் திகதி வரை கைதடி விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெறவுள்ளது.

விலகல் முறையில் நடைபெறவுள்ள இப்போட்டித் தொடரில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர், கைதடி விநாயகர், நவாலி சென். றொக், சுதுமலை நாவலர், உடுவில் உதயசூரியன், மயிலிட்டி கலைமகள், கைதடி வளர்மதி, பண்டத்தரிப்பு அறிவொளி, ஆனைக்கோட்டை நடன விநாயகர், தாவடி காளியம்பாள், மயிலிட்டி கண்ணகி, சண்டிலிப்பாய் உதயசூரியன், கோண்டாவில் மறுமலர்ச்சி, மயிலிட்டி வள்ளுவர், இணுவில் அண்ணா, மறவுன்புலோ அம்பிகை, சுன்னாகம் காந்தரூபன், உடுவில் புதுமடம் வைகறை, மயிலிட்டி பாரதி, கைதடி சரஸ்வதி, அளவெட்டி பாரதி, ஆலடி சிந்து போன்ற அணிகள் மோதவுள்ளன.

இப்போட்டித் தொடரில் கிண்ணம் வெல்லும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் எனவும், இப்போட்டிக்கு யாழ்ப்பாணம் இலங்கை வங்கி, யாழ்ப்பாணம் வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம் மக்கள் வங்கி என்பன அனுசரணை வழங்குவதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஜேம்ஸை வாங்கியது ரியல் மட்ரிட்

கொலம்பிய அணியின் இளம் வீரர் ஜேம்ஸ் ரோட்ரிக்ஸ் ரியல் மட்ரிட் அணிக்காக 647 கோடிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டார். கொலம்பிய கால்பந்து அணியின் நட்சத்திர வீரர் ஜேம்ஸ் ரோட்ரிக்ஸ் (வயது-23) சமீபத்தில் பிரேசிலில் நடைபெற்ற உலகக் கிண்ணக் கால்பந்து தொடரில் 5 போட்டிகளில் பங்கேற்று 6 கோல்கள் அடித்தார். இதன் மூலம், தங்கக் காலணி விருதை வென்று அசத்தினார். கடந்த ஆண்டு மே மாதம் மொனாகோ கிளப் அணி சார்பில் ஒப்பந்தமானார். இந்நிலையில், இந்த அணியிலிருந்து விலகிய இவர், நேற்று முன்தினம் ரியல் மட்ரிட் அணியில் இணைந்தார். இவர் ரூ. 647 கோடிக்கு ஆறு ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

இதற்காக, ஸ்பெயின் தலைநகர் மட்ரிட் வந்த ரோட்ரிக்ஸ் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். இதில் வெற்றி பெற்ற இவரின் ஒப்பந்தம் உறுதியானது. இதன் மூலம், கால்பந்து அரங்கில் ஒரு அணியிலிருந்து மற்றொரு அணிக்கு அதிக விலைக்கு ஒப்பந்தமான நான்காவது வீரர் என்ற பெருமையைப் பெற்றார். இதற்கு முன் கிறிஸ்டியானோ ரொனால்டோ, காரத் பாலே, லுயிஸ் சுவாரஸ் ஆகியோர் இந்த பெருமையை அடைந்தனர்.



## மூன்றாமிடம் யாழ். மாவட்டம்

(கொழும்பு)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடாத்தப்பட்ட தேசிய மட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரில் யாழ். மாவட்ட அணி மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் 26 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் ஒரு அங்கமாக தற்போது பெரு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் ஆண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடர் கடந்தவாரம் கம்பஹா பண்டாரநாயக்க கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இத்தொடரில் யாழ்.மாவட்ட கிரிக்கெட் அணியினர் மூன்றாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டனர்.

மாத்தறை மாவட்டத்துடனான மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் முதலில் ஆடிய யாழ். அணி நிர்ணயிக்கபட்ட 5 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 42 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரகாஷ் 31, டெஷ்மன் 9 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 43 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மாத்தறை மாவட்ட அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 21 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் எந்தவொரு வீரரும் இரட்டை இலக்க ஓட்டத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. பந்து வீச்சில் உமைசுதன் மூன்று, சேந்திரன், டெஷ்மன் ஆகியோர் தலா இரு விக் கெட்டுக்களைக் கைப்பற்றினர். 21 ஓட்டங்களால் வெற்றிபெற்ற யாழ். மாவட்ட அணி மூன்றாம் இடத்தினைப் பிடித்துக் கொண்டது. இப்போட்டியில் கரவெட்டி, பருத்தித்துறை சம்மேளன வீரர்கள் யாழ்.மாவட்டம் சார்பில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்டம் மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (48)





கிளிநொச்சி உதயநகர் நியூஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட தருமபுரம் இளந்தாரகை அணிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் கைலாகு கொடுப்பதையும், கரைச்சிப் பிரதேச விளையாட்டு உத்தியோகஸ்தர் எஸ். குமார் வெற்றிக் கிண்ணம் வழங்குவதையும் காணலாம். கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டித் தொடரில் முல்லைத்தீவு சென் யூட் அணி கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (29)

# கூட்டமைப்பினர் சொந்த அலுவலுக்கு அரசுடன் உறவு
# மாகாண சபையை இயக்கத்தான் முட்டுக்கட்டையாம்!

- த.சோதிலிங்கம் கட்டுரையிலிருந்து.

பொது தலைமையற்ற கூட்டமைப்பும், தலைமை உறுப்பினர் கள் சிலரின் சுயநலமுமே இன்றைய தமிழர்களின் தலையிடி என்ற கருத்து பல கூட்டமைப்பு உறுப்பினர்களின் கருத்தாக உள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களால் தெரிவு செய்யப்பட்டு வருடங்கள் ஆகியும் உருப்படியான எதையும் செய்ய முடியவில்லை என்பதற்கு அரசு மட்டுமல்ல காரணம், கூட்டமைப்பினுள்ளே நிலவும் ஸ்திரமற்ற தன்மையும், சமயோசித புத்தியற்ற, இதர கட்சிகளுடன் இணைந்து ஆலோச னைகள் பெறுவதை தவிர்த்து இயங்கும் செயற்பாடும் காரணமாக அமைகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் உறுப்பினர்கள் தெரிவிக்கிறார்கள்.

இவற்றைவிட கூட்டமைப்பின் முன்னணி உறுப்பினர்களின் தான்தோன்றித்தனமான முடிவுகளும் தமக்கு மட்டும் எல்லாம் புரியும் தெரியும் என்ற தப்பான கணிப்புடன் மற்றவர்களின் கருத்துக்களை கவனம் கொள்ளாத போக்கும் வட மாகாணசபையின் ஆரோக்கியமற்ற சபை நடவடிக்கைகளுக்கு காரண-மாக அமைகின்றன என பலர் கருதுகின்றனர்.

தமிழரசுக்கட்சி தனது முடிவுக ளுக்கு இதர கட்சிகள் இணங்கி நடக்க வேண்டும் என்று பிடிவாத மாக செயல்படுவதாகவும், தமது முடிவுகளை எதிர்ப்பவர்களை தப்பானவர்கள், என புறம் தள்ளுவதாக கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கருத்து கூறுகின்றனர்.

புலிகள் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் ஊடாகவே சில உடன்பாடு களை இந்தியாவுக்கும் இதர ஐரோப் பிய நாடுகளுக்கும் எடுத்துச்செல்ல வேண்டியிருந்த காலத்தில், தமிழரசுக் கட்சி அவற்றை புறக்கணித்து நடந்துள்ளது. அன்று பல நாடுகள் புலிகளுடன் நேரடி யாக தொடர்பு கொள்ள முடியாத நிலையிலிருந்த போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாகவே புலிகளின் எதிர்பார்ப்பையும் உடன்பாடுகளையும் எதிர்கால அரசியல் இணக்கப்பாடுகளையும் எதிர்பார்த்திருந்தன.

புலிகளும் இவர்கள் ஊடாகவே தமது செய்தி களை இந்தியாவுக்கும் சர்வதேசத்திற்கும் வெளிப் படுத்த வேண்டியிருந்தது. அந்த சந்தர்ப்பங்களை தமிழரசுக்கட்சி தட்டிக்கழித்து புலிகளினுடனான தமது பழிவாங்கல்களையே முதன்மைப்படுத்தியிருந்தனர்.

அன்று தமிழரசுக்கட்சி புலிகள் அழிக்கப்படல் வேண்டும் என்பதை மட்டும் முதன்மைப்படுத்தி புலிக-ளின் போராட்ட பலத்தில் அரசியல் உரிமைகளை பெறத்தவறியுள்ளனர், தமிழர்களின் எதிர்கால அரசியல் பற்றிய விவேகம் அற்றவர்களாக இருந் துள்ளனர்.

தமிழரசுக் கட்சி இந்த முன்னெடுப்புக்களை செய்யத் தவறி புலிகளை பழிவாங்கும் எண்ணத்துட னேயே அரசியலை நடாத்தி னர்கள் எனவும் கூட்டமைப்பு உறுப்பினர்கள் பலர் கருத்து கொண்டுள்ளனர்.

அண்மைக்காலமாக அவதானிக்கப்படும் வட மாகாண சபையின் நடவடிக் கைகளில் நியதிச்சட்டவாக் கல் பற்றிய விடயத்தில் இதர மாகாண சபைகளின் வழியில் சட்டவாக்கங்களை அணுகாமல், இழுத்தடித்து காலத்தை தொலைத்து இருக்கிறார்கள். இது விக்னேஸ்வரனினதும் சம்பந்தனினதும் ஆளுமைக-ளில் சந்தேகத்தை உண்டு பண்ணியுள்ளது, இவர்கள் சில விடயங்களை சாதாரண-மாக கையாள வேண்டிய இடத்தில் அதாவது இதர மாகாணசபைகள் நியதிச்சட்ட விடயத்தில் இயங்கியது போல் இல்லாமல் சட்ட நிபுணர் குழு அது இது என்று பேசி ஏன் காலத்தை இழுத்தடித்தார்கள், இழுத் தடிக்கிறார்கள் என்று புரியவில்லை.

பல விடயங்களில் ஒரேமாதிரியான செயற் பாட்டையும் அணுகுமுறை களையும் கையாளுவத னால் அரசிடமிருந்து பெற வேண்டிய பல விடயங்களை வடமாகாணசபை பெற தவறியுள்ளது என்றும் இவை களும் வடமாகாண சபை யின் இயங்கு தளத்திற்கு முட்டுக்கட்டையாக இருப்ப தாக அறியப்படுகின்றது.

உதாரணமாக தமது நாடாளுமன்ற ஆசனங்களுக் கான வாக்காளர்களை தக்கவைத்தல் ஒன்றுக்காக தேர்தல் காலங்களில் முன்னெடுக்கும் அரச விரோத அணுகுமுறையை சாதாரண தேர்தல் அற்ற காலங்களி லும் முன்னெடுத்து அரசுடன் ஆளுநருடன் இணைந்து செயற்படும் சந்தர்ப்பங்களை இழக்கிறார்கள். எதற்கெடுத் தாலும் அரசு விடாது, அரசு தடுக்கும் என்பதை மட்டும் தாரக மந்திரமாக கூறிக் கொண்டு செயற்படக் கூடிய விடயங்களில் செயற்படாது இருக்கிறார்கள்.



தமிழ்த் தேசியக் கூட்ட மைப் பின் தலைமைத்துவ உறுப் பினர்கள் அரச தலைவர் மகிந்தாவை தமது சொந்த தேவைகளுக்கும் தமக்கு ஒதுக்கப்படும் பணத்தை தான் விரும்பிய ஒரு விடயத்துக்கு மட்டும் செலவு செய்யவும் அனுமதி கேட்டு அரசுடன் கள்ள உறவு வைக்கும் அதேவேளை, மாகாணசபை என்று வரும் போது அரசு முட்டுக்கட்டை போடுகின்றது என்று சொல்லி மாகாண சபையை இயக்குவதில் பின்னடிப்பது பலத்த சந்தேகங்களை எழுப்புகின்றது.

அரசியல் தீர்வுக்கான நகர்வுகள் என்பதில் அக் கறை குறைந்து தீர்வு பற்றிய தங்களது கருத்தை வெளி நாடுகளுக்கு எடுத் துரைக்கவும் தவறுகின்றனர்.

அண்மைக்காலமாக இந்திய உப கண்டத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் இலங்கை பற்றிய வெளி யுலகின் அவதானங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் கருத்துக்கள் என்ன? நடவடிக்கைகள் என்ன? என்பது தமிழ்மக்கள் அறியாத ஒன்றாகவே இருக்கின்றது.

அடுத்த தேர்தலிலும் தமிழ் மக்கள் தமக்கே வாக்களிப்பார்கள் என்ற அசட்டுத் தைரியத்தில் இன்னொரு வகையில் இதனைச் சொல்லுவதானால் - தமக்குரிய கடமைகளை முழுமையாகச் செய்யாது விடினும் கூட தாம் வென்றுவிடுவோம் என்ற துணிச்சலோடு காலத்தை ஓட்டுகிறார்கள்.

# மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்ன?

- யுவகிருஷ்ணா

பத்மினி அப்போதே புகழ்பெற்ற நடிகை. சிவாஜி அப்போதுதான் வளர்ந்துவரும் நடிகர். "எதிர்பாராதது" திரைப்படத்தில் இணைந்து நடித்தார்கள்.

படத்தில் சிவாஜி - பத்மினி காதலர்கள். "எதிர் பாராவிதமாக" சிவாஜியின் அப்பா நாகையாவை பத்மினி திருமணம் செய்துகொள்ள நேரிடும். சித்தியாகிவிட்ட பிறகும் பழைய நினைப்பிலேயே சிவாஜி பேச முயற்சிக்க, பளாரென்று அறைவார் பத்மினி. அந்த காலத்தில் ஸ்ரீதரின் கதை என்றாலே இப்படி எடக்கு முடக்காகதான் இருக்கும். பிற்பாடு ஸ்ரீதர் வரைந்த இதே கோட்டில்தான் மூன்று முடிச்சு போட்டார் பாலச்சந்தர்.

கமெரா ஓடத்தொடங்கியதுமே அந்த பாத்திர மாகவே மாறிவிடும் "மனநோய்" அல்லது இயல்பு பத்மினிக்கு இருந்தது. ஒரு படத்தில் எஸ்.எஸ்.ஆரை குடை கொண்டு அடிக்க வேண்டும். பத்மினி அடித்த அடியில் குடை பிய்ந்து கம்பிகள் வெளியே நீட்டி, எஸ்.எஸ்.ஆருக்கு தையல் போடுமளவுக்கு பலத்த அடி.

அதே கதைதான் "எதிர்பாராதது" படப்பிடிப்பிலும் நடந்தது. பத்மினி அடித்த அடியில் பல்குத்தி சிவாஜிக்கு உதடு கிழிந்து ரத்தம் கொட்டியது. அடுத்த இரண்டு நாட்கள் சிவாஜி படப்பிடிப்புக்கே வரவில்லை. "ஹீரோ எங்கே?" என்று உதவியாளரிடம் கேட்டார் பத்மினி. "நீங்க அடிச்ச அடியிலே காய்ச்சல் வந்து வீட்டிலே படுத்திருக்கிறார்" என்றார்.

அன்று மாலை படப்பிடிப்பு முடிந்ததும் நேராக சிவாஜி வீட்டுக்கு காரை விடச் சொன்னார் பத்மினி. நேரில் பார்த்து படப்பிடிப்பில் அடித்ததற்காக மன்னிப் பும் கேட்டார். அப்போதுதான் பத்மினிக்கு தெரிந்தது. நடிக்க வந்து இரண்டு ஆண்டுகள் ஆகப்போகிறது. சிவாஜி இன்னமும் கம்பெனி கார்தான் பயன்படுத்து கிறார். தான் அடித்ததற்கு பிரதியுபகாரமாகவும், சிவாஜி மீதான அன்பின் காரணமாகவும் ஒரு ஃபியட் கார் வாங்கி பரிசளித்தார். சிவாஜியின் முதல் கார் பத்மினி வாங்கிக் கொடுத்ததுதான்.



இந்த விஷயம் தீயாகப் பரவியது. சிவாஜியை பத்மினி மணந்து கொள்ளப் போகிறார் என்று பத்திரிகைகள் கிசுகிசு எழுதின. போனஸாக சிவாஜியின் தம்பி வி.சி.சண்முகத்தை, பத்மினியின் தங்கை ராகினி மணந்துகொண்டாக வேண்டும் என்று பத்மினி நிபந்தனை போட்டதாகவும் வதந்தி.

நேரடியாகவே பத்மினியிடம் பத்திரிகையாளர் ஒருவர் கேட்டார். "அக்கா, தங்கை இருவருமே சிவாஜி குடும்பத்தில் வாழ்க்கைப்படப் போகிறீர்களா?"

சீறிய பத்மினி பதிலுக்கு கேட்ட கேள்விதான் சூப்பர். "கொஞ்சமாவது யோசித்து கேள்வி கேட்க வேண்டாமா? அவர் தேவர் சாதி. நான் நாயர். நாங்கள் எப்படி கல்யாணம் செய்துகொள்ள முடியும்?"

நாற்பது ஆண்டுகள் கழிந்த நிலையில் நடந்த சிவாஜி - பத்மினி சந்திப்பு உருக்கமானது.

உடல்நலம் குன்றிய நிலையில் சிவாஜி வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டி ருக்கிறார். நடமாட்டம் கூட இல்லை. விஷயம் கேள்விப்பட்டு விசாரிக்க பத்மினி நேரில் வருகிறார்.

பத்மினி வருகிறார் என்று கேள்விப்பட்டதுமே தட புடலாக "அசைவ" விருந்து தயார் செய்யவேண் டும் என்று நடிகர்திலகம் கட்டளை இட்டிருக்கிறார்.

பத்மினிக்கு அப்போது மூட்டு தேய்ந்து படிகளில் ஏறமுடியாது. சிவாஜியோ அன்னை இல்லத்தின் மாடியில் ஓய்வெடுத்துக் கொண்டு இருக்கிறார்.

"கொஞ்சம் உட்காருங்க. சாப்பிடும்போது வந்துவிடுவார்" என்கிறார்கள். சிவாஜி குடும்பத் தினரின் உபசரிப்பில் திளைத்திருக்கிறார் பத்மினி. சாப்பாட்டு மேசையில் அமர்ந்ததுமே சகல உயிர்களும் சமைக்கப்பட்டு பத்மினிக்கு பரிமாறப்படுகிறது.

ஒரு வாய் கவளத்தை பத்மினி வாயில் வைத்திருப்பார். சிம்ம கர்ஜனை கேட்கிறது. "பப்பிம்மாவுக்கு புடிச்சதெல்லாம் மறக்காம செஞ்சிருக்கே இல்லையா கமலா?" க்ளிசரின் போடாமலேயே குபுக்கென்று பத்மினி யின் கண்களில் நீர் கரைபுரண்டு ஓடுகிறது. சக்கர நாற்காலியில் அமர்த்தி வைக்கப்பட்டு, ஷேவ் செய்யப்படாத வெள்ளைத் தாடியோடு வருகிறார் சிவாஜி. அன்று முழுக்க அழுதுகொண்டேதான் இருந்தாராம் நாட்டியப் பேரொளி.

# மனித வடிவில் பழங்கள்!

சீனாவில் விவசாயி ஒருவர் பியர்ஸ் பழங்களை மனிதமுக வடிவில் வளர்த்து விற்பனை செய்து வருகிறார். இந்தப் பழங்களை வாங்க சந்தையில் மக்கள் போட்டி போடுகின்றனர். என்னே கை(பழ) வண்ணம்.





# என்னதான் நடக்குது?

- யாழ். கண்ணன் -

இலங்கை பத்திரிகைப் பேரவையின் ஏற்பாட்டில யாழ்ப்பாண ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை யாழ். மாவட்ட செயலகத்தில் போன கிழமை நடந்தது. பயிற்சிப் பட்டறை எப்பிடி ஆரம்பிச்சுது தெரியுமோ மரணமடைந்த இராணுவ வீரர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தித்தான் ஆரம்பிச்சுது.

இவ்வளவு நாளும் எங்கட சனத்தை உசுப்போ உசுப்பு எண்டு உணர்ச்சியூட்டின அவ்வளவு பத்திரிகைகளிலிருந்தும் வந்த தமிழ்வீர உணர்வாளர்களான அத்தனை பத்திரிகையாளர்களும் அஞ்சலி செலுத்தினத காணக் கண்கோடி வேணும்.

ஒருத்தர் தன்னும் அதை வெளிப்படையா எடுத்துச் சொல்லி, அட சனமும் செத்ததப்பா. நாங்கள் இப்ப தேர்தல்களின்போது பாவிக்கிற மாவீரரும் செத்தவையள். எல்லாருக்கும் சேர்த்து அஞ்சலி செலுத்துங்கோ எண்டு சொல்லுவினம் எண்டு பார்த்தால் ஊகூம்... அல்லது வெளிநடப்பாவது... ஊகூகூகூம்!

சாப்பாட்டு நேரம்தான் எங்கட இன உணர்வுப் பத்திரிகை ஜாம்பவான்கள் குசுகுசுத்துப் போட்டு மெல்ல சொல்லிச்சினம். அதுவும் யாரிட்ட? தமிழரான லேக் ஹவுஸ் பத்திரிகை ஆசிரியரிட்டை. அவரும் ஏதோ நடந்து போச்சு எண்ட தோரணையில அதுவும் நிகழ்ச்சி முடியேக்க காலையில ஒரு மொழி பெயர்ப்பு தவறு நடந்து போச்சு எண்டு சமாளிச்சார்.

ஆனா அங்க ஒரு தவறும் நடக்கேல்ல் எண்டதும் தெட்டத் தெளிவான உச்சரிப்பு இடம்பெற்றதும் எல்லாருக்கும் தெரியும்.

பிறகுதான் விஷயம் அறிஞ்சன். இந்த இலங்கை பத்திரிகைப் பேரவைக்காரரின்ர கையில வெளி நாட்டு ஸ்கொலர்சிப், ஸ்பொன்சர், சலுகைகள், வரப்பிரசாதங்கள் எல்லாம் குவிஞ்சு கிடக்குதாம்.

சனத்துக்கு எண்டால் சுடச்சுட எழுதி தாங்கள் உணர்வாளர்கள் எண்டு மார் தட்டலாம். ஆனா பேரவைக்காரரிட்ட முறைச்சுப் போட்டு சலுகைகளை இழக்க முடியுமோ? எண்டபடியால பொங்கிவாற பாலில தண்ணி ஊத்தினமாதிரி அடங்கிப் போட்டினம். நல்லா யோசிச்சுப் பார்த்தா தமிழ் உணர்வுப் பத்திரிகையாளரிட்ட மட்டும் இந்த இரட்டை வேசம் இல்லை. மாகாண சபை தேர்தல் பிரசார மேடையில தமிழீழம் பெற்றுத்தருவம் எண்ட கணக்கா வீரவசனம் பேசிப் போட்டு இண்டைக்கு அவை கலந்துகொள்ளுகிற அரச நிகழ்ச்சி களில சிங்கக் கொடிக்கு குடுக்கிற மரியாதையை பாக்க வேணுமே. அதைக் காணவும் கோடி கண் வேணும்.

ஏன் ரெண்டு கிழமைக்கு முந்தியும் எங்கட மாகாண அமைச்சர்மாருக்கு எத்தினையோ மில்லியன் ரூபா பெறுமதியான வாகனங்கள் வந்தது. அதை தாங்கள் போய் வாங்காமல் தங்கட அமைச்சு செயலாளர்மாரை விட்டுத்தானே வேண்டினவையள். கவர்னரும் கோபப்படாமல் "வாகனம் நீங்களா ஓடப்போறீங்கள்" எண்டு ஜோக்கடிச்சு செயலாளர்மாரை நெளியவைச்சிட்டு வலுமரியாதையா திறப்புக்களை குடுத்தார்.

பத்திரிகைப் பேரவைக்காரருக்கு முன்னால இன உணர்வைக் கக்கத்துக்கை வைச்சிட்டு நெளிஞ்சு நிக்கிற ஊடகக்காரரைப் போல எங்கட எம்பிமார், மாகாண அமைச்சர்மார், உறுப்பினர்களின்ர தில்லுமுல்லுகள்... அதுதான் சனத்துக்கு ஒருமுகம். ஆளுகிறவைக்கு ஒருமுகம். இதையெல்லாம்



பட்டியலில போட்டு நான் விலாவாரியா சொல்லுறதைவிட நீங்கள் ஆக்களை "நோட்" பண்ணி வாங்கோ... சுத்துமாத்து விளங்கும்!

---

[சிறுவர் கதை]

# கொடூரமான பூனை



முன்னொரு காலத்தில் உழவன் ஒருவன் பூனை ஒன்றை வளர்த்து வந்தான். கிழடாகிப் போன அந்தப் பூனையால் எலிகளைப் பிடிக்க முடியவில்லை.

இந்தப் பூனையால் எந்தப் பயனும் இல்லை என்று அதைக் காட்டில் விட்டுவிட்டு வந்தான்.

அங்கே உலவிக் கொண்டிருந்த பூனையை பெண் நரி ஒன்று பார்த்தது.

"ஐயா! தாங்கள் யார்? இப்பொழுது தான் தங்களை முதன் முறையாகப் பார்க்கிறேன்" என்று கேட்டது அது.

"நான் பூனை பிரபு" என்று கம்பீரமாகச் சொன்னது பூனை.

அதன் அழகிலும் கம்பீரத்திலும் மயங்கியது நரி. "ஐயா! என்னைத் திருமணம் செய்து கொள்ளுங்கள். உண்மையுள்ள மனைவியாக நான் நடந்து கொள்வேன். உங்கள் விருப்பங்களை எல்லாம் நிறைவேற்றி வைப்பேன்" என்றது.

பூனையும் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டது. இரண்டிற்கும் திருமணம் நடந்தது.

தான் சொன்னபடியே நடந்தது நரி. தனியே சென்று கோழிக் குஞ்சுகளைப் பிடித்து வரும், பூனைக்கு உண்ணக் கொடுக்கும். சில சமயம் அது பட்டினியாகவே கிடக்கும்.

ஒரு நாள் உணவு தேடச் சென்றது நரி. வழியில் அதை முயல் ஒன்று சந்தித்தது.

"நண்பனே! உன் வீட்டிற்கு நான் வரலாம் என்று இருக்கிறேன். எப்பொழுது வருவது?" என்று கேட்டது முயல்.

"என் வீட்டிற்கு வரும் எண்ணத்தை விட்டுவிடு. அங்கே பூனை பிரபு இருக்கிறார். அவர் கொடூரமானவர். உன்னைக் கண்டால் ஒரு நொடியில் கொன்று தின்று விடுவார்" என்றது நரி.

அங்கிருந்து ஓடிய முயல் வழியில் ஓநாயைச் சந்தித்தது. "உனக்குச் செய்தி தெரியுமா? நரியின் வீட்டில் பூனை பிரபு இருக்கிறாராம். அவர் மிகக் கொடூரமானவராம். யாரையும் கொன்று தின்று விடுவாராம்" என்றது அது.

இந்த விந்தையான செய்தியைப் பன்றியிடம் சொன்னது ஓநாய். பன்றி இதைக் கரடியிடம் சொன்னது.

முயல், ஓநாய், பன்றி, கரடி நான்கும் ஒன்றாகக் கூடின.

"எப்படியாவது பூனை பிரபுவை நாம் பார்க்க வேண்டுமே?" என்றது கரடி.

"உயிரின் மீது உனக்கு ஆசை இல்லையா?" என்று கேட்டது முயல்.

"எனக்கு நல்ல வழி ஒன்று தோன்றுகிறது நாம் நால்வரும் சேர்ந்து பெரிய விருந்திற்கு ஏற்பாடு செய்வோம். பூனை பிரபுவையும் நரியையும் விருந்திற்கு அழைப்போம்" என்றது ஓநாய்.

எல்லோரும் இதற்கு ஒப்புக் கொண்டனர்.

மேசையின் மேல் விதவிதமான உணவுப் பொருள்கள் பரிமாறப்பட்டன.

"யார் சென்று பூனை பிரபுவை அழைப்பது?" என்ற சிக்கல் எழுந்தது.

"எனக்கு தூங்கி வழிகின்ற முகம். நான் சென்று எப்படி அழைப்பேன்?" என்று மறுத்தது பன்றி.

"எனக்கு அதிக வயதாகி விட்டது. உடல் நலமும் சரியில்லை" என்றது ஓநாய்.

"ஏதேனும் ஆபத்து என்றால் என்னால் வேகமாக ஓட முடியாது" என்றது கரடி.

மூன்றும் முயலைப் பார்த்து, "விருந்துச் செய்தியை நீதான் சொல்லிவர வேண்டும்" என்றன.

முயல் நடுங்கிக் கொண்டே நரியின் வீட்டை அடைந்தது. நீண்ட நேரம் வெளியிலேயே காத்திருந்தது.

வெளியே வந்த நரி முயலைப் பார்த்து வியப்பு அடைந்தது.

"பன்றி, ஓநாய், கரடி மூன்றும் என்னை இங்கே அனுப்பின. நாங்கள் நால்வரும் சேர்ந்து தங்களுக்கும் பூனை பிரபுவிற்கும் சேர்த்து விருந்திற்கு ஏற்பாடு செய்துள்ளோம். உங்களுக்காகவே இந்த விருந்து. நீங்களும் பூனை பிரபுவும் இந்த விருந்தில் அவசியம் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும்" என்றது முயல். "நல்லது. நான் விருந்திற்கு வருகிறேன். பூனை பிரபுவும் என்னுடன் வருவார். நாங்கள் வரும் போது நீங்கள் நால்வரும் எங்காவது ஒளிந்து கொள்ளுங்கள். பூனை பிரபு, உங்களைப் பார்த்தால் நீங்கள் செத்தீர்கள். விருந்து எங்கே நடக்கிறது?" என்று கேட்டது நரி.

இடத்தைச் சொல்லிவிட்டு ஓட்டம் பிடித்தது முயல். தன் நண்பர்களைச் சந்தித்து நடந்ததைச் சொன்னது.

பயந்து போன நான்கும் என்ன செய்வது என்று சிந்தித்தன.

"நான் அந்த மரத்தில் ஏறிக் கொள்கிறேன்" என்றது கரடி.

"அந்தப் புதரில் நான் ஒளிந்து கொள்கிறேன்" என்றது ஓநாய்.

"உன் அருகிலேயே நானும் பதுங்கிக் கொள்கிறேன்" என்றது முயல்.

"அடர்ந்த அந்த மரங்களுக்குப் பின்னால் நான் மறைந்து கொள்கிறேன்" என்றது பன்றி.

பூனை பிரபுவும் நரியும் வரும் ஓசை கேட்டது. நான்கும் பதுங்கிக் கொண்டன.

பலவிதமான உணவுப் பொருள்களைப் பார்த்தது பூனை. அதற்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. "மியாவ், மியாவ்" என்று கத்திக் கொண்டே சாப்பிடத் தொடங்கியது.

புதரில் இருந்த ஓநாய், "எவ்வளவு பயங்கரமான விலங்கு? என்ன கொடூரமான குரல்? சாப்பிடும் வேகத்தைப் பார்த்தால் நம் விருந்து அதற்குப் போதாது. நம்மையும் கொன்று தின்னும் போல இருக்கிறது" என்றது.

"ஆமாம்" என்று நடுங்கிக் கொண்டே சொன்னது முயல்.

மரத்தில் இருந்த கரடியும் மறைந்து இருந்த பன்றியும் நடுங்கின்.

பூனை விருந்தை வயிறார உண்டது. மேடையின் மேல் படுத்துத் தூங்கத் தொடங்கியது.

மரத்தின் மறைவில் பதுங்கி இருந்த பன்றியின் வாலைக் கொசு ஒன்று கடித்தது. உடனே பன்றி தன் வாலை அசைத்தது.

சத்தம் கேட்டு விழித்தது பூனை. பன்றியின் வாலை எலி என்று தவறாக நினைத்தது அது.

"மாட்டிக் கொண்டாயா?" என்று கத்திக் கொண்டே எலியைப் பிடிக்கப் பாய்ந்தது. நேராகப் பன்றியின் முகத்தில் போய் மோதியது அது.

எதிர்பாராமல் நடந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்தது பன்றி. அங்கிருந்து "தப்பித்தேன்" என்று கத்திக் கொண்டே ஓட்டம் பிடித்தது.

பன்றியைக் கண்டு பயந்த பூனை ஒரே பாய்ச்சலில் அருகில் இருந்த மரத்தில் ஏறியது.

அங்கிருந்த கரடி தன்னைத்தான் பூனை பிரபு கொல்ல வருகிறார் என்று பயந்தது. விரைந்து மரத்தின் உச்சிக் கிளைக்குச் சென்றது. அதன் எடை தாங்காமல் கிளை முறிந்தது. புதரில் மறைந்திருந்த ஓநாயின் மேல் விழுந்தது அது.

அலறி அடித்துக் கொண்டு ஓநாயும் ஓட்டம் பிடித்தது.

முயலும் அதைத் தொடர்ந்து ஓடியது.

வலியைத் தாங்கிக் கொண்டு "தப்பித்தோம் பிழைத்தோம்" என்று கரடியும் ஓடியது.

நீண்ட நேரத்திற்குப் பிறகு நான்கும் சந்தித்தன.


"பூனை பிரபு பார்ப்பதற்குச் சிறியவராக இருக்கிறார். நம் நால்வரையும் கொன்று தின்றிருப்பார். நல்ல வேளை தப்பித்தோம்" என்றது கரடி.

மற்ற மூன்றும் "ஆமாம்" என்றன.

நீதி: தற்செயலாக நடக்கும் சில செயல்கள் சிறியதைக் கூட பெரியதாக்கிக் காண்பிக்கின்றன.




# யா/நல்லூர் சென்.பெனடிக்ற் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்



அதிபர்
அருட்சகோதரி ஆ.ஞானதர்ஷினி

## வித்தியாலய வரலாறு

யா/நல்லூர் சென். பெனடிக்ற் வித்தியாலயம் யாழ். நகரின் கச்சேரி நல்லூர் வீதியில் நல்லூர் கோட்டப் பாடசாலைகளுள் முன்னணி ஆரம்பப் பாடசாலையாக திகழ்ந்து வருகின்றது.

1905.02.21ஆம் திகதி யாழ். மறை மாவட்ட ஆயர். வந்தனைக்குரிய யூலன் ஆண்டகையின் அனுசரணையுடன் கத்தோலிக்க சமய வளர்ச்சிக்கும், தமிழ் மொழி வளர்ச்சிக்கும் அரும் பணி புரிந்த அமரர் அருட்திரு நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசிரியர் அடிகளாரால் ஆசீர்வாதப்பர் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் ஆலயத்தின் விறாந்தையிற் சில பிள்ளைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட கல்விப் பணிக்கு முதல் ஆசிரியராக மறை ஆசிரியர் இறப்பியேற்பிள்ளை நியமிக்கப்பட்டார். ஏறக்குறைய 50 அடி நீளமும், 20 அடி அகலமும், நாலு பக்கமும் 03 அடி உயர சுவர்கள் கொண்டதாகவும் கிடுகுகளால் வேயப்பட்டதாகவும் இருந்தது.

1965இல் அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற நாள் வரை இப் பாடசாலை கத்தோலிக்க மிஷனின் பொறுப்பில் சிறப்புடன் இயங்கி வந்தது.

பங்கு மக்களின் விருப்பிற்கேற்ப யாழ். மறை மாவட்ட ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையின் முயற்சியினால், 1978இல் இருந்து அப்போஸ்தலிக்க கார்மேல் சபையைச் சேர்ந்த அருட்சகோதரிகள் பாடசாலைப் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

1997ஆம் ஆண்டில் பாடசாலைக்கென காணி கொள்வனவு செய்யப்பட்டு, கட்டடதிற்கான அடிக்கல் 19.05.2001 அன்று எம்.ஏ. பிரான்சிஸால் (முன்னாள் பொறியியலாளர், பாடசாலை வேலைப்பகுதி வ.கி.மா. அமைச்சு ) நாட்டப்பட்டது.

அருட்செல்வி எம்.தேவநேசம் அ.கா (அதிபர்) அவர்களின் பணிக் காலத்தில் அவரின் விடா முயற்சியாலும், அயராத உழைப்பினாலும் நூற்றாண்டு நிறைவில் 29.09.2005 அன்று அருட்திரு.ஜே.நீக்கிலஸ் அடிகளாரால் (குரு முதல்வர் யாழ்ப்பாணம்) ஆசீர்வதிக்கப்பட்டு கு.சிவபாலனால் (பொறியியலாளர் பாடசாலை வேலைப்பகுதி வலயம்) திறந்து வைக்கப்பட்டது. மூன்று மாடிக்கட்டடம் அருட் சகோதரி தேசநேசத்தின் காலத்தில் கட்டப்பட்டது.

பாடசாலை ஒரு வளர்ச்சிப் பாதையை நோக்கிச் சென்று கொண்டு இருக்கின்றது என்பதற்கு மாணவர்களின் அடைவு மட்டங்கள், மாணவர்களின் கோட்ட, வலய, மாகாணமட்ட போட்டி களின் வெளிப்பாடுகள் சான்று பகர்கின்றன.

இப் பாடசாலையின் பெற்றோர், பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியோரின் பங்களிப்பு இவ் வித்தியாலய வளர்ச்சியிற் சிறப்பான அம்சமாகும்.

நூறு ஆண்டுகளைக் கடந்து இன்று பெருமையுடன் மிளிர்வதற்குப் பல்வேறு வகையில் அர்ப்பணிப்புடன் பணி புரிந்த, பணி புரிகின்ற ஆசிரியர்களின் சேவையும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

நவீன கற்பித்தல் சாதனங்களின் ஊடாக மாணவர் தமது கற்றலை மேற்கொண்டு புதிய சாதனைகளைப் படைக்க அருட்சகோதரி. எம். ஞானதர்சினி விடாமுயற்சியுடன் கல்வித் திணைக்களத்திடம் இருந்து மல்ரி மீடியாவினைப் பெற்று மாணவர் இலகுவாகக் கற்க வழிவகுத் தார். அத்துடன் ஆங்கில அறிவு வளர்ச்சியில் மிகுந்த அக்கறை எடுத்து ஆங்கிலக் கல்வியினை புகட்டி வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும்

தொகுப்பு
எஸ். பி.

## அருட் சகோதரிகள் வரிசையில்

அருட் சகோதரி ஸ்ரனிஸ்லஸ் (1978 - 1984)
மேரி அருட்சகோதரி எலோய்சா (1984 - 1985)
அருட்சகோதரி எம்.லைசா் (1985 - 1994)
அருட்சகோதரி ஜீ.செல்வராணி (1994 - 1996)
அருட்சகோதரி மேரிதேவநேசம் (1997 - 2007)
அருட்சகோதரி மரியமலர் யோசெவ் (2007 - 2010)

## பாடசாலைத் தரவுகள்

அதிபர் - அருட்சகோதரி எம்.ஞானதர்சினி
அமைந்துள்ள இடம் - நல்லூர்
மாவட்டம் - யாழ்ப்பாணம்
மாகாணம் - வடக்கு
கிராமசேவையாளர் பிரிவு - J/91
பிரதேச செயலாளர் பிரிவு - நல்லூர்
ஆசிரியர் தொகை - 14
மாணவர் தொகை - 347

**தூரநோக்கு** - VISION

"பண்புசார் வள முகாமைத்துவத்தினூடாக தரமான கல்வி உள்ளீடுகளை அதி உச்ச பயன்பாட்டிற்கு உட்படுத்தி நெறி முறையான சமூகம் ஒன்றைக் கட்டியமைத்தல்"

**நோக்கக் கூற்று** - MISSION

01) தகைமைத்திறனுள்ள சமநிலை ஆளுமை மிக்க மாணவ சமூதாயத்தினை உருவாக்குதல்.
02) சிறந்த பண்பாட்டு விழுமியங்களைக் கையளிப்பதன் மூலம் சமூகப் பொருத்தப்பாடுடைய மாணவ சமுதாயத்தினை உருவாக்குதல்
03) நவீன உலகின் அறைகூவல்களை எதிர்கொள்ளக் கூடிய அறிவு, திறன், மனப்பாங்கினைக் கொண்ட மாணவர் சமுதாயத்தினை உருவாக்குதல்.


கால்கோள்விழா


2013 ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்றோர்.


இல்ல விளையாட்டுப்போட்டி


ஆசிரியர் தினம்

# சிந்தனை கூடம் ஆய்வு நிறுவனத்தால் உயர்தர மாணவருக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சிந்தனைகூடம் - ஆய்வு அபிவிருத்தி நிறுவனமும் கொழும்பிலுள்ள SL 2 college நிறுவனமும் இணைந்து க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கொன்றினை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி கோட்போர் கூடத்தில் அண்மையில் நடாத்தியுள்ளன. இக்கருத்தரங்கில் உயர்தர பரீட்சைக்கு பின்னர் மாணவர்கள் எவ்வழியில் தங்கள் உயர்கல்விக்கான வாய்ப்புகளைப் பெறலாம் என்பது பற்றி இக் கருத்தரங்கில் ஆராயப்பட்டது.

சிந்தனைக்கூடத்தின் பணிப்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற இக் கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக கல்வியியற் துறைப் பேராசிரியர் எஸ். சின்னத்தம்பி, வணிக முகாமைத்துவத் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.வேல்நம்பி, கணணித்துறைத் தலைவர் கே.தபோதரன் ஆகியோர் தம்தமது துறை சார் கல்வி வாய்ப்புகள் பற்றி அறிவுரை வழங்கினார். கொழும்பில் இருந்து வருகைதந்தவர்த்த நிறுவனங்களின் பிரதிநிதிகளும் மலேசிய இந்திய பல்கலைக் கழகங்களின் வெளிவாரி கற்கை நிறுவனங்களின் பிரதிநிதிகளும் மாணவர்களுக்கு கல்வி, தொழில்வாய்ப்பு, பயிற்சி பற்றிய கருத்துரைகளை வழங்கினார்.

க.பொ.த.ப உயர்தர மாணவர்களுக்குப் பெரிதும் பயன் மிக்கதாக அமைந்த இக்கருத்தரங்கில் இந்து மகளிர் கல்லூரியில் உயர்தரம் பயிலும் 400 மாணவிகளுடன் யாழ் இந்துக்கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி ஆகியவற்றிலிருந்து தலா 100 மாணவர்களும் பங்கு கொண்டனர்.

இக்கருத்தரங்கில் எமது பல்கலைக்கழகங்க ளில் உள்வாரியாக கல்விகற்க வாய்ப்புப்பெறும் 8வீதமானோரைத் தவிர ஏனைய 92மாணவர்களும் என்னவழியில் வெளிநாட்டு பல்கலைகழகங்களை பயன்படுத்தலாம் என்பது பற்றியும் தொழில்சார் கற்கைகளை எங்கு எவ்வகையில் மேற்கொள்ளலாம் என்பது பற்றியும் தெளிவுபடுத்தப்பட்டது.

இளைய மாணவ சமூகத்தினருக்கு நல் வழிகாட்டியாக அமைந்த இக் கருத்தரங்கு தொடராக யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளிலும் வன்னிப் பகுதியிலும் தொடர்ந்து இடம்பெறவுள்ளதாக சிந்தனைக்கூட பணிப்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்தார்.(63)

## கைத்தொலைபேசி வழங்கல்

நாடெங்கிலுமுள்ள மத்தியஸ்தசபைத் தவிசாளர்களுக்கு மத்தியஸ்த சபைகளின் கலந்துரையாடல்களின் விபரங்களை குறுந்தகவல் மூலம் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு உடனுக்குடன் அனுப்புவதற்கு கைத்தொலை பேசிகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேசிய மத்தியஸ்த தினவிழா கொழும்பு மன்ற கல்லூரியில் நடைபெற்ற விழாவில் கைத் தொலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளன. (08)

## வரலட்சுமி விரத நிகழ்வு

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வெங்கடேஷ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான ஸ்ரீ வரலட்சுமி விரத உற்சவம் எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இவ் விரத உற்வசதினத்தன்று காலை 6.45 மணிப் பூஜையைத் தொடர்ந்து தீபாராதனைகள் நடைபெற்று அமபாள் பத்மாசனத்தில் திருவீதியுலா வருவதுடன் நோன்பு நூல் வழங்கல் நடைபெறும்.

நோன்புநூல் பெறவதற்கான பற்றுச்சீட்டுக்கள் ஏகாதசிதினமான கடந்த 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் வழங்கப்பட்டு வருகிறது. நோன்பு நூல் பெறவிருக்கும் அடியார்கள் எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னதாகப் பதிவுகளை மேற்கொண்டு நெருக்கடிகளைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (137)

## மீளக்கையளிக்கப்படாத அம்புலன்ஸ் வண்டி

(மானிப்பாய்)

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையில் சேவையில் ஈடுபட்டு வந்த அம்புலன்ஸ் வண்டி நயினாதீவுக்க மகோற்சவ காலத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட போதிலம் இதுவரை வைத்தியசாலையிடம் மீளக்கையளிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அவசரசிகிச்சைக்காக வெளிச்செல்லும் நோயாளர்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக வயோதிபர்கள், கர்ப்பிணித்தாய்மார் மற்றும் சடுதியாக விபத்தில் காயமடைவோர் அவசரசிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு வர முடியாத நிலையில் ஏற் படுத்துவதாகவும் நோயாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சில சந்தர்ப்பங்கள் அயல்பிரதேச வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டியைப் பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படும் அம்புலன்ஸ் வண்டி வைத்தியசாலைக்கு அத்தியாவசியமான ஒன்றாகும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (104)

வெள்ளி நற்சிந்தனை...



## இயந்திர பூதம்

எல்லோரும் இன்பமே வேண்டுவர், பெரும்பாலோனோர் தேடும் உலகின்பம் நீடித்திருப்பதில்லை இன்பத்துடன் துன்பமும் அதில் கலந்து களிப்புடன் கவலையும் சேர்ந்திருக்கும் இன்று நமது கண்முன்பே மகுடங்கள் மண்ணில் உருளுகின்றன: மன்னாதி மன்னரும் வில்லாதி வில்லரும் மனங்கலங்கித் திகைக்கின்றனர்.

மனிதமூளை இயற்கையை ஆராய்ந்து பௌதீக அற்பதங்கள் செய்கிறது நியூட்டன் முதல் மார்க்கோணி வரையில் வந்த புலவர் இயற்கை யில் உள்ளத்தைத் துருவிப் பார்த்துப் பல பௌதீக இரசாயன கணித இரகசியங்களைக் கண்டு பிடித்தனர். அவை இன்று நாகரிக உலகை ஆளுகின்றன. புகைவண்டி, மின்சாரவண்டி, ஆகாயக்கப்பல், பேசும்படம், வானொலி, மின்சார இயந்திரங்கள், தொலைக்காட்சி, Face Book, எல்லாம் அற்பதமாகத் தான் இருக்கின்றன. ஆனால், தான் செய்த கருவிகளால் மனிதன் தானே தற்கொலைசெய்தும் கொள்கின்றான். அவனது பௌதீகஞானம் அவன் உயிரையே பதம் பார்க்கிறது.

பார்மாசுரனுக்கு வரங்கொடுத்து போல் இயந்திரப்புதம் அவனையே கொன்று குவிக்கிறது. உலகில் எங்கும் குண்டுச்சத்தம், பிணக்குவை, ஆணவ மாயததின் அழிநடனம்! கேட்டால் "உலக சமாதானத்திற்காகவே" குண்டு போடுவதாக ஒவ்வொருவரும் மார்பு தட்டுகின்றனர்! நாட்டில் சமய உபதேசத்திற்கு மேல் கொலையுபதேசமே அதிகமாயிருக்கிறது. மண் வெறியில் மனிதன் கண்ணிழந்தான். இங்கு எத்தனையோ மகான்கள் நல்வழி காட்டினர். மனிதனைப் பிடித்த அகம்பாவம் இன்னும் விடவில்லை மனிதன் மெய்மை மறந்தான் பொய்யை பற்றினார்: அருளைக்காணாது இருளை விரும்பினான்: அன்பை விடுத்தான் துன்பமே அடுத்தான் தலைவனை –இறைவனை மறந்தான்: தன்னையும் அறியான் உலகையும் அறியான் – ஆசை ஆணவச் சிறையில் அழிகிறான்.

இதுவோ வாழ்க்கை? கருக்குழியிலிருந்து புதைககுழிக்குச் செல்லும் ஆடம்பரப் பவனியோ வாழ்க்கை? நான் யார்? இந்த உடல் எப்படி வந்தது ? இந்த உலகிற்கு நாயகன் யார்? அவற்றின் மூலம் யார்? என அறிவுள்ள மனிதன் விசாரிக்கிறான். தானும் உலகம் இன்புறும் வழியைத் தேடுகிறான்

ஷஷஆடும் கருணைப் பரஞ்சோத
அருளைப் பெறுவதற்(கு) அன்புநிலை
தேடும் பருவம் இது கண்டீர்,
சேரவாரும் சகத்தீரே!;;

ஆம், உளந்தோறும் ஆடும் பரஞ்சோதிப் பெருமான் அருளைப் பெறுவதே இன்பம்! ஆனால், அதற்குவழி–

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

## பதிவிறக்கப் பெட்டகம்

பா.ஜ.கவுக்கு நெருக்கமான முன்னணி சிந்தனை குழாமான, புதுடில்லியை தளமாகக் கொண்டு இயங்கிவரும் விவேகானந்தா சர்வதேச நிலையத்தின், இலங்கை விடயங்கள் தொடர்பிலான கருத்துக்களின் சாராம்சம் இதுதான் :–

பல வருடங்களாக, காஷ்மீர் விடயத்தை முன்னிலைப்படுத்தி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையுடன் நாங்கள் சண்டைபிடித்து வருகிறோம். மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற அமைப்புக்களால் இன்று, இலங்கை எவ்வாறு ஜெனிவாவில் அவமானப்படுத்தப்படுகிறதோ, அதற்கு எந்த வகையிலும் குறையாதளவில் இந்தியாவையும் மேற்படி அமைப்புக்கள் அவமானப்படுத்தியுள்ளன. இன்று இலங்கை மீதான பிரேரணைகளை ஊக்குவித்துக கொண்டிருக்கும் அமெரிக்க இராஜாங்க திணைக்களம், மறுபுறத்தில் தன்னுடைய வருடாந்த மனித உரிமைகள் அறிக்கையில் இந்தியாவை காயப்படுத்திக் கொண்டுதான் இருக்கிறது.

இந்தியா தன்னுடைய கடந்த கால அனுபவங்களை மறக்கலாகாது. மனித உரிமைகள் விவகாரத்தை ஒரு அரசியற் கருவியாக (Political Instrument) பயன்படுத்துவதை நாம் வன்மையாக எதிர்க்கவேண்டும். இலங்கையின் மீதான இந்தியாவின் வகிபாகமானது, அமெரிக்க ஈடுபாட்டிற்கு வெகு தொலைவில் உள்ளது. அந்த வகையில், எமது அயலவர்கள் தொடர்பான மனித உரிமைச் செயற்பாடுகள் சிக்கல் நிறைந்தவை ஆகும். நாங்கள் சூழ்சிகளுக்குள் அகப்பட்டு, இப்படியான விடயங்களை உள்வாங்கிக் கொள்ளுவோமாயின், நாம் எங்களுக்கான இராஜதந்திர வாய்ப்புக்களை அயல் நாடுகளில் இழக்க வேண்டிவரும்.

அமெரிக்காவுடனான எமது மூலோபாய கூட்டானது, இப்பிராந்தியத்தில் எமது ஆர்வங்களுக்கு முக்கியத்துவமளிப்பதாக இருக்க வேண்டுமேயன்றி, மாறாக சங்கடமான நிலைப்பாடுகளுக்கு வழிவகுப்பதாக இருந்துவிடக் கூடாது. எனவே, இந்தியா ஆகக் குறைந்தது அயலுறவு விவகாரங்களிலாவது, அமெரிக்க வற்புறுத்தல்களுக்கு இடமளிக்காது, சுயாதீனமான கொள்கை ஒன்றை கைக்கொள்ள வேண்டும்.

இந்த வாதத்தை கருத்தில் கொண்டு தற்போது பா.ஜ.க. எடுத்திருக்கும் நிலைப்பாட்டை நோக்குவோமாயின் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது?

இந்தியா இலங்கை மீதான மனித உரிமைகள் விவகாரத்தில் ஒரு எல்லைக்கு மேல் செல்லக்கூடாது என்று கருதுகிறது. இதன் காரணமாகவே அமெரிக்க அனுசரணையின் கீழ் கொண்டு வரப்பட்ட விசாரணை யோசனையை உள்ளடக்கிய மூன்றாவது பிரேரணைக்கு இந்தியா, ஆதரவாக வாக்களித்திருக்கவில்லை. இதற்கு பின்னால் இருக்கும் இந்தியக் கவலை, விளங்கிக்கொள்ள முடியாத ஒன்றல்ல. ஏற்கனவே, காஷ்மீர் மற்றும் இன்னும் சில உள்ளக விவகாரங்களில் இந்தியா சிக்கியுள்ளது. எனவே, உடனடி அயல் நாடாக விளங்கும் இலங்கையின் மீதான ஐ.நா. விசாரணைக்கு இந்தியா பகிரங்கமாக ஒத்துழைப்பு வழங்கினால், அதுவே பின்னர் ஒரு பூமறங்காக இந்தியாவை நோக்கியும் திரும்பாது என்பதற்கு எந்தவொரு உத்தரவாதமும் இவ்வுலகில் இல்லை. நிரந்தர நண்பர்களை கொண்டிராத உலக அரசியல் அரங்கில் எவர், எப்போது வேட்டைக் காரனாக மாறுவார் என்பதை எவரும் அறியார்.

இந்த விடயங்களை கருத்தில் கொண்டுதான் இந்தியா, இலங்கையின் மீதான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் விசாரணையை நோக்குகிறது. எனவே, தற்போதைய பா.ஜ.க. அரசு எடுத்திருக்கும் நிலைப்பாட்டை எண்ணி ஒப்பாரி வைப்பதை விடுத்து, இதுதான் உலகம் என்பதை விளங்கிக்கொண்டு, இவ் உலகில் தமிழர்கள் எவ்வாறு சிந்தித்தால், உயர்வுண்டாகுமென்று சிந்திப்பதே நன்று. நன்றாக சிந்திக்கக் கற்றுக்கொள்வது மட்டுந்தான் இப்போதைக்கு தமிழர்களுக்கு கைகொடுக்கக் கூடிய ஒன்று. வேறு எதுவுமில்லை. – யதீந்திரா

பொதுவாக சிங்கள மக்கள் ஆட்சியாளர்களைப் போல் இனவாதிகளல்லர். ஆட்சியாளர்கள் அல்லது வேறு குழுக்கள் தூண்டினாலன்றி அவர்கள் சிறுபான்மையினருக்கு எதிராக செயற்படுவதில்லை.

அதேவேளை, அதிகாரத்தில் உள்ள சிங்களத் தலைவர்கள் தைரியமாக இனவாதத்தை எதிர்த்து நின்ற பல சந்தர்ப்பங்களின் போது சிங்கள மக்களும் அந்த நிலைப்பாட்டை ஆதரித்த நிலைமைகளே அதிகமாக இருக்கிறது.

உதாரணமாக 1994ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் இருக்கின்றன என்றும் அவற்றுக்காக அரசியல் தீர்வொன்று தேவைப்படுகின்றது என்றும் தாம் பதவிக்கு வந்தால் முறையான அதிகாரப் பரவலாக்கல் முறையொன்றை அறிமுகப்படுத்துவதாகவும் கூறி ஜனாதிபதி தேர்தலில் குதித்த சந்திரிகா குமாரதுங்க 62 சதவீதம் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியானார். – எம்.எஸ்.எம்.ஐயூப்

# தனியார் சேவைக்கு போட்டியாக

# இ.போ.சவை முன்னேற்ற திட்டம்

## இவ்வருடத்தில் 2200 பேருந்துகள் இறக்குமதி

(கொழும்பு)

தனியார் பேருந்துகளுக்கு போட்டியாக இ.போ.சபையை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இதற்காக இந்த வருடத்தில் 2200 புதிய பேருந்துகள் கொள்வனவு செய்யப்படவுள்ளதாகவும் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்து சபைக்கு இந்த வருடத்தில் 2200 பேருந்துகள் தருவிக்கும் திட்டத்தின் கீழ் இந்த மாத இறுதிக்குள் முதற் கட்டமாக 300 பேருந்துகள் வந்தடைய இருப்பதாக போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்தார். புதிய பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துவதோடு, பாவனையில் உள்ள பழுதான ஆயிரம் பேருந்துகளை ஏலத்தில் விற்க இருப்பதாக கூறிய அவர் புதிய பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துவ தோடு, இ.போ.ச. முகம் கொடுக்கும் பல பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படும் எனவும் குறிப்பிட்டார்.

இ.போ.ச.வின் தற்போதைய நிலைமை குறித்து விளக்கமளிக்கும் ஊடக மாநாடு நேற்று முன்தினம் இ.போ.ச.தலைமையகத்தில் நடைபெற்றது. வருமானம் ஈட்டி மீளச் செலுத்தும் அடிப்படையில் இந்த வருடத்தினுள் 2200 பேருந்துகளை தருவிக்க அனுமதி கிடைத்துள்ளது. இந்திய கம்பனியொன்றினூடாக இந்த பேருந்துகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இதில் ஆயிரம் பேருந்துகளை திறைசேரி கொள்வனவு செய்யும். 1200 பேருந்துகளை இ.போ.ச.கொள்வனவு செய்து உழைத்து மாதாந்தம் அதற்கான குத்தகை தொகையை செலுத்தும். இந்த வருட இறுதிக்குள் இ.போ. ச. பேருந்துகள் 6 ஆயிரமாக அதிகரிக் கப்படும். 15 - 20 வருடம் பழைய பேருந்துகளை சேவையில் இருந்து ஒதுக்குவதற்கு தீர்மானித்துள் ளோம். நாடு பூராவும் 106 டிப்போக்கள் உள்ளதோடு, ஒவ்வொரு டிப்போவுக்கும் 10 பேருந்துகள் வீதம் வழங்கப்படும். தூர சேவையில் கூடுதலான பேருந்துகள் ஈடுபடுத்தப்படவுள்ளன.

106 டிப்போக்களில் 80 டிப்போக்களின் ஊழியர்களுக்கு குறித்த மாதத்தினுள் சம்பளம் வழங்கப்பட்டது. மோசடி நடைபெறும் டிப்போக்களில் சம்பளம் செலுத்துவது தாமதமாகியுள்ளது. சிலர் இணைந்து வருமானத்தை மோசடி செய்கின்றனர். கம்பஹா டிப்போவில் தினமும் ஒரு இலட்சம் ரூபா நிதி மோசடி செய்யப்படுகிறது. எனவே இவ்வாறான டிப்போ முகாமையாளர்களை மாற்றி புதியவர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாடு பூராகவும் உள்ள 34 ஆயிரம் இ.போ.ச. ஊழியர்களுக்கும் 12,800 ரூபா இ.போ.ச.தலைமையகத்தினால் சம்பளம் வழங்கப்படுகிறது. எஞ்சிய சம்பளம் உழைத்து செலுத்தப்படுகிறது. டிக்கட் வழங்காமல் பணம் மோசடி செய்வதைத் தடுப்பதற்காக சுற்றிவளைப்பு தேடுதல்களை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளோம். இ.போ.ச. 70 வீதம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. புதிய பேருநதுகளை சேவையில் ஈடுபடுத்தி அதன் தரத்தை அதி கரிக்கவும் வருவாயை கூட்டவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இம் மாத இறுதியில் 42 ஆசனமுள்ள 100 பேருந்துகளும் 57 ஆசனமுள்ள 200 பேருந்துகளும் தருவிக்கப்படும். அடுத்த மாதம் 500 பேருந்துகளும் செப்ரெம்பரில் 500 பேருந்துகளுமாக டிசம்பர் முடிவுக்குள் 2200 பேருந்துகளும் தருவிக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்படும் எனத்தெரிவித்தார்.

# உதைபந்தாட்ட வாய்த்தர்க்கம்

# குழு மோதலாக வெடித்தது

## ஒரே ஊரில் எழுவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட ஒரே ஊரைச் சேர்ந்த ஏழு பேர் படுகாயமுற்ற நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் நள்ளிரவில் சேர்க்கப்பட்டனர்.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இடம்பெற்ற வாய்த் தர்க்கத்தைத் தொடர்ந்து, தமது சொந்த இடத்திற்குச் சென்ற இரு பிரிவினர் பின்பு குழுக்களாக சேர்ந்து நடத்திய மோதலைத் தொடர்ந்தே காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

இளவாலை வசந்தபுரத்தைச் சேர்ந்த சகோதரர்களான மகேந்திரன் ரஞ்சித்ராஜ் (வயது 32), மகேந்திரன் அசோக்குமார் (வயது 30), மகேந்திரன் இராஜ்குமார் (வயது 28) மற்றும் மார்க்கண்டு கருணானந்தன் (வயது 21), ஆனந்தராசா கபிலன் (வயது 23), பூதப்பிள்ளை சுரேஷ்குமார் (வயது 31), இந்திரஜித் தவனேசன் (வயது 32) ஆகியோரே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்களாவர். இந்தச் சம்பவத்தில் மற்றும் சிலர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்கள். இதனைத் தொடர்ந்து இளவாலைப் பொலிஸார் தகவல் அறிந்து குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டது விசாரணை களையும் முன்னெடுத்து வருகின்றனர்.

# புலம்பெயர் வாழ்வியலை சொல்லும்

# “மாறுதடம்” இன்று யாழில் வெளியீடு




(யாழ்ப்பாணம்)

புலம்பெயர் வாழ்வியல் தடங்களின் தடயங்களை மையக்கருவாக வைத்து சுவிற்சர்லாந்து வாழ் புங்குடுதீவு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ச.க.ரமணின் தயாரிப்பில் உருவான இலங்கை மற்றும் சுவிஸ் கலைஞர்களின் ‘மாறு தடம்’ முழு நீளத்திரைப் படம் இன்றைய தினம் யாழ்ப்பாணத்திலும், மன்னாரிலும் திரையிடப்பட உள்ளது.

புலம் பெயர்ந்து சுவிஸில் வாழும் முதற் தலைமுறையினருடன், அவர்களது வாரிசுகளான இளந்தலை முறையினரும், 25 வருடங்களின் பின்னர் புகலிடம் கோரிவரும் அடுத்த தலைமுறையினரும் சந்திக்கும் காலகட்டத்தை மையக்கருவாக வைத்து உருவாகியிருக்கிறது மாறுதடம்.

இன்றையதினம் யாழ்ப்பாணத்திலுள்ள ராஜா திரையரங்கு 2 இல் பிற்பகல் 3.30 மணிக்கு காட்சி ஆரம்பமாகும். தொடர்ந்து நாளை, நாளை மறுதினமும் காட்சிப்படுத்தப்படும். இதே போன்று இன்றைய தினம் மன்னாரிலும் காட்சிப்படுத்தப்படும்.

தொடர்ந்து வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, கொழும்பு ஆகிய பிரதேசங்களிலும் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

# டி.சீ.டி.ஐஸ்கிறீம்

# விசாரணை அவசியம்

(கொழும்பு)

டீ.சீ.டீ பதார்த்தம் அடங்கிய பால்மாக்களில் தயாரிக்கப்பட்ட ஐஸ்கிறீம் தானசாலைகளில் வழங்கப்பட்டமை தொடர்பில் உரிய விசாரணைகள் நடாத்தப்பட வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கையை அரச தாதி அதிகாரிகள் சங்கத் தலைவர் சமன் ரத்னப்பிரிய விடுத்துள்ளார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

சுகாதார அமைச்சின் தலைமையில் நுகர்வோர் அதிகார சபையையும் இணைத்துக் கொண்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# தமிழ்த்தின நாடகப் போட்டி

# முதலிடம் பிடித்தது ஸ்கந்தா



(கந்தரோடை)

அகில இலங்கை ரீதியாக இடம்பெற்ற தமிழ்த் தின நாடகப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்த வரோதயக் கல்லூரி முதலிடத்தைப் பெற்றுள்ளது. தேசிய மட்ட தமிழ்த் தினப் போட்டி கடந்த 20 ஆம் திகதி ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் முதல் பரிசு பெற்ற மர்மமுடிச்சு என்ற நாடகத்தை நாடகமும் அரங்கியலும் ஆசிரியர் பு.கணேசராஜா நெறியாள்கை செய்திருந்தார். தேசிய ரீதியாக கடந்த வருடம் இடம்பெற்ற தமிழ்த் தினப் போட்டியிலும், ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் நாடகம் முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# 264 கிலோகிராம்ஹெரோயின்

# இவ்வருடத்தில் இதுவரை பறிமுதல்

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டிற்கு கொண்டுவரப்பட்ட 264 கிலோகிராம் ஹெரோயின் போதைப் பொருள், பொலிஸார் மற்றும் சுங்கத் திணைக்களத்தினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

131 கிலோகிராம் ஹெரோயின் சுங்கத் திணைக்களத்தினாலும், 133 கிலோகிராம் ஹெரோயின் பொலிஸாராலும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


பறிமுதல் செய்யப்பட்டுள்ள ஹெரோயின் போதைப்பொருளில் அதிகமானவை பாகிஸ்தானில் இருந்தே கொண்டு வரப்பட்டுள்ளன. சுங்கத் திணைக்களத்தால் இதுவரையில் கைப்பற்றப்பட்டுள்ள ஹெரோயின் போதைப் பொருள், சுமார் 100 கோடி ரூபா பெறுமதியானது என சுங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

அத்துடன் பாகிஸ்தானின் கராச்சியில் இருந்து வருகை தரும் பயணிகள் தொடர்பில் சுங்க அதிகாரிகள் அதிக கவனம் செலுத்துவதுடன், பாகிஸ்தானில் இருந்து கொண்டு வரப்படும் பொருட்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்படுவதாக லெஸ்லி காமினி தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்கள் பாரியளவில் வெற்றியளித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.


நாட்டிற்கு போதைப்பொருளை விநியோகிக்கும் பிரதான இரண்டு நபர்கள் அடையாளங்காணப்பட்டு, விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் நாட்டிற்குள் போதைப பொருளை விநியோகிக்கும் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ii) ஆகக் கூடுதலாக உள்ள மீனிற்கும் ஆகக் குறைவாக உள்ள மீனிற்கும் இடையிலான வித்தியாசம் யாது? ------------------------------------

23. 


2cm இடைவெளியில் ஆணிகள் அறைந்துள்ள கேத்திர கணிதப் பலகை உருவில் காட்டப்பட்டுள்ளது. ஒரு மெல்லிய றப்பர் பட்டியினால் ஆணிகளைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள வடிவத்தின் பரப்பளவு யாது?

------------------------------------

24. 


உருவில் நிழற்றப்படாத பகுதியை முழு உருவின் பின்னமாக எழுதுக.

------------------------------------

25. 


அருகில் தரப்பட்ட அமைப்பு ஒரு முக்கால் வட்டமாகும். அதன் சுற்றளவு எத்தனை சென்ரிமீற்றர்.

------------------------------------


26. 

வழங்கப்பட்டுள்ள சதுரக் கோட்டுப்படம் சம பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் நிழற்றப்படாத பகுதியை தசமத்தில் எழுதுக.

------------------------------------

27. கட்டம் ஒன்றின் 1 பக்க நீளம் 2cm ஆகும். தரப்பட்ட உருவில் நிழற்றிய பகுதியின் பரப்பளவு யாது?

------------------------------------



28. ஒரு தேங்காய் குவியலில் $\frac{2}{7}$ பங்கு பழுதடைந்துள்ளன நல்ல தேங்காய்களின் எண்ணிக்கை 200 ஆகும். அக்குவியலில் உள்ள மொத்தத் தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

------------------------------------

29. கழிக்குக. $\frac{5}{6} - \frac{2}{3} =$ ------------------------------------

**இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் நாளை வெளியாகும்**



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - I
1 மணி 15 நிமி

# கல்வி முரசு

01. 2010 ஆம் ஆண்டில் 50 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடும் திரு. மோகன் தமது 30 ஆவது பிறந்த தினத்தை எந்த ஆண்டில் கொண்டாடினார்?

------------------------------------

02. வெற்றிடங்களைச் சரியாக நிரப்புக.


| நாணயத் தாள் வகை | நாணயத் தாள் எண்ணிக்கை | பணம் |
|---|---|---|
| ரூபா 50 | 1 | ரூபா 50 |
| ரூபா 20 | ------------------ | ரூபா ------ |
| ரூபா 10 | ------------------ | ரூபா ------ |
| மொத்தம் | 6 | ரூபா 130 |

03. 600 இனிப்புக்களில் 60 ஐ மீதப்படுத்தி வைத்து மற்றைய எல்லாம் ஒரு பைக்கற்றில் 5 வீதம் இருக்குமாறு சிறிய பைக்கற்றுகளாகப் பொதிசெய்யப்பட்டன.

(i) சிறிய பைக்கற்றுகளில் பொதி செய்யப்பட்ட இனிப்புக்களின் மொத்த எண்ணிக்கை யாது? ----------

(ii) அத்தகைய எத்தனை சிறிய இனிப்புப் பைக்கற்றுகளைத் தயார்செய்யலாம்? ----------

04. உருவில் காணப்படும் தகவல்களுக்கு ஏற்ப வெற்றிடங்களை நிரப்புக.



1 kg 750g　　3 kg 250g　　---- kg ----g


05. 1500ml கொள்ளளவுள்ள ஒரு பாத்திரத்தில் 900 ml நீர் உள்ளது. அப்பாத்திரத்தில் மேலும் 900 ml நீரைக் கவனமாக ஊற்றும்போது பாத்திரத்திலிருந்து வெளியேறும் நீரின் கனவளவு யாது? ------------------ml

06. பிற்பகல் 2.45 இற்கு வீட்டிலிருந்து புறப்பட்ட கீதா 45 நிமிடத்தில் நூல்நிலையத்திற்குச் சென்றாள். அவள் அங்கு 40 நிமிடங்கள் இருந்தாள்.

(i) கீதா நூல்நிலையத்திலிருந்து எத்தனை மணிக்குப் புறப்பட்டாள்? பிற்பகல் ------------ ------------

(ii) அந்நேரத்தை 24 மணித்தியாலக் கடிகாரத்திற்கேற்ப எழுதுக. ------------ ------------ மணித்தியாலம்


07. ஒரு காணியில் $\frac{1}{2}$ இல் காய்கறிப் பயிர்களும் $\frac{1}{4}$ இல் பூச்செடிகளும் நடப்பட்டுள்ளன. அவ்வாறு நடப்பட்டுள்ள நிலத்தின் அளவு மொத்தக் காணியில் என்ன பகுதியாகும். ------------------

08. 
ஒரு நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவை மொத்த உருவின் பரப்பளவின் பின்னமாகக் காட்டுக. ------------------

09. 100cm நீளமுள்ள ஓர் அளவை நாடாவின் நடுவில் 15cm நீளமுள்ள பகுதி சேதமடைந்துள்ளது. அப்பகுதியை அகற்றி மீதி இரு துண்டுகளும் 5cm வீதம் ஒன்றின் மீது ஒன்று வைத்து ஒட்டப்பட்டன. தற்போது அளவை நாடாவின் நீளம் யாது? ------------------cm

10. உருவில் உள்ள நான்முகியின் ------------------


(ii) உச்சிகளின் எண்ணிக்கை யாது? ------------------



11. 9999 உடன் 20 ஐக் கூட்டுக. கூட்டுத்தொகை யாது? ------------------


12. 9050 இலிருந்து 360 ஐக் கழிக்க வித்தியாசம் யாது? ------------------

13. விடுமுறை தினத்தன்று வீதியில் சென்ற வாகனங்கள் பற்றிய தகல்கள் வரைபில் காணப்படுகின்றன.





(i) விடுமுறை தினத்தன்று சென்ற வேனினதும், பஸ்ஸினதும் கூட்டுத்தொகை எவ்வளவு? ------------------

(ii) அன்றைய தினம் வீதியால் சென்ற துவிச்சக்கரவண்டியின் எண்ணிக்கையானது, அன்று வீதியால் சென்ற மோட்டார் சைக்கிளின் எண்ணிக்கையின் அரைவாசியாகும். அவ் எண்ணிக்கையை உரிய நிரலில் குறிக்க. அந்நிரலை நிழற்றுக.

14. 
கேத்திர கணிதப் பலகை ஒன்றில் அறையப்பட்ட ஆணிகளை உரு காட்டுகிறது. அதன் சில ஆணிகளை சுற்றி இறப்பர் பட்டி போடப்பட்டுள்ளது. இறப்பர் பட்டி போட்ட அமைப்பின் பரப்பளவு யாது? (இரு ஆணிகளுக்கு இடையே உள்ள தூரம் 2cm) ------------------


15. பின்வருவனவற்றைப் பெருக்குக. 100 x 2 x 0 = ------------------

16. 
வழங்கப்பட்ட சதுரக்கோட்டுப்படம் சமபகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் 0.7 பகுதியை நிழற்றுக.

17. 6000 ரூபாவின் $\frac{3}{4}$ பங்கு 2000 ரூபாவின் $\frac{1}{4}$ பங்கிலும் எவ்வளவு ரூபா கூடுதலானது? ------------------

18. 210 தோடம்பழங்களை 3 பெட்டிகளில் சமனாக அடுக்கினால் இரு பெட்டியில் உள்ள தோடம்பழங்களின் எண்ணிக்கை யாது? ( ------------------ )

19. அருகில் உள்ள உருவின்




(i) பெயர் யாது? ------------------

(ii) அதன் விளிம்புகளின் எண்ணிக்கை யாது? ------------------

20. 10122 உடன் 101 ஐக் கூட்டுக கூட்டுத்தொகை யாது? ------------------

21. 1050 இலிருந்து 375 ஐன் கழிக்க வித்தியாசம் யாது? ------------------

22. மீன் வியாபாரி ஒருவரின் கடையில் உள்ள மீன்கள் பற்றிய விபரம் கீழே காட்டப்பட்டுள்ளன.




(i) வியாபாரியிடம் உள்ள நெத்தலி மீன்களின் எண்ணிக்கையானது சுறா மீனினதும் திருக்கை மீனினதும் கூட்டுத்தொகையின் அரைவாசிக்குச் சமனாகும். அவ் எண்ணிக்கையை உரிய நிரலில் குறிக்க. நிரலை நிழற்றுக.

# மக்களின் அபிவிருத்தியை பேசுவதற்காக உள்ளூராட்சி சபை உருவாக்கப்பட்டது

## ஒருங்கிணைப்பாளர் வி.கே.ஜெகன் தெரிவிப்பு



குடாநாட்டின் அபிவிருத்திகளுக்கு பொறுப்பாக மத்திய அரசால் நியமிக்கப்பட்டவர்தான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. இவரது செயற்பாட்டின் மூலம் தான் உங்கள் பகுதிகளுக்கான அனைத்து வாழ்வாதாரங்கள் மற்றும் அபிவிருத்தித்தேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் இந்த நிலைமையை யாரும் புரிந்து கொள்வதாகத் தெரியவில்லை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான கே.வி.குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித்துள்ளார்.

மக்களது வாழ்வாதாரங்களை மேம்படுத்துவது தொடர்பாக நல்லூர் ஆத்திசூடி பகுதியில் மக்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பின் போது அப்பகுதி மக்களது வாழ்வியல் தேவைகள் பற்றி அறிந்துகொண்டபின் உரையாற்றிய ஒருங்கிணைப்பாளர் வி.கே.ஜெகன் மேலும் கூறுகையில் -

தமிழ் மக்கள் இன்று அரசியல் ரீதியான விடையங்களில் பின்தள்ளதப்பட்டுக் கொண்டிருக்கும் இனமாக இருக்கின்றது. கடந்த கால தமிழ் தலைமைகள் செய்த தவறுகளால் தலை நிமிர முடியாத அளவிற்கு தமிழர்களை தனிமைப் படுத்திவிட்டது.

உள்ளூராட்சி சபை என்பது வெற்று வசனங்கள் பேசும் மேடை அல்ல. அது மக்களின் அபிவிருத்தி சார்ந்த விடயங்களைப் பேசுவதற்கு உருவாக்கப்பட்டதென்பதை புரிந்து கொண்டு அனைவரும் செயற்பட வேண்டும்.

நாங்கள் அரசியல் நோக்குடன் உங்களைச் சந்திக்கவில்லை. மறைக்கப்பட்டு வரும் கடந்தகால அரசியல் தவறுகளை மூடி மறைக்கும் போலித் தேசியவாதிகளிடமிருந்து உங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வரவேண்டும் என்பதற்காகவே இந்த அரசியல் வரலாறுகளைக் கூறுகின்றோம்.

மிகப் பெரும் அதிகாரத்தைக் கொண்டிருந்த தீர்வுகளை எல்லாம் தூக்கி எறிந்த தன் விளைவால் பல இலட்சம் மக்களையும் உடமைகளையம் பறிகொடுத்துவிட்டு வடமாகாணத்திற்கு மட்டுமான முக்கிய அதிகாரங்கள் மறுக்கப்பட்ட சபையை பெற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்கு வந்துவிட்டது த்மிழ் அரசியல் நிலை.

தமிழ் மக்கள் ஒரு அரசியல் தீர்வுக்கு போக வேண்டுமானால் அரசியல் தலைமையில் மிகப்பெரும் மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும்.

இந்த மாற்றத்தை வரும் அரசியல் பருவகாலத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கரங்களுக்கு கொடுப்பீர்களானால் நிச்சயமாக தமிழர்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வை அவர் பெற்றுத்தருவார்.

தற்போதைய காலத்தில் மிக மோசமான கலாசார சீரழிவுகள் தலையெடுத்து விட்டது. இதை மறைமுகமாக உருவாக்கிக் கொண்டிருப்பது இன்றைய போலித் தேசியம் பேசுபவர்கள் தான். இவர்களது இலககு தொடர்ந்தும் தமிழ் இனம் ஏதாவதொரு பிரச்சினைக்குள் இருக்க வேண்டும் என்பதாகவே உள்ளது. என்றார்.

இந்த சந்திப்பில் நல்லூர் அமைப்பாளர் ரவீந்திரதாசன் அப்பகுதி சமுர்த்தி உத்தியோகத்தர் ராஜகுமாரன் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் விமல்ராஜ் ஆகியோருடன் அப்பகுதி பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## குறிஞ்சிச் சாரல் கலாசார நிகழ்வு

பேராதனைப் பல்கலைக் கழகம், தமிழ்ச்சங்கம் வழங்கும் குறிஞ்சிச்சாரல், கலை கலாசார கதம்ப நிகழ்வு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 3.30 மணிக்கு நிகழ்வு இடம்பெற ஏற்பாடாகியுள்ளது. (இ)

# சாவகச்சேரி– விளைவேலி ஸ்ரீ துர்க்காதேவியின் இரதோற்சவம் இன்று



பக்தர் உள்ளம் பொங்கிட
பாவையர் மனம் குளிர்ந்திட
தேரேறி வரும் எங்கள் தாயே
நோய் நீங்கி செல்வம் செழிக்க
செவ்விதழ் புன்னகையுடன்
இரதம் ஏறும் எங்கள் தாயே
தாழையடியில் அருள் பொங்கிட
தரணிஎங்கும் புகழ் வீசிட
ஆரோகணிக்கும் அருட்தாயே
வடம்பிடிக்கும் அடியவரின்
வாழ்வுதனில் வளம்சேர
அருள்வழங்கும் எங்கள் தாயே

- விளைவேலிய'ரான் -

# வலிகாமம் வலயமட்ட வணிகப்போட்டி முடிவுகள்

வலிகாமம் கல்விவலய கோட்டமட்ட வணிகப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் விபரம் வருமாறு:-

பிரிவு III

சி.தர்ஷா (யா/அருணோதய கல்லூரி), வே.நிரோஜா (யா/மகாஜன கல்லூரி), நா.கபிலன் (யா/யூனியன் கல்லூரி)

சண்டிலிப்பாய - பிரிவு I

ர.அபிராமி (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), தர்சிகா (யா/பண்டத்தரிப்பு உ.த.பாடசாலை), செ.நிவாசினி (யா/இளவாலை கன்னியர்மடம் ம.வித்தியாலயம்.)

பிரிவு -II

ப.கோபிகா, சி.சர்மினி, யோ.சயானா (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி)

பிரிவு - III

அ.சாம்பவி (யா/பண்டத்தரிப்பு மகளிர் உ.த.பாட), ஞா.நீரஜா (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி) அ.அபிவர்ணா (யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை).

சங்கானை பிரிவு I

ஜெ.வினோதினி (யா/வட்டு மத்திய கல்லூரி) லோ.ஸ்ரீகர்ஷன் (யா/வட்டு யாழ்ப்பாண கல்லூரி) த.பிரியங்கா (யா/விக்ரோறியா கல்லூரி)

பிரிவு II

ம.தெய்வகி,பி.பிரதீஸ் (யா/வட்டு யாழ்ப்பாண கல்லூரி) நே.சிந்துஜன் (யா/விக்ரோறியா கல்லூரி)

பிரிவு III

ம.சங்கவி (யா/வட்டு இந்துக்கல்லூரி) த.தயாளினி (யா/பண்ணாகம் மெய்கண்டான்), அபர்ணா( யா/ வட்டு இந்துக் கல்லூரி). (முற்றும்)

# அடியவர்க்கு அருள் பாலிக்கும் விளைவேலி துர்க்காதேவி

அம்பாளின் ஆலயம் 1805 ஆம் ஆண்டுக்கு முன்பே ஸ்தாபிக்கப்பட்டிருந்ததாக முன்பு இருந்த பெரியோர்கள் கூறுகின்றனர். பழைய தோம்பு வரலாறுகளும் அவ்வாறே கூறுகின்றன.

இவ் ஆலயம் தென்மராட்சியில் சாவகச்சேரியில் உள்ள மட்டுவிலுக்கும் கலவயல் என்ற ஊருக்கும் மத்தியிலே விளைவேலி என்னும் கிராமத்திலே வயலும் வயல் சார்ந்த இடத்திலே வடக்கு நோக்கி அமைந்திருக்கிறது.

இங்கு அடியார்களுக்கெல்லாம் திருக்காட்சி கொடுத்துத் திருவருள் பொழிந்து கொண்டு வீற்றிருக்கிறாள் துர்க்காதேவி.


இவ் ஆலயம் ஸ்தலவிருட்சமாகிய தாழை மரங்களின் மத்தியிலே அமைந்திருக்கிறது இவ் அம்பாள் விக்கிரகம் விஷ்ணு துர்க்கையாகவும் கையில் சங்கு சக்கரமும் அம்பாளின் பாதத்தின் கீழ் எருமைக்கடாவை கொண்டதாகவும் மகிஷனை வதம் செய்வதாகவும் காட்சி அளிக்கிறது. ஆதிகாலத்தில் மூலஸ்தானத்தில் தாமிர விக்கிரகமாக இருந்து இந்தியாவில் உள்ள சிதம்பரத்தில் இருந்து சிலா விக்கிரகம் கொண்டு வரப்பட்டு 1956 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

பரம்பரை பரம்பரையாகப் பிராமண சமூகத்தைச் சேர்ந்த குருக்கள் பரம்பரையே இன்றும் ஆதீன தர்மகர்த்தாவாக இருந்து வருகின்றனர். சந்தனக் குருக்கள் என்று கூறப்படும் பரமசாமிக் குருக்கள் மகா கணபதிக்குருக்கள் தர்மகர்த்தாவாக இருந்து மகாகணபதிக் குருக்கள் பரமசாமிக்குருக்கள் ஆலயத்தை பராமரித்து பார்த்து நிர்வகித்து அதன் பின்னராக பரமசாமிக்குருக்கள் மகா கணபதிக்குருக்களே தர்மகர்த்தாவாக, வெகு சிறப்பாக நிர்வாகம் நடைபெற்று வந்தது.

பரம்பரை வழியாக மகாகணபதி குருக்கள், பரமேஸ்வரக்குருக்கள் தற்போது நிர்வகித்து வருகின்றனர்.

இவ் ஆலய தலவிருட்ஷமாகிய தாழை பூப்பதுவே தவிரக் காய்ப்பது கிடையாது. இன்னும் ஒரு விசேடம் இவ் ஆலயத்தின் விக்கிரகம் இந்தியாவில் சிதம்பரத்தில் சிற்பாசாரியார் மூலம் செதுக்க ஆரம்பிக்கத் தொடங்கவே பல காலமாகத் திருமணம் பேசி வந்தும் தடையாக இருந்த இச் சிற்பாசாரியாரின் பெண்ணின் திருமணம் வெகு சிறப்பாகக் கைகூடியதாகவும் கூறுவர்.

பல காலமாக இவ் [illegible]பத்தில்



அலங்கார உற்சவம் நடைபெற்று 1989 ஆம் ஆண்டு புதிய சித்திரத்தேர் உருவாகி 1989 ஆம் ஆண்டு ஆடி அமாவாசைப் பட்சமாக மகோற்சவம் (கொடியேற்றம்) ஆரம்பித்து நடைபெற்று வருகிறது. அந்த வகையில் இவ்வருட மஹோற்வசம் கடந்த 17 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இன்று இரதோற்சவம் இடம்பெற அம்பாள் அருள்பாலித்துள்ளாள். நாளை புனித தீர்த்தக் கிணற்றில் தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளது.

ம.வல்லிபுரநாதன்
விளைவேலி

# விவசாய பயிர்க்காப்புறுதி வழங்குமாறு கோரிக்கை


கரணவாய் பிரதேசத்தில் உள்ள விவசாயிகளில் கடந்த வருட காலபோகத்தில் பாதிப்புற்ற விவசாயிகளுக்கு பயிர் காப்புறுதி இன்னும் வழங்கப்படவில்லை எனவும் இதனால் விவசாயிகள் பல்வேறு கஷ்டநிலையை எதிர்கொண்டுள்ளதாக்வும் தெரிவிக்கப்படுகிறது.

கரணவாய் கிழக்கு கப்பூது, கரவெட்டி, கரணவாய் கிழக்கு, மண்டான் உடுப்பிட்டி, புறாப்பொறுக்கி, கரணவாய் தெற்கு. கரணவாய்மத்தி உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கும் காப்புறுதி கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது.

கடந்தவருடம் மேற்கொள்ளப்பட்ட பயிர்செய்கையினால் கஷ்டமடைந்த தாம் மீண்டும் இவ்வருடம் மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் பயிர்ச்செய்கையை மேற்கொண்டுள்ள நிலையில் காப்புறுதி கொடுப்பனவை வழங்கினால் தாம் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியும். எனவும் தெரிவிக்கும் விவசாயிகள் இது குறித்து உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை முன்வைக்கினறனர். (18)

# காஸா மீதான போர் முற்றுப்பெறும் வரை யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தமாட்டோம்

## ஹமாஸ் இயக்கம் திட்டவட்டமாக அறிவிப்பு



காஸா மீதான முற்றுகை முடிவுக்கு கொண்டுவரப்படும் வரை யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்படமாட்டாது என ஹமாஸ் இயக்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

இந்த நிபந்தனை எட்டப்படும் வரை தமது இயக்கம் யுத்த நிறுத்தத்தை தொடர்ந்தும் நிராகரிக்கும் என ஹமாஸ் இயக்கத் தலைவர் காலித் மெஷால் தெரிவித்துள்ளார்.

காஸா மீது இஸ்ரேல் மேலதிக வான் மற்றும் தரைவழித் தாக்குதல்களை மேற்கொண்டுள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அத்துடன் இஸ்ரேல் மீது ஹமாஸ் இயக்கமும் தொடர்ச்சியான ஏவுகணைத் தாக்குதல்களை நடாத்திவருவதாக சர்வதேச தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீன வறமாஸ்தீவிரவாதிகளுக்கும் இடையே கடந்த 16 நாட்களாக நடைபெற்றுவரும் தொடர் தாக்குதல் சம்பவத்தில் 710 பலத்தீனியர்கள் கொல்லப்பட்டதுடன் 32இஸ்ரேல் படை வீரர்களும், 3 இஸ்ரேல் பொதுமக்களும் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிககப்படுகின்றது.

ஐ.நா. மனிதாபிமான பணியகத்தலைவர் வலேரி அமாஸ் 119,000 பொதுமக்களை ஐ.நா.வின் பாதுகாப்பில் உள்ள பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் உணவு, தண்ணீருக்காக வெளியே செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுவதேடு அங்கு பயங்கரவாதம் நிலைகொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# பாடசாலை பேருந்து மீது ரயில் மோதி தெலுங்கானாவில் 20 மாணவர்கள் பலி

தெலுங்கானா மாநிலம் மேடக் மாவட்டத்தில் ஆளில்லாத ரயில்வே மீது கடவையை கடக்க முயன்ற பாடசாலைப் பேருந்து மீது ரயில் மோதியதில் 20இறகும் மேற்பட்ட மாணவர்கள் பலியாகினர்

மேடக் மாவட்டம் மசாய்பேட் கிராமத்தில் நேற்றுக் காலை 9.10 மணியளவில் இத்துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காகடியா டெக்னோ பாடசாலைக்குச் சொந்தமான பேருந்து 30 இற்கும் மேற்பட்ட மாணவர்களுடன் சென்று கொண்டிருந்தது. அப்போது, மசாய்பேட் கிராமம் அருகே ஆளில்லாத ரயில்வே கடவையை கடக்க முயன்ற போது அவ் வழியாக வந்த நான்டெட் - செகந்தராபாத் பயணிகள் ரயில் பேருந்து மீது மோதியது.

இதில் பேருந்து ஓட்டுநர், பேருந்தில் இருந்த 20 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் சம்பவ இடத்திலேயே பலியாகினர். காயமடைந்த மாணவர்கள், ஐதராபாத்தில் உள்ள தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உலகச் செய்திகள்

# மலேசிய விமானத்தின் கறுப்பு பெட்டியை பிரிட்டனுக்கு அனுப்ப மலேசியா முடிவு

விமானத்தின் கறுப்புப் பெட்டியை பிரிட்டனுக்கு அனுப்ப மலேசியா முடிவு செய்துள்ளதுடன் விசாரணைக்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உக்ரைனில் சுட்டு வீழ்த்தப்பட்ட பயணிகள் விமானத்தின கறுப்புப் பெட்டியை ஆய்வுக்காக பிரிட்டனுக்கு அனுப்ப மலேசிய அரசு முடிவு செய்துள்ளது. உக்ரைனின் கிழக்குப் பகுதியில் மலேசிய ஏர்லைன்ஸின் பயணிகள் விமானம் கடந்த 17ஆம் திகதி ஏவுகணை வீச்சில் சுட்டு வீழ்த்தப்பட்டது. அதில் பயணம் செய்த 298 பேர் உயிரிழந்தனர்.

சம்பவ இடத்தில் நெதர்லாந்து தலைமையிலான சர்வதேச வல்லுநர்கள் குழு ஆய்வு செய்து வருகிறது. விமானம் விழுந்து நொறுங்குவதற்கு முந்தைய கடைசி நிமிடம் வரை விமான ஓட்டிகளிடையே நடைபெற்ற உரையாடல்களை பதிவு செய்த கறுப்புப் பெட்டியை பிரிட்டன் விமான விபத்து புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைத்து ஆய்வு செய்வது என்று வல்லுநர்கள் குழு முடிவு செய்துள்ளது.

இதற்கிடையே உயிரிழந்த நெதர்லாந்து பயணிகளின் சடலங்கள், சவப்பெட்டிகளில் வைக்கப்பட்டு விமானத்தில் அந்நாட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. உயிரிழந்த பயணிகளில் 193 பேர் நெதர்லாந்தைச் சேர்ந்தவர்கள். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர், அவற்றை பெற்று இறுதிச்சடங்குகளை செய்யவுள்ளனர்.

இந்தத் தாக்குதலை உக்ரைன் இராணுவம் நிகழ்த்தியிருக்கும் என்ற ரஷ்யாவின் குற்றச் சாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில், விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட பகுதி ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

# ரமழான் நோன்பு கடைப்பிடித்தவரை கட்டாயப்படுத்தி உண்ண வைத்தது தவறு

## அத்வானி கண்டனம்




ரம்ஜான் நோன்பு இருந்த ஒருவரை சிவசேனை கட்சி எம்.பி.க்கள் வற்புறுத்தி உண்ண வைதததது தவறு என பா.ஜ.க வின் மூத்த தலைவர் அத் வானி கண்டனம் தெரிவித்துள்ளார்.

டில்லியில் உள்ள மகாராஷ்டிர மாநில இல்லத்தில் ஐ.ஆர்.சி.டி.சி. உணவு வழங்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது. கடந்த வாரம் மகாராஷ்டிரா சதானுக்கு வந்த சிவசேனை எம்.பி.க்கள் 11 பேர், தங்களுக்கு உண்ண மகாராஷ்டிர மாநில பாரம்பரிய உணவு வேண்டும் என்று கேட்டுள்ளனர்.

ஆனால் பணியில் இருந்த ஊழியர்கள் அவர்களுக்கு சப்பாத்தியை பரிமாறியுள்ளனர். இதனால் சிவசேனை கட்சி எம்.பி.க்கள் கோபத்தில் மேற்பார்வையாளரை வலுக்கட்டாயமாக சப்பாத்தியை உண்ண வைத்துள்ளனர் என்று கூறப்படுகிறது. அந்த மேற்பார்வையாளர் ஒரு முஸ்லிம். அவர் ரம்ஜான் நோன்பு மேற்கொண்டிருந்தார் என கூறப்படுகிறது.


இந்நிலையில் இது குறித்து பா.ஜ.க மூத்த தலைவர் அத்வானியிடம் கேள்வி எழுப்பப்பட்ட போது செய்தியாளர்களிடம் பேசிய அவர் இது தவறு, ஏற்றுக்கொள்ள முடியாத செய்கை என தனது கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

# அல்ஜீரிய விமானத்துடனான தொடர்புகள் துண்டிப்பு

அல்ஜீரியாவின் தேசிய விமான நிறுவனமான ஏர் அல்ஜெரி, மேற்கு ஆபிரிக்காவில் உள்ள புர்கினா பாஸோவிலிருந்து கிளம்பியதன் விமானம் ஒன்றுடனான தொடர்பு துண்டிக் கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளது.

ஓவுகாகடகோவிருந்து கிளம்பிய 50 நிமிடங்களில் தொடர்பு துண்டிக்கப்பட்டதாக விமான நிறுவனத்தை மேற்கோள் காட்டி அல்ஜீரியாவின் அரசு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த விமானம் அல்ஜியர்சிற்குச் சென்று கொண்டிருந்தது.

ஏஎச்5017 என்ற இந்த விமானத்தில் 110 பயணிகளும் 6 ஊழியர்களும் இருந்தார்கள் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# மாவைக் கந்தனுக்கு இன்று தேர்த்திருவிழா

மாவைக் கந்தன் ஆலயம் வரலாற்றுப் பெருமையும் வழிபாட்டுப்பெருமையும் உடையது. வருடாந்த உற்சவம் கொடியேறி மஹோற்சவம் நடைபெறாமல் காம்யோற்சவம் கடந்த 2ஆம் திகதி முதல் நாளை தீர்த்த உற்சவம் வரை 25 நாட்களும் நடைபெறுகின்றன. ஈழநாட்டில் உள்ள முருக வழிபாட்டுத்தலங்களில் ஒன்றாக மிளிர்வது மாவைத்திருத்தலம் யாழ். நகரில் இருந்து வடக்கே காங்கேசன்துறைவீதியில் 10 மைல் தொலைவில் இருந்து அருளாட்சி புரிகின்றார் மாவைக்கந்தன்.

இதன் எல்லைகளாக கிழக்கே பளை, வீமன் காமனும் மயிலிட்டியும், தெற்கே தெல்லிப்பளையும் மேற்கே கொல்லன்கலட்டி பன்னாலை, போயிட்டி, கீரிமலையும் வடக்கே தையிட்டி, காங்சேகன்துறையும் அமைந்துள்ளன.

ஈழநாட்டில் உள்ள முருகவழிபாட்டுத்தலங்களை இருவகையாகப் பிரிக்கலாம். சிவாகம முறைப்படி அமைவுபெற்ற கோவில்கள் மற்றையது மடாலயக் கோவில்கள் மாவிட்டபுரம் கந்தவனக்கடவை, இணுவில், நீர்வேலி, அனுராதபுரம் ஆகிய இடங்களில் உள்ள முருகன் ஆலயங்கள் சிவாகம விதிப்படி அமையப் பெற்றன.

நல்லூர், கதிர்காமம், செல்வச்சந்நிதி மண்டூர், வெருகல் ஆகிய இடங்களில் உள்ள ஆலயங்கள் மடாலயக் கோவில்களாக காணப்படுகின்றன.



மாவைமுருகப்பெருமான் மீது முத்துக்குமாரக் கவிராஜர், இருபாலை சேனாதிராஜ முதலியார், சுன்னாகம் குமாரசாமிப் புலவர், வறுத்தலை விளான் மயில்வாகன புலவர், சரவணமுத்து புலவர் மாவைகுமாரசாமிக்குருக்கள், நவாலியூர் சோமசுந்தரப்புலவர், மஹாவித்துவான் கணேசையர், வயாவிளான் கல்லடி ஆசுகவி வேலுப்பிள்ளை போன்ற பேரறிஞர்கள் பதிகங்கள் பாடி மாவைக்கந்தனை போற்றியுள்ளார்கள்.

மகாகும்பாபிஷேகத்தை எதிர்நோக்கி இருக்கும் மாவைக் கந்தன் ஆலயத்தில் சிமெந்துக் கல் வெள்ளைக்கல், கருங்கல், ஆகியவற்றால் திருப்பணிவேலைகள் நடைபெற்றுவருகின்றன.

மாவைக்கந்தன் அடியார்களான புலம் பெயர் நாடுகளில் வாழும் அடியார்களிடமிருந்து பொருளையும் நிதியையும் வேண்டி நிற்கின்றனர். ஆதீன முதல்வரைத் தலைவராகக் கொண்ட திருப்பணிச்சபையினர் தேரிலே பவனிவருகின்ற மாவைக்கந்தனின் திருவருளால் எதிர்வரும் ஆண்டில் கும்பாபிஷேக விழாப்பொலிவுகாண பிரார்த்திப்போமாக.

**கா. சிவபாலன்**

# இந்த நாட்டை அழிவுக்கு இட்டுச்சென்றது 1983 யூலை இன வன்முறைகளே

1983 யூலை இன வன்முறை இந்த நாட்டை மிகப் பெரிய அழிவுக்கும் மாபெரும் துன்பியலுக்கும் இட்டுச்சென்றது. முப்பது வருடங்களுக்கு முன்பு நடந்த ஒரு கண்ணிவெடித் தாக்குதலினால் 13 படையினர் பலியானதை ஒரு சாட்டாக வைத்துக் கொண்டு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இன வன்முறைகள் இலங்கையில் சிறுபான்மைச் சமூகங்களின் மனதில் பெரும் இடைவெளியையும் அரசின்மீது நம்பிக்கை இழப்பையும் ஏற்படுத்தின. இந்த இடைவெளி இன்னமும் நிரப்பப்படாமல் இருப்பதுதான் மிகவும் கவலைக்குரியது என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை நாடாளுமன்றில் நடைபெற்ற 1980 யூலை வேலை நிறுத்தம் தொடர்பான ஒத்திவைபப் பிரேரணை மீதான விவாதத்திலே கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.


அவர் தொடர்ந்து உரையாற்றும் போது கௌரவ உறுப்பினர் சாந்த பண்டார கொண்டு வந்த 1980 யூலை வேலை நிறுத்தம் தொடர்பான ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதத்திலே கலந்துகொண்டு உரையாற்றுவதற்குச் சந்தர்ப்பம் தந்தமைக்காக நான் உங்களுக்கு நன்றி தெரிவிக்கின்றேன். இலங்கை வரலாற்றிலே யூலை மாதம் இரதத் கறை படிந்த மாதமாகவே தொடர்ந்தும் இருந்துவருகின்றது. ஒவ்வொரு யூலை வரும் போதும் என்னை அறியாமலேயே எனக்குக் கடந்தகால நினைவலைகள் வருகின்றன. அன்று அரச சேவையாளர்கள் தங்களுடைய உரிமைகளுக்காகப் போராட முற்பட்டவேளை அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினால் பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின. பல குடும்பங்கள் இந்தப் பாதிப்பிலிருந்து மீள முடியாமல் ஆண்டுக் கணக்காகத் துயரத்தில் உளன்றதை யாரும் எளிதில் மறந்துவிட முடியாது. தங்களுடைய உரிமைகளுக்காகவும் நியாயமான தேவைகளுக்காகவும் ஜனநாயக ரீதியில் போராடுவோரைப் புரிந்து கொள்வதும் அவர்களுடைய போராட்டத்துக்கு மதிப்பளிப்பதும் செவிசாய்ப்பதும் அரசுகளின் கடமை மட்டுமல்ல, கட்டாயமான ஒரு நிலைப்பாடாகவும் இருக்க வேண்டும். ஆனால், அன்றைய ஆட்சியாளர்கள் இதை மறுத்தே நடந்திருக்கின்றனர். அவர்களின் காலத்தில் இலங்கைத் தீவு இரத்தக் களரியில் குளிக்க வைக்கப்பட்டதையும் நாடே தீயில் எரிந்ததையும் இங்கே நான் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

இப்பொழுது போர் முடிந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியில் உதவிப் பணிகள் செய்யப்பட்டாலும் அவர்களின் மனதிலுள்ள இடைவெளியை இன்னமும் நிரப்ப முடியவில்லை. அன்று வெலிக்கடை சிறையிலிருந்த தமிழ் அரசியல் கைதிகள் திட்டமிட்ட முறையில் கொல்லப் பட்டார்கள். அன்று யூலை 25ஆம் திகதி 35 போராளிகள் - அரசியல் கைதிகள் படுகொடூரமான முறையில் அந்தச் சிறையிலே கொல்லப்பட்டார்கள். அதற்கு இரண்டு நாள் அடுத்து அதாவது 1983 யூலை 27ஆம் திகதி மேலும் 17 அரசியல் கைதிகள் கொல்லப்பட்டார்கள்.

மொத்தமாக 52 அரசியல் கைதிகள் திட்டமிட்ட முறையில் அழித்தொழிக்கப்பட்டார்கள். அந்த வேளையிலே அந்தச் சிறையிலிருந்த எங்களது தலைவர் டக்ளஸ் தேவானந்தா அங்கிருந்த பல அரசியல் கைதிகளைப் பாதுகாத்து மிகுந்த காயமுற்றவர் என்பதையும் இந்தச் சபையிலே நான் குறிப்பிட விரும்புகின்றேன். அந்த அடிப்படையில் யூலை படுகொலையானது தென்பகுதியிலே வாழ்ந்த தமிழர்களின் இருப்பையே கேள்விக் குறியாக்கியது. தென்பகுதிகளில் குடியிருந்த இலங்கைத் தமிழர்கள் மற்றும் மலையகத் தமிழர்கள்மீதும் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. குறிபபாக அவர்கள் இலக்கு வைத்து மிக மோசமாகத் தாக்கப்பட்டார்கள். இதனால் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் வடக்குக்கும் கிழக்குக்கும் அகதிகளாக இடம்பெயர்ந்தனர்.

இவையெல்லாம் இன்று மறைக்கப்பட்டிருக்கின்றன. துரதிஸ்டவசமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புகூட, 1983ஆம் ஆண்டு யூலை சிறைச்சாலைப் படுகொலை உட்பட தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறைகளை வெளிப்படுத்துவதில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதனுடைய தலைவர்களான குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை போன்றவர்கள் அன்று சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்டார்கள். இன்று அவர அதனை நினைவுகூரத் தயாராக இல்லை. இவையெல்லாம் ஆழமான காயங்கள்! சிறுபான்மை சமூகங்களின் மனதில் உண்டாக்கிய துன்பியல் சம்பவங்கள்! இதில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் மலையக மக்களே!

கடந்தகால துன்பியல் சம்ப



வங்களுக்கு இந்த நாட்டை மீண்டும் இட்டுச் செல்ல முடியாது. அப்படி நாங்கள் இட்டுச் செல்வோமானால் இந்த இலங்கைத் தீவில் வசிக்கின்ற எல்லா இன மக்களினதும் எதிர்காலத் தலைமுறையினரின் வாழ்வை அழிப்பதுபோன்ற ஒரு நிலைப் பாட்டை நாங்கள் எடுத்திருக்கின் றோம் என்றுதான் அர்த்தமாகும். ஒருவரையொருவர் தாக்குவதை விடுத்து, இன்று நாட்டில் உருவாகியுள்ள அமைதியான, யுத்தமற்ற சூழலைப் பயன்படுத்தி சர்வதேச நெருக்கடிகளிலிருந்து மீண்டு ஓர் இறைமையான, சுயாதீனமான இலங்கையைக் கட்டியெழுப்ப வேண்டும். என்றும் அவர் தொவித்தார்.

## கடலில் மூழ்கி சீனப்பிரஜை பலி

திக்வல்லை, கடலில் மூழ்கி சீன பிரஜையொருவர் பலியாகியுள்ளதுடன் மற்றுமொரு சீன பெண்ணொருவர் ஆபத்தான நிலையில் மாத்தறை, பதிகமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக திக்வல்லை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் சோ-சங் என்ற 54 வயது நபரே பலியாகியுள்ளார். சுற்றுலா பயணமொன்றை மேற்கொண்டு மாத்தறைக்கு சென்ற 16 பேர் அடங்கிய குழுவில் மேற்படி இருவரும் உள்ளடங்குவதாக பொலிஸார்' தெரிவித்தனர்.

இக்குழுவினர், கண்டி, நுவெரெலியாவிற்கு பயணித்த பின்பு மாத்தறைக்கு சென்றுள்ளதாகவும் திக்வல்லையில் உள்ள உல்லாச விடுதியில் தங்கியிருந்ததாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது பதிகமை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

## இந்திய நிதி உதவியுடன் 70 சிறுவர் மேம்பாட்டு மையங்கள்

மலையகத்தில் எழுபது சிறுவர் மேம்பாட்டு நிலையங்களை அமைக்க இந்திய அரசு அனுசரணை வழங்க முன்வந்துள்ளது.

இதற்கான ஒப்பந்த உடன்படிக்கையொன்று கடந்த 22 ஆம் திகதி இந்திய உயர் ஸ்தானிகர் வை.கே.சிங்கா தலைமையில் ஆர்.எ .கட்டட நிர்மாணங்கள் மற்றும் தனியார் தொழில்நுட்ப நிறுவனங்கள் இணைந்து கையெழுத்திட்டுள்ளனர்.

இலங்கையின் கால்நடை மற்றும் கிர்ாமிய சமூக அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளர் பத்மசிறி, பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் தலைவர் கே.மாரிமுத்து, பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் பொதுப் பணிப்பாளர் ஆர்.எம்.பி.எலேகல, இலங்கை அரசின் வேறுபல உத்தியோகத்தர்களும், இந்திய உயர்ஸ் தானிகராலய உத்தியோகத்தர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ஹற்றன், காலி, கண்டி, இரத்தினபுரி, பதுளை, கேகாலை ஆகிய பெருந்தோட்டப் பிரதேசங்களிலேயே சிறுவர் மேம்பாட்டு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. இதற்கென இலங்கை ரூபா 58 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பெருந்தோட்டப்பகுதியிலும் சீரமைக்கப்பட வேண்டிய இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. கட்டடங்கள் சீரமைப்பு நிர்மாணப்பணியினை தவிரவும் தளபாடங்கள் கற்றல் வசதிகளுக்கான இடங்கள் என அனைத்தும் இந்திய அரசினால் வழங்கப்படும்.

இந்த செயற்திட்டத்தின் மூலம் பெருந்தோட்டத்தில் குறிப்பாக தேயிலை தோட்டங்களில் வேலை செய்யும் தாய்மார்களுக்கு தங்கள் குழந்தைகள் ஒவ்வொருவரும் பாதுகாப்பான இடத்தில் உள்ளனர் என்ற திருப்தியை ஏற்படுத்த முடியும் என்றார். அத்துடன் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் பெண்களுக்கு தங்கள் குடும்பத்துக்கான பொருளாதார முன்னெடுப்புக்களை இலகுவாக மேற்கொள்ளலாம்.பெருந்தோட்ட குடும்பங்களுக்குரிய 4,000 வீடுகள் கட்டுமானப்பணி வீட்டுத் திட்டம் இந்த ஆண்டின் பிற்பகுதியில் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### பொலிஸ்..

குழுவில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு எதிராக 1 முறைப்பாடும், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு எதிராக 4 முறைப்பாடுகளும், கோப்பாய் பொலிஸ்நிலையத்திற்கு எதிராக 2 முறைப்பாடுகளும், யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்திற்கெதிராக 2 முறைப்பாடுகளும், பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்கு எதிராக ஒரு முறைப்பாடும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அந்த முறைப்பாட்டின் பிரகாரம் 6 முறைப்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளதாகவும், இம் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் தொடர்பில் எதிர்வரும் ஆகஸ்ட் 1 ஆம் திகதி தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் மீளாய்வுக் கூட்டம் நடைபெறவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (25)

### வடகடல்...

குருநகர், லுணுவில, வீரவில ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள மீன்வலைத் தொழிற்சாலைகளினது அரையாண்டு தொழிற்துறை மேம்பாடு தொடர்பில் மீளாய்வுக் கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

இதன்போது மூலப்பொருள், உற்பத்தி, உற்பத்திகளின் சந்தை வாய்ப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன் வடகடல் நிறுவனத்தின் கீழான குறித்த மீன்வலைத் தொழிற்சாலைகளின் தொழிற்துறை நடவடிக்கைகளை மேலும் முன்னேற்றும் வகையில் திறைசேரியூடாகவும், வங்கிகள் ஊடாகவும் நிதியினை பெற்று அந்நிதியின் ஊடாக குறித்த தொழிற்சாலைகளை முன்னேற்றுவது குறித்தும் ஆராயப்பட்டது.

அத்துடன், தேவைகளின் அடிப்படையில் உற்பத்திகள் முன்னெடுக்கப்படுமெனக் கேட்டுக் கொண்ட அமைச்சர் இதுவிடயத்தில் குறித்த தொழிற்சாலைகளினது துறைசார்ந்த அனைத்து உத்தியோகத்தர்களும் பணியாளர்களும் தமது கடமைகளை முன்னெடுக்க வேண்டுமெனத் தெரிவித்தார்.

இவ்வாறான ஒன்றிணைந்த செயற்பாடுகளின் ஊடாகவே குறித்த தொழிற்சாலைகளை மென்மேலும் வளர்த்தெடுக்க முடியுமென்றும் அதுசார்ந்து வாழும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்த முடியுமென்றும் சுட்டிக்காட்டினார்.

அமைச்சர் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, அமைச்சின் பணிப்பாளர் அஜித் ஏக்கநாயக்க, அமைச்சரின் ஆலோசகர் திருமதி வீ.ஜெகராஜசிங்கம், வடகடல் நிறுவனத்தின் தலைவர் திசவீரசிங்கம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### கடமையை...

களின் பாதுகாப்பிற்கு ஆயுதங்கள் பயன்படுத்த அனுமதி வழங்கி ஆயுதங்களை வழங்கும்படி திணைக்களத்தினர் தலைமை அலுவலகத்திடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர். இது தொடர்பில் அண்மையில் நடந்த கண்டாவளைப் பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டத்திலும் தெரிவிததிருந்ததாக திணைக்களத்தினர் மேலும் தெரிவித்தனர்.

### பளையில்..

விபத்து காரணமாக கொழும்பு நோக்கிப் பயணிக்கும் ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று கோட்டை ரயில் நிலைய கட்டுப்பாட்டு அதிகாரி நேற்றுமாலை தெரிவித்துள்ளார்.

### சர்வதேச...

அளிக்கலாம்.மேலும், யாருக்கு எதிராக முறைப்பாடு முன்வைக்கப்படுகின்றதோ அவர்கள் விசாரிக்கப்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

புதிய ஆணைக்கு அமைவாக சர்வதேச தரத்துக்குட்பட்ட வகையில் விசாரணைகளை நடத்துவதற்காக ஆலோசனை வழங்கவே சர்வதேச நிபுணர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை எமது விசாரணை அமர்வுகளில் பங்குபற்றுவதற்கு நாங்கள் அழைக்கவுள்ளோம் என்றும் பரணகம கூறினார்.

### கீரிமலையில்...

வுள்ளது. இத்தினத்தில் கீரிமலைக்கு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பொதுமக்கள் வருகை தருவார்கள்.

இதனால், பொதுமக்களுக்குத் தேவையான குடிநீர், மலசலகூடம் உள்ளிட்ட வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அன்றைய தினம் அதிகாலை முதல் இரவு வரையிலும் சிற்றூர்திகள் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் ஆகியனவும் குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் சேவையில் ஈடுபடுத்தப் படவுள்ளதாக போக்குவரத்துச் சபையினர் தெரிவித்தனர்.

மேலும், . பொதுமக்களின் பாதுகாப்புக் கருதி, காங்கேசன் துறைப் பொலிஸ் பிரிவின் பொலிஸார் கடமையில் ஈடுபடவுள்ளதுடன், கடலில் குளிக்கும் பொதுமக்களின் பாதுகாப்பிற்காக கடலில் கடற்படையினரும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர் என காங்கேசன்துறை பொலிஸ் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

### அல்ஜீரிய...

அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் இந்த விமான சர்ச்சை தொடர்பான சரியான தகவல்களை நேற்று நள்ளிரவுக் குப்பின்னர் வரை பெற்றுக் கொள்ளமுடியவில்லை (மற்றுமொரு செய்தி உள்ளே)

# சுயநலனில் அதிக அக்கறை; மறக்கப்படுகிறது மக்கள் நலன்

## பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் சாடல்



(யாழ்ப்பாணம்)

கூட்டமைப்பினரால் தாம் மீண்டும் ஏமாற்றப்பட்டுள்ளோம் என்பதை மக்கள் உணரத் தொடங்கியுள்ளனர். தமது சொந்த நலன்களுக்கான மத்திய அரசின் அமைச்சு வாசல்களை மிதிக்கும் வடமாகாண மந்திரிகள், மக்களின் நலன்களுக்காக மட்டும் ஏன் செல்ல மறுக்கிறார்கள்? என்பதையும் சிந்திக்கத் தலைப்பட்டுள்ளனர் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி இணைப்பாளரும், பருத்தித்துறை பிரதேசசபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஜயாத்துரை சிறி ரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

வடமராட்சி, நெல்லியடி கிழக்கு, புதுத்தோட்டம் விநாயகர் ஆலய முன்றலில் சுடரொளி சனசமூக நிலையச் செயலாளர் திரு கிருஸ்ணபிள்ளை பிரகலாதன் தலைமையில் மக்களுடனான சந்திப்பு நேற்று இடம் பெற்றது.

அதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், மத்திய அரசுடனான அபிவிருத்தி மற்றும் மக்கள் நலத் திட்டங்களை எமது கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் முடிந்தளவு செயற்படுத்தி வருகின்றார். மாகாண சபையிடம் பல மக்கள் நலத்திட்ட அதிகாரங்கள் உள்ளன. ஆனால் அவர்கள் செயற்படுத்தவில்லை. நாங்கள் செயற்படுத்த முயலும் போது தமது அதிகாரங்களுக்கு குறுக்கீடு செய்வதாக உண்மைக்குப் புறம்பான அறிக்கைகளை விடுகிறார்கள்.

கடந்த 10 மாதங்களில் வடமாகாணசபை நிர்வாகம் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் உயர்ச்சிக்காக ஏதாவது திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தி இருக்கின்றாரகளா? அல்லது சிந்தித்திருக்கிறார்களா?

இக்கிராமம் எமது கட்சியின் உறுப்பினர் அமரர் ஜெயராஜா கரவெட்டி பிரதேசசபைத் தலைவராக இருந்த சமயத்தில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை நாம் மேற்கொண்டோம். அதிகாரத்தை மக்கள் எமக்கு வழங்கியிருந்த சமயங்களில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றினோம். இன்று அந்த அதிகாரங்கள் கூட்டமைப்பினர் கைகளில் உள்ளது.

மாகாணசபைத் தேர்தல் காலத்தில் வல்வெட்டித்துறையில் பிரபாகரன் மாவீரன் என்று கூறிப் போற்றிய மாகாண முதல்வர், சாவகச்சேரியில் கடந்த மேதினக் கூட்டத்தில் பிரபாகரன் சர்வாதிகாரி எனத்தூற்றினார். இது வாக்குகளை சூறையாடுவதற்காக அவர்கள் கையாண்ட கபடங்கள். ஆனால் டக்ளஸ் தேவானந்தா மக்களுக்கு உண்மையான நடைமுறைச் சாத்தியங்களை கூறியிருந்தார். கூட்டமைப்பினருக்கு வாக்களித்த மக்கள் தாம் மீண்டும் ஏமாற்றப்பட்டுள்ளோம் என்பதை மக்கள் உணரத் தொடங்கியுள்ளனர்.

நாம் தொடர்ந்தும் மக்கள் பணிகளை மேற்கொண்டே வருகின்றோம். இப்பகுதி மக்களின் குறைபாடுகளை அவதானித்துள்ளோம். இக்கிராமத்திற்கு அமைச்சரை நேரில் அழைத்து வந்து பல்வேறு குறைபாடுகளை நிவர்த்தி செய்யவுள்ளோம் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் அ.சந்திரசேகரம், ஈ.பி.டி.பி.யின் கரவெட்டி பிரதேச இணைப்பாளர் இ.செந்தில்நாதன், உதவி இணைப்பாளர் செ.வசந்தகுமார் (முரளி), கரவெட்டி பிரதேசசபை எதிர்க்கட்சி உறுப்பினர் இ.துசிகரன். கட்சியின் பொதுச்சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ஆடிவேல் உற்சவம்

(நாவாலி)

நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆடிவேல் உற்சவவிழா நாளை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் இடம் பெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் தினமும் காலை முதல் விசேட அபிஷேக பூசை, ஆராதனைகள் இடம் பெறும.

தொடர்ந்து எதிர்வரும் 30 ஆம் திகதி தீர்த்தோற்சவம் மறுநாள் வைரவர் பொங்கலும் இடம பெறும் 10 நாட்களும் மாலையில் விசேடசொற்பொழிவு சதாபிரசங்கம் என்பன இடம் பெறவுள்ளன. (104)

# வருடாந்த உற்சவம்

நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காமம் தேவஸ்தான வருடாந்த உற்சவம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகி அடுத்த மாதம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது.

10 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 5.30 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். தினமும் மாலை 5 மணிக்குப் பூஜைகள் ஆரம்பமாகும்.

11 ஆம் திகதி காலை ஆடிவேல்ரதம் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி சட்டநாதர் வீதி பருத்தித்துறை வீதி, அஸ்பத்திரி வ்தி, கஸ்தூரியார் வீதி, பசார் வீதி, காங்கேசன்துறை வீதி, ஆடியபாதம் வீதி வழியாக மூன்று நாட்கள் பவனியின் பின்னர் மீண்டும் கரகாட்டம், காவடியாட்டம், தீப்பந்தம், தாரை, தம்பட்டங்களுடன் ஆலயத்தை மூன்றாம் நாள் இரவு வந்தடையும்.

ஆடி வேல் பவணியின் போது காளை மாடுகள் பூட்டிய வண்டில் ரதம் இரும்பன், நல்வீரர்கள், தவில், நாதஸ்வரம், வேல், ரதம் போன்றவற்றுடன் ஊர்வலமாகத் தெருவீதி வழியாக முருகன் வலம் வ்ரவுள்ளார். (137)

# அநாகரிகச் செயல் விளைந்தது விபரீதம்

## இளைஞருக்கு சிறைவாசம்

9 வயதுச் சிறுமிக்கு தனது ஆணுறுப்பினை காட்டிய இளைஞர் சிறுவர் நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடற்கரை வீதிப்பகுதியைச் சேர்ந்த குறித்த சிறுமிக்கு குருநகர் 5 ஆம் மாடிப்பகுதியைச் சேர்ந்த எம்.சரத்குமார் (வயது 23) என்ற இளைஞரே இவ்வாறு அநாகரீகமாக ஆணுறுப்பிணை காட்டியுள்ளார்.

கடந்த புதன்கிழமை குறித்த சிறுமி பாடசாலைக்கு சென்று வீடு திரும்பும் போதே குறித்த இளைஞர் ஆணுறுப்பினை காட்டியுள்ளார்.

குறித்த சிறுமி பெற்றோருக்கு கூறியதை தொடர்ந்து பெற்றோர் யாழ். பொலிஸ் நிலைய சிறுவர் பெண்கள் பிரிவு பொலிஸ் பிரிவில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

அந்த முறைப்பாட்டின் பிரகாரம் குறித்த இளைஞர் கைதுசெய்யப்பட்டு நேற்று யாழ்.குருநகர் சிறுவர் நீதி மன்றில் ஆஜர்ப்படுத்திய போது, குறித்த இளைஞரை ஆகஸ்ட் மாதம் 08 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக் குமாறு சிறுவர் நீதிமன்ற நீதிபதி க.ஜீவராணி உத்தரவிட்டுள்ளார். (25)

# இலங்கைப் பெண் கொலை குவைத் பிரஜை கைது

குவைத், சல்மியா பகுதியிலுள்ள வீட்டில் இலங்கையரான தனது முன்னாள் மனைவியை குவைத் பிரஜையொருவர் தலையில் பலமுறை அடித்துக் கொலை செய்துள்ளதாக அராப நியூஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த குவைத் பிரஜை, தனது முன்னாள் மனைவியுடன் தொடர்புகொண்டு தமது பிரச்சினைகள் பற்றி கதைப்பதற்கு தனது வீட்டுக்கு வரும்படி அழைத்துள்ளார்.

அப்போது இவர்களது உரையாடல் பெரும் தர்க்கமாக மாறி சந்தேகநபர் பெண்ணின் தலையில் பலமுறை அடிக்க, அப்பெண் மயங்கிவிட்டார்.

சந்தேகநபர் உள்நாட்டமைச்சின் நடவடிக்கை அறைக்கு விடயத்தைக் கூறி துணை மருத்துவர்களும், பாதுகாப்பு துறையினரும் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். ஆனால், அவர்கள் பாதிக்கப்பட்டவரை சோதித்த போது அவர் இறந்து போயிருந்தார். அதனையடுத்து, அப்பெண்ணின் உடல் புலனாய்வு மருத்துவ திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இதனையடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டு சல்மியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இன்னுமொரு சம்பவத்தில் பஹீல் இரண்டு இந்திய பிரஜைகள், அவர்களுள் ஒருவரின் இலங்கையரான மனைவியை கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அச் செய்திச் சேவை மேலும் தெரிவித்துள்ளது.

# குடிநீர் தட்டுப்பாடு கிளிநொச்சியில் உச்சம்

## சிக்கனமாக பயன்படுத்த அரச அதிபர் அறிவுரை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டம், குடிநீருக்காக பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கும் மாவட்டமாக மாறி வருகின்றதாகவும் நீரினைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது தொடர்பில் மக்கள் கவனம் எடுத்துச் செயற்பட வேண்டும் என கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் நேற்று வியாழக் கிழமை கேட்டுக்கொண்டார்.

கிளிநொச்சி மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே மாவட்டச் செயலாளர் இவ்வாறு கேட்டுக் கொண்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், கிளிநொச்சி மாவட்டம் தற்போது நிலவும் வறட்சியினால், நீரிற்காக பெருமளவு நெருக்கடியினை எதிர்நோக்கி வரும் மாவட்டமாக மாறிவருகின்றது. இது தொடர் பில் கவனம் எடுத்து நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலைக்கு அனைவரும் தள்ளப்பட்டுள்ளோம் என அவர் மேலும் கூறினார்

இந்தக் கூட்டத்தில், கடந்த கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பிலான மீளாய்வுகள் இடம்பெற்றன. அத்துடன், கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாய நடவடிக்கைகள் தொடர்பிலும், விவசாயம் சார்ந்த (நீர்ப்பாசனம், கமநலம், ஆராய்ச்சி, விலை அத்தாட்சி சேவை நிறுவனம்) ஸ்தாபனங்களின் செயற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள், ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள், விவசாயிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# தீயில் கருகிய கர்ப்பிணி மருத்துவமனையில் அனுமதி

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாப்பிலவு கிராமத்தில் வசித்துவரும் கர்ப்பிணித் தாயொருவர் தீக்காயங்களுடன் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மாவட்ட வைத்தியாசலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வைத்திய சாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

02 பிள்ளைகளின் தாயான (வயது 24) இவர், கடந்த புதன் கிழமை இரவு அயலவர் களின் உதவியுடன் மாஞ்சோலை பொது வைத்திய சாலையில் அனுமதிக் கப்பட்டார்.

இவரது இடுப்புக்கு மேல் பகுதி தீயினால் முழுமையாக எரிந்துள்ளதாக வைத்திய சாலைத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

# நீர்வேலியில் தீ விபத்து

யாழ்.நீர்வேலி வடக்கு சிறுப்பிட்டிப் பகுதியிலுள்ள கடையொன்றில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் கடையிலிருந்த 5000 ரூபாய் பெறுமதியான காகிதாதிகள் எரிந்துள்ளதாக அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

மின்னொழுக்கினால் ஏற்பட்டிருந்த இந்தத் தீ விபத்தில், உரிமையாளர் சாதுரியமாகச் செயற்பட்டு மின் விநியோகத்தினைத் துண்டித்ததின் மூலம் தீ கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.இதனால், கடையில் இருந்த பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் பாதுகாக்கப்பட்டுள்ளதாக அச்சுவேலிப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# சிறப்புச் சொற்பொழிவு

(திருகோணமலை)

வரலாற்று பிரசித்தி பெற்ற திருகோணமலை அருள்மிகு கங்குவேலி ஆதிசிவன் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தீர்த்தோற்சவத்தினை முன்னிட்டு இன்று இரவு 09.30 மணிக்கு

பிரபல ஆன்மீக சொற்பொழிவாளரும் சைவப்புலவருமாகிய பண்டிதர் பொன்.சுகந்தனின் "மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்" எனும் தலைப்பில் சிறப்புச்சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூலை 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.